# அரங்கம்
செய்திகள்
தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்








வார இதழ் - இலவசம்
www.arangamnews.com
வெள்ளி, ஆனி 01, 2018. இதழ் - 15




## கிழக்கு மாகாணக் கடலில் பெற்றோலிய ஆய்வுக்காக அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கிழக்கு மாகாணத்தில் உள்ள கடல் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம், அமெரிக்க தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யவுள்ளது.

இதற்கான முன்னோடி உடன்படிக்கை ஒன்றும் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கிழக்கு கடற்பிரதேசத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் இருப்பது தொடர்பாக குறித்த அமெரிக்க நிறுவனத்தின் உயர்மட்ட ஆய்வாளர் குழு ஒன்று சமீபத்தில் கிழக்கு பிரதேசத்திற்குச் சென்று, நிலைமைகளை அறிந்துள்ளதாக உயர்மட்ட தகவல்கள் கூறுகின்றன.

ஸ்லெம்பெர்ஜேர் என்ற அமெரிக்காவின் எண்ணெய் வயல் சேவைகள் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஈஸ்டர்ன் எக்கோ டீஎம்சிசி நிறுவனத்துடன் இது தொடர்பான உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது.

முன்னதாக கிழக்கு கடலில் எண்ணெய் வள ஆய்வுகளை நடத்தும் நோக்கில் டோட்டல் என்ற பிரெஞ்சு நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தது. ஆனாலும் போர்க்கால சூழல் என்பதால் பிரெஞ்சு நிறுவனம் அந்த முயற்சியை கைவிட்டிருந்தது.




இந்த நிலையில் அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்தாகும் என வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். அதேவேளை 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இந்த விபரம் குறிப்பிடப்படும் என நிதியமைச்சின் தகவல்களும் கூறுகின்றன.

## 20க்கு எதிராக வாக்களிக்க பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் முடிவு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் 20ஆவது திருத்த யோசனையை எதிர்த்து வாக்களிப்பதற்கு தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸநாயக்க எம்.பி இந்த 20ஆவது திருத்த


தொடர்ச்சி... (பக்கம் -03 )


## நடிகர் ரஜினி மீது செய்தியாளர் கண்டனம்

சென்னை: விமான நிலையத்தில் பத்திரிக்கையாளர்களிடம் கோபாவேசமாக பேசிய நடிகர் ரஜினிகாந்த் மன்னிப்பு கேட்க வேண்டும் என சென்னை பத்திரிக்கையாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர்களை புதனன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய நடிகர் ரஜினிகாந்த், ஸ்டெர்லைட் போராட்டத்தில் வன்முறை வெடித்தற்கு சமூக விரோதிகளே காரணம் என்றார்.



அவரது கருத்துக்கு எதிர்ப்பு எழுந்ததை தொடர்ந்து சென்னை திரும்பிய


தொடர்ச்சி... (பக்கம் -02 )








# தேயிலைச் சாற்றை பயன்படுத்தி புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க முடியும்



தேயிலை இலைச் சாற்றின் துணையுடன் பெறப்பட்ட மிகச்சிறிய நுண்ணிய அளவிலான "குவாண்டம் துகள்கள்" (Quantum Dots) நுரையீரல் புற்று நோய் செல்களை அழிக்கும் திறன் உடையவை என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

பிரித்தானியாவின் சுவான்சி பல்கலைக் கழகமும், இந்தியாவில் உள்ள ஆராய்ச்சியாளர்களும் இணைந்து "குவாண்டம் துகள்"களைக் கொண்டு புற்று நோய் செல்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்று மேற்கொண்ட ஆய்வில், குவாண்டம் துகள்கள் புற்று நோய் செல்களை அழிக்கும் திறனையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது என்று தற்செயலாகக் கண்டறிந்துள்ளனர்.

குறிப்பாக, தேயிலை சாற்றினைச் பரப்பு மாற்றியாக பயன்படுத்தி பெறப்பட்ட காட்மியம் சல்பைடு குவாண்டம் துகள்கள் புற்று நோய்க் கிருமிகளை 80 சதவிகிதம் அழிக்கவல்லவை என்ற ஆச்சரியமூட்டும் முடிவுகளை ஆய்வக அளவில் கண்டுபிடித்துள்ளனர். அதே நேரம், இந்த குவாண்டம் துகள்களை மேலும் முறையாக அடுத்த பல நிலைகளில் ஆய்வு செய்து, மேம்படுத்தி மனிதர்களின் சிகிசைக்கு பயன்படுத்துவதற்கு இன்னும் பல வருடங்கள் ஆகும் என்று இந்த ஆராய்ச்சிக் குழு தெரிவிக்கிறது.


## அரங்கத்தில் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உங்கள் குழந்தைகள் மற்றும் இனிய உறவுகளின் பிறந்தநாள் வாழ்த்துக்களை அரங்கம் செய்திகள் பத்திரிகையில் பிரசுரிக்க



ரூபாய் 2000 மாத்திரமே
விரும்பியவர்கள்
தொடர்பு கொள்ளவும்
071 399 9091




## தங்க பிஸ்கட்டுகளை கடத்திய போலந்துப் பிரஜை கைது

சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுகளை கடத்தி வந்த போலாந்துப் பிரஜை ஒருவர் வியாழனன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

காலை 8.50 மணியளவில் துபாயில் இருந்து வந்த விமானத்தில் சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்துள்ளார்.

அவரிடம் இருந்து 10 கிலோ கிராம் நிறையுடைய 100 தங்க பிஸ்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுக்களின் பெறுமதி சுமார் 65 மில்லியன் என விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## நடிகர் ரஜினி மீது செய்தியாளர் கண்டனம்

தொடர்ச்சி...

ரஜினியிடம் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் அதுகுறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு கோபத்துடன் ஆவேசமாக பதிலளித்தார் ரஜினிகாந்த். செய்தியாளர்கள் தொடர்ந்து கேள்விக் கணைகளை தொடுக்கவே கடும் கோபமடைந்த ரஜினிகாந்த், 'ஏ' என ஒருமையில் கத்தியபடி, வேறு ஏதாவது கேள்வி இருக்கிறதா என செய்தியாளர்களை மிரட்டிவிட்டு பிரஸ்மீட்டை பாதியிலேயே முடித்துக்கொண்டு வேகமாக சென்றார்.

பத்திரிக்கையாளர்களை மிரட்டும் தொனியில் ரஜினி பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. செய்தியாளர்களை ரஜினி மிரட்டும் வகையில் ஒருமையில் பேசியதற்கு சென்னை பத்திரிக்கையாளர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை பத்திரிக்கையாளர் சங்கம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், பொதுவெளிக்கு வருபவர்களிடம் கேள்விகள் கேட்பதும், அதனை மக்களுக்குத் தெரிவிப்பதும் செய்தியாளர்களின் பணி. இதற்காக மிரட்டுவது, ஒருமையில் பேசுவது போன்ற அநாகரிக செயல்களை அனுமதிக்க முடியாது. இப்படிப் பேசியதற்காக நடிகர் ரஜினி காந்த் மன்னிப்புக் கேட்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

## ஆபத்தான கடலின் மூலம் தாயகம் திரும்பும் இலங்கை அகதிகள்

தமிழகத்தில் உள்ள அகதி முகாமில் இருந்த மன்னார் உயிழங்குளத்தைச் சேர்ந்த 6 அகதிகள் புதன்கிழமை படகில் கடல் வழியாக இலங்கை திரும்பிய போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் இருந்து போரின் காரணமாக இடம்பெயர்ந்து படகு மூலம் தமிழகத்திற்குச் சென்று தங்கியிருக்கும் ஈழ அகதிகள் தமிழ்நாடு அகதி முகாமின் நெருக்கடி மற்றும் விமானம் மூலம் தாயகம் திரும்புவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக தமது இலகு பயணத்திற்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் புதனன்று இரவு ஓர் படகில் இரு சிறுவர்கள், ஓர் பெண் உட்பட ஆறுபேர் படகு மூலம் தாயகம் திரும்பிய போது இலங்கை கடற்பரப்புக்குள் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களை ஏற்றிவந்த இரு படகோட்டிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஆறுபேர் மட்டுமே தாயகம் திரும்பிய இலங்கை அகதிகள் என தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்தவர்களை கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் காங்கேசன்துறை போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இதனிடையே, இம்மாதத்தில் இதுவரை 19 பேர் இவ்வாறு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தாயகம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் திடீர் எரிபொருள் தட்டுப்பாடு?

நாட்டில் எதிர்வரும் தினங்களில் பெற்றோல் மற்றும் டீசல் எரிபொருள் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.
போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்துமாறு கோரி எரிபொருள் விநியோக தனியார் பவுஸர் உரிமையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.
எரிபொருள் கட்டணம் அதிகரிக்கப்பட்டதனையடுத்து தமது போக்குவரத்துக் கட்டணத்தையும் அதிகரிக்குமாறு கோரி இதுவரை மூன்று வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.
அதற்கு இதுவரையில் உரிய முறையில் பதில் கிடைக்காமையின் காரணமாகவே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக எரிபொருள் விநியோக தனியார் பவுஸர் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.
இந்த பணிபகிஷ்கரிப்பு நடத்தப்பட்டால் நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகமும் தடைபடும் என்பதோடு எரிபொருளுக்கான பாரிய தட்டுப்பாடும் ஏற்படும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.
பெரும்பாலும் இந்த வார இறுதியில் அல்லது அடுத்த வாரமளவில் இந்த பணிபகிஷ்கரிப்பை நடத்த உத்தேசித்திருப்பதாக சாந்த சில்வா குறிப்பிட்டுள்ளார்.
இதற்கிடையில் அதிகாரிகள் சாதகமான பதிலை வழங்கினால் தீர்மானம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

## சீரரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபரால் நிவாரணப் பொருள்கள் சேகரிப்பு

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நிவாரணப் பொருள்களை சேகரிக்குமாறு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்கள், மற்றும் அரச திணைக்களத் தலைவர்களுக்கும் மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நிவாரண பொருட்களை சேகரிக்கும் திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்ட செயலகம் ஒழுங்கு செய்துள்ளது.

பிரதேச பொது மக்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தன்னார்வலர்களிடமிருந்து நிதியுதவி, மற்றும் உலர் உணவுப் பொருட்கள், புதிய ஆடைகள், பால்மா பக்கட்டுக்கள், குடிநீர் போத்தல்கள் போன்ற நிவாரணப் பொருள்களை சேகரித்து மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 2018.06.01ம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறும் பழுதடையக் கூடிய பொருள்களைச் சேகரிக்க வேண்டாம் என்றும் மாவட்ட அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

நிவாரணப் பொருட்களைக் கையளிப்பது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, மாவட்ட செயலகம், மட்டக்களப்பு தொலைபேசி இல. 065-2227701, 0773957885 மற்றும் நிருவாக உத்தியோகத்தர், மாவட்ட செயலகம் மட்டக்களப்பு 065-2222365, 0779000880 ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி பொருட்களைக் கையளிக்க முடியுமென மட்டக்களப்பு மாவட்ட அரச ஊடகப்பிரிவுத் தகவல் அறிவிக்கின்றது.



## வவுனியாவில் 8மாதக் குழந்தை கடத்தல்

வியாழனன்று அதிகாலை 2 மணியளவில் வவுனியா குட்செட் வீதி 1 ஆம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றினுள் புகுந்த மர்ம கும்பல் தாயின் அரவணைப்பிலிருந்த 8 மாத ஆண்குழந்தையான வானிஷன் எனும் குழந்தையை கடத்திச் சென்றுள்ளனர்.

வெள்ளை வேன் ஒன்றில் வந்த ஆறு பேர் கொண்ட கும்பலாலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

இதேவேளை குறித்த குழந்தையின் தந்தை வெளிநாடு ஒன்றில் வசித்து வருவதாகவும் தாய்க்கும் தந்தைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருப்பதாகவும் இருவரும் பிரிந்து வாழ்வதுடன் தந்தை குழந்தையை கடத்துவதாக எச்சரிக்கை விடுத்திருந்தார் எனவும் குழந்தையின் தாயார் குறிப்பிட்டிருந்தார்.

மோப்ப நாய் கொண்டு தேடுதலையும் விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 20க்கு எதிராக வாக்களிக்க பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் முடிவு

தொடர்ச்சி...

யோசனையை சமர்பித்துள்ளார்.

இது தொடர்பான விவாதம் அடுத்த அமர்வுகளில் நடைபெறவுள்ள போதிலும் திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணி உள்ளிட்ட கட்சிகள் இதற்கு எதிராக வாக்களிக்க முடிவெடுத்திருக்கின்றன.

எனினும் தமிழ்க் கட்சிகள் 20ஆவது யோசனையை எதிர்ப்பதா? ஆதரிப்பதா என்பது தொடர்பாக பலதரப்பு கலந்துரையாடல்களை அண்மைக்காலமாக நடத்திவந்திருந்தன.

இதன்படி அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியூதீன் ஆகியோரது கட்சிகள் இந்த யோசனையை எதிர்த்து வாக்களிப்பதற்கு தீர்மானித்துள்ளன.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இதற்கெதிராக வாக்களிக்கும் முடிவை எடுத்துள்ளது.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் இந்த 20ஆவது திருத்த யோசனையை எதிர்ப்பதா? அல்லது ஆதரிப்பதா என்ற முடிவை இதுவரை எடுக்கவில்லை என்று அக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

இருந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் 20ஆவது திருத்த யோசனையை எதிர்த்து வாக்களிக்கும் முடிவில் இருப்பதாக அறிய முடிகின்றது.

எவ்வாறாயினும் 20ஆவது திருத்த யோசனை மீதான விவாதம் இடம்பெறும்போதே இதுகுறித்த இறுதிமுடிவை எடுப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பில் புதிய கட்சி




புலம்பெயர் அமைப்புகளிடம் தமிழ் மக்களுக்கென நிதி திரட்டி மாளிகை கட்டிய அரசியல்வாதி மட்டக்களப்பில் உள்ளார். ஆனால் தமிழ் கிராமங்கள் இன்னும் இருளில் மூழ்கிக் காணப்படுகின்ற என எமது தலைமுறை கட்சித் தலைவர் சிதம்பரம் கருணாநிதி தெரிவித்தார்.

நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப "எமது தலைமுறை கட்சி" என்ற பெயரில் புதியதொரு கட்சி மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு கொம்மாதுறை நிருத்தா ஹோட்டலில் கட்சித் தலைவர் சிதம்பரம் கருணாநிதியின் ஏற்பாட்டில் ஊகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
கட்சியின் பொதுச் செயலாளராக தயாளன் அல்போன்ஸ் மற்றும் பொருளாளராக வேலுப்பிள்ளை சுமங்களா நியமிக்கப்பட்டுள்ளனர்.
அவர் தொடர்ந்து பேசுகையில் - பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தைக் கடக்கும் வழியில் உள்ள மட்டக்களப்பு நகர் உட்பட தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் மிகவும் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன. ஏனையவை மிகவும் அழகாகவும் வெளிச்சமாக காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆனால் இந்த அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. ஆனால் அவர்கள் வசந்த மாளிகை கட்டி ஆடம்பரமாக வாழ்கின்றனர்.
இலங்கையில் எந்த நகர பகுதிகளிலும் இல்லாதவாறு குடிசை வீடுகள் மலசலகூடங்கள் இல்லாத நிலை மட்டக்களப்பில் உள்ளது.

இலங்கையில் நான் அறிந்து 9 மாகாணங்கள் உள்ளன அவற்றுக்கொன தனித்தனி சபைகள் முதலமைச்சர்கள் உள்ளார்கள். வடக்கு கிழக்கு இணைக்க வேண்டும் என்பது அறிவீனமான வாதம், வடக்கு கிடக்கில் இரண்டு சிறுபான்மை சமூக முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கிடைக்க வேண்டிய வாய்ப்பை இந்த இணைப்புக் கோரிக்கை என்பது இல்லாதொழித்துவிடும்.

முடிவுறாமலும், எதுவித தீர்வுமில்லாமலும் தொடர்கதையாகியுள்ள நாட்டு மக்களின் அநேக பிரச்சினைகளுக்கு தீர்வு

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## அமெரிக்க - வடகொரிய அதிபர்களின் பேச்சை உறுதிப்படுத்த வடகொரிய அதிகாரி அமெரிக்கா சென்றார்



வடகொரியா அதிபர் கிம் ஜாங்-உன்னின் முக்கிய உதவியாளரான ஜெனரல் கிம் யாங்-சோல், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் கிம் இடையே நடக்கத் திட்டமிடப்பட்டுள்ள சந்திப்பு குறித்து பேச்சு நடத்த அமெரிக்கா சென்றுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுச் செயலர் மைக் பாம்பேயோவை அவர் சந்தித்துப் பேசினார். வடகொரியாவைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் அமெரிக்கா வருவது சுமார் 20 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.

ஜூன் 12 அன்று சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சந்திப்பில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று டிரம்ப் முன்னதாக அறிவித்திருந்தார்.

எனினும், திட்டமிடப்பட்டபடி அந்த சந்திப்பு நடைபெறுவதற்காக இரு தரப்பினரும் மீண்டும் புதிதாக முயற்சி செய்து வருகின்றனர்.

நியூயார்க்கில் ஐ.நா தலைமையகம் அருகே, புதன்கிழமை மாலை நடைபெற்ற அந்த சந்திப்புக்கு பாம்பேயோ மற்றும் ஜெனரல் கிம் ஆகியோர் தனித்தனியாக வந்தனர்.

சந்திப்புக்கு பின் பேசிய பாம்பேயோ, அமெரிக்க மாட்டிறைச்சியுடன் அந்த இரவு விருந்து சிறப்பாக இருந்ததாகத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் கடந்த வாரத்தில் 176 பேர் டெங்கினால் பாதிப்பு





மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு நோயைக்கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார சேவைகள் திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை தற்போது எடுத்து வருகின்றது.

இதற்கமைய அரச பணியார்களை இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தும் பொருட்டு விழிப்பூட்டும் செயலமர்வொன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி கிரேஸ் நவரட்ணராஜா, மாவட்ட தொற்றா நோய் தடுப்பு அதிகாரி டாக்டர் கே.நவலோஜிதன், மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதன் உட்பட அரச பணியாளர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

இவ்வருடத்தில் இதுவரை 2876 பேருக்கு டெங்கு தொற்றியது

இதேவேளை, இந்த மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கங்கள் பற்றி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல் தருகையில் இன்றுவரை இவ்வருடத்தில் 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 2876பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், கடந்த வாரம் மாத்திரம் 176 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகியிருப்பது இனங்காணப்பட்டுள்ளதாகவும் மண்முனை வடக்கு, ஏறாவூர் பற்று, கோரளைப்பற்று மேற்கு, கோரளைப்பற்று மத்தி, மற்றும் மண்முனை தென் எருவில் பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

காத்தான்குடி, மண்முனை தென் மேற்கு வைத்திய அதிகாரி பிரிவுகளில் மாத்திரம் கடந்த வாரம் எவ்வித டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமாரின் ஆலோசனையின் பேரில், அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் உதவிகளையும் பெற்றுக் கொண்டு இம்மாவட்டத்தில் டெங்கு நோயை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி கிரேஸ் நவரட்ணராஜா தெரிவித்துள்ளார்.



# “வீழ்ந்தோம்” என நினைத்தவருக்கு “மாட்டோம்” எனக்கூறி எழுவோம்

## புனித மிக்கேலின் கூடைப்பந்து மீண்டும் மிளிரும்!

“மீண்டும் மிளிருமா புனித மிக்கேலின் கூடைப்பந்து?” என்ற தலைப்பில் அரங்கம் செய்திகளின் முதலாவது இதழில் நாங்கள் எழுதிய கட்டுரை சாதகமான பலன்களுக்கு வழி செய்துள்ளதாக தெரிகிறது.

அண்மையில் நடந்த பாடசாலையின் அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. “இப்படியாக பத்திரிகையில், அதன் சமூக வலைத்தளத்தில் புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப்பந்து பிந்தங்கியமை குறித்து வந்திருக்கிறது. ஆகவே அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறப்பட்டுள்ளது.

கூடைப்பந்து விடயத்தில் தாம் ஏற்கனவே இரு பயிற்சியாளர்களைப் போட்டு அதனை ஊக்குவிக்க முயற்சி எடுத்துள்ளதாக கூறுகிறார் பாடசாலை அதிபர் பயஸ் ஆனந்தராஜா.

அதேபோல இதற்கு ஒருபடி மேலாக ஜெசுவிட் திருச்சபை இந்த கூடைப்பந்து விடயத்தில் உதவ முன்வரவேண்டும் என்று பழைய மாணவர்கள் வேண்டுவதாக கூறுகிறார், பழைய மாணவர் அமைப்பின் செயலாளரான இக்னேஸியஸ் சில்வஸ்டர்.

விரைவில் இந்த விடயத்தில் சாதகமான பயன்கள் கிடைக்கத் தொடங்கும் என்று அவர் உறுதியாகக் கூறுகிறார்.

இதில், பாராட்டப்பட வேண்டியவை, பிறருக்கு படிப்பினையாகக் கூடியவை எனச் சில அம்சங்கள் உண்டு.

புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப்பந்து சற்று பின்னடைந்துள்ளது என்பதை எமது கட்டுரையில் நாம் கூறியிருந்தோம். அதனை ஒரு சாதகமான விமர்சனமாக முன்வைத்திருந்தோம். எவரையும் தனிமைப்படுத்தி நாம் விமர்சிக்கவில்லை. இருக்கக்கூடிய நிலைமையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து உரியவர்களின் கருத்துக்களை பரிந்துரைத்திருந்தோம்.

இங்கு முதலாவது முக்கிய அம்சம், புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் இந்த விமர்சனத்தை சாதகமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகும். அதற்காகவே வணக்கத்துக்குரிய தந்தை போல் அடிகளார் போன்றவர்களின் கருத்துக்களை அதில் நாம் சேர்த்திருந்தோம். அது நல்ல பலனைத் தந்துள்ளது. உண்மையில் விமர்சனத்தை தவறாக புரிந்துகொள்ளாமல் உள்ளதை உள்ளபடி எடுத்துக்கொள்வது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

அடுத்தது, அதனைவிட மிக முக்கியமானது, பாடசாலைச் சமூகம், கூடைப்பந்தில் பாடசாலை பின்னடைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொண்டிருப்பது. உண்மையில் நாம் பின்னடைந்துள்ளோம் என்பதை புரிந்துகொள்வதே அடுத்த கட்ட முன்னேற்றத்துக்கான முதலாவது படி. அதனை நாம் சரியாக உணர்ந்தாலே வெற்றிகள் நம்மைத் தேடிவரத் தொடங்கிவிடும்.

உண்மையில் இந்த புனித மிக்கேல் கல்லூரிச் சமூகத்தின் செயற்பாடு இங்குள்ள எமது தமிழர் அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அரசியல்வாதிகளுக்கு மாத்திரமல்ல, எமது உண்மையான நிலையை சரியாக உணராமல், மாயை நம்பிக்கொண்டிருக்கும் பொதுமக்களுக்கும் இது ஒரு படிப்பினைதான்.

நாம் தோற்றுவிட்டோம், வீழ்ந்துவிட்டோம் என்பதை சரியாக உணரும்போதுதான், நாம் எழுந்திருக்கவும், அடுத்த அடியை வெற்றிக்கோட்டை அல்லது எமது இலக்கை நோக்கி எடுத்து வைக்கவும் முடியும்.

போர் ஒன்று நடந்தது, அதற்கான பாதையை நாமும் தேர்ந்தெடுத்தோம் அதில் படுபயங்கரமான தோல்வியை

**பூபாலரட்ணம் சீவகன்**

சந்தித்தோம் என்பதை உணரும் போது, ஏற்கும் போதுதான், அதில் இருந்து அடுத்த கட்டத்துக்குச் செல்ல என்ன வழி என்பதை சிந்திக்க முடியும்.

அது அல்லாமல், இன்னும் நாங்கள் தோற்கவில்லை, இனியும் இதுமாத்திரந்தான் வழி என்ற மாயையில் இருந்தால், நாம் வந்த வழியை மீள்பரிசீலனை செய்யாமல் இருந்தால், அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியாது. மீண்டும் பாதாளத்தில்தான் விழ வேண்டும்.

எமது தமிழர் சமூகம் உண்மையில் இந்த கட்டத்தில்தான் நிற்கிறது.

நாம் வீழ்ந்துவிட்டோம், வந்த வழியில் பிழை இருக்கிறது, அந்த வழி தற்போதைய சூழலுக்கு பொருந்தவில்லை என்பதை புரிந்துகொண்டால் மாத்திரமே, மாற்று வழியை சித்திக்க முடியும், அந்த வழியில் சரியாக செயற்பட முடியும். அதற்கு அரசியல் கட்சிகள் வழி காட்ட வேண்டுமே ஒழிய. பொதுமக்களுக்கு வெறுமனே உணர்ச்சியை தூண்டும் வகையில் மாத்திரம் பேசி, சுயலாப வாக்கு அரசியலை நடத்தக்கூடாது.

பொதுவாக இங்குள்ள பிரச்சினை, ஒருவர் விமர்சித்தால், அவரது விமர்சனம் சரியா என்று பாராமல், அவரின் பின்னணி என்னவோ, அவர் எமது எதிரியோ என்று பார்க்கும் பழக்கம் இங்கு வழக்கமாகியுள்ளது. எந்த அரசியல் கட்சியை விமர்சித்தாலும் அவர்கள் அதில் உள்ள யதார்த்தத்தை பொருட்படுத்தாமல், விமர்சிப்பவரை துரோகியாக்க என்ன வழி என்று பார்க்கும் நிலையே இங்கு காணப்படுகின்றது. அது அறமற்ற அரசியல். போகும் வழி பிழைத்தால் வழியை மாற்ற வேண்டும் என்பதுதான் யதார்த்த அரசியல். போகாத இடத்துக்கு மக்களுக்கு பொய்யாக வழிகாட்டிக்கொண்டு இருந்து அவர்களை படுகுழியில் தள்ளுவதல்ல அரசியல் அறம்.

இந்த விடயத்தை புனித மிக்கேல் கல்லூரிச் சமூகத்திடம் இருந்து தமிழ் அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ள வேண்டும்.



சரி, மீண்டும் மிளிருமா புனித மிக்கேலின் கூடைபந்து என்ற பிரச்சினைக்கு வருவோம். பிரச்சினை உணரப்பட்டிருக்கிறது. அதுவே சரியான திட்டமிடலுக்கு வழி செய்யும். அதுவே இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லும்.

ஆரம்பத்தில் அசந்தாலும் இறுதியில் இலக்கை எட்டொவோம். அது புனித மிக்கேல் கல்லூரிக்கு புதிய விடயமல்ல. பல விளையாட்டுப் போட்டிகளில் அக்கல்லூரி அதனை செய்து காட்டியுள்ளது.

இங்கு போட்டியில் அல்லது சுற்றுப்போட்டியில் முதலாவதாக வருவதல்ல பிரச்சினை. தோற்றாலும், வீராதி வீரர்களோடு மோதியிருக்கிறோம் என்று எதிரணியை உணரச் செய்வதுதான் புனித மிக்கேலின் பாணி.

முன்பெல்லாம், நாங்கள் அங்கு கற்ற காலத்தில் ஏதாவது சுற்றுப்போட்டிக்கு எமது அணி புறப்பட்டுச் செல்லும் போது அப்போதைய அதிபர் கமலநாதன் அவர்கள், “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?” என்று வாழ்த்தி அனுப்புவார். அதே அணிகளின் பாரம்பரியத்தில் வந்த மாணவர்கள்தான் இன்றும் அங்கு கற்கிறார்கள்.

மீண்டும் மிளிர்வோம்.

“வீழ்ந்தோம்” என்று நினைத்தவருக்கு “மாட்டோம்” எனக் கூறி எழுந்து நிற்போம்.

இது மீண்டும் தொடங்கும் மிடுக்கு!

அரங்கம்
செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு
அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

| மட்டக்களப்பு | கொழும்பு |
|---|---|
| ARANGAM 071 399 9091 070 300 9001 | ARANGAM arangamads@gmail.com 070 345 6800 071 399 9091 |
| EAST LINK AGENCY POST OFFICE 077 180 1400 196,TRINCO ROAD,BATTICALOA | |
| SHALOM DIGITAL STUDIO 077 632 1079 63,ST ANTONIS LANE,BATTICALOA | |
| DINA ADVERTISING 077 712 0809 183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA | |
| ST.ANTONY 077 470 1373 MAIN STREET, VALAICHCHENAI | SIVA 077 503 8997 077 721 7341 |
| TERRY 077 618 5 209 | S.K. RAMESH 077 360 0161 65,MANNING PLACE WELLAWATTA |

UK +44 776 935 409 +44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK



# மாட்டிறைச்சிக்கு தடை கோருவது ஒரு பாசிச நடவடிக்கையே

## முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் தமிழர்களில் இருந்து பிரித்துவைக்கும் முயற்சி



**கருணாகரன்**

இரண்டு மாதங்களுக்கு முதல், எங்கள் தெரு நீளத்துக்கு “சிவசேனை” என்ற அடிக்குறிப்போடு மதமாற்றத்தை எதிர்க்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இதைப்பார்த்த நண்பர் ஒருவர் “எங்கள் ஊருக்கும் விசச்சேனை வந்திட்டுது” என்றார். முகத்தில் வருத்தம் தெரிந்தது. அவர் எப்பொழுதும் “சிவசேனை“யை “விசச்சேனை” என்றே குறிப்பிடுவார்.

“மத மாற்றுத்துக்கான அமைப்புகள் செயற்பட்டால், அந்த மதமாற்றத்தைத்

**நெற்றியில் விபூதியோடும் சந்தனப் பொட்டோடும் மாட்டிறைச்சிக்காக க்யூவில் நிற்கும் “ருஸிரிஷி”களைத் தினமும் யாரும் பார்க்க முடியும்.**

தடுப்பதற்கான தரப்புகளும் உருவாகுமல்லவா! அப்படி உருவாகும் அமைப்புகள் அதற்குரிய தீவிரத்துடன்தான் செயற்படும். இது வழமை. இதிலே நாம் எப்படிக் குற்றம் காண முடியும்?” என்று அவரிடம் கேட்டேன்.

“இருக்கலாம். ஆனால், இதனுடைய வளர்ச்சி பல உள் மோதல்களிலே போய் முடியும். வேண்டுமானால் இருந்து பாருங்கள், கூடிய கெதியில் சமூக மோதல்கள் உருவாகும்” என்றார் நண்பர். “மதரீதியான மோதல்கள் அவ்வளவு எளிதாகத் தீவிரமடையும் என்று நான் நம்பவில்லை. இப்பொழுதும் இதே நம்பிக்கையில்தான் இருக்கிறேன்” என்றேன் அவரிடம். அதற்குமேல் இதைப் பற்றி இருவரும் பேசவில்லை. ஆனால், “மாட்டிறைச்சிக் கடைகளை மூட வேணும். இறைச்சிக்காக மாடு வெட்டுவதைத் தடுக்க வேணும். எங்கள் முன்னோர்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டிருக்கிறார்களா?...” என்ற கேள்விகளோடு கடந்த சில தினங்களுக்கு முன்பு, கோபம் கொந்தளிக்கப் பேசியிருந்தார் மறவன்புலவு சச்சிதானந்தன்.

சச்சிதானந்தனின் இந்தப் பேச்சையிட்டு இணைய உலகமும் சமூக வலைத்தளங்களும் கொதிப்படைந்துள்ளன. பத்திரிகைகளில் இதுவரையில் எந்தவிதமான உணர்சிகளையும் காணவில்லை.

சச்சிதானந்தன் ஐக்கிய நாடுகள் உணவு – வேளாண் கழகத்தில் ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் கடல்சார் உயிரியலில் பட்டம் பெற்றவர். “காந்தளகம்” என்ற பதிப்பகத்தை உருவாக்கி, அதன் மூலமாக தமிழ்மொழி, தமிழர் வரலாறு, ஈழம், ஈழப்பிரச்சினை போன்றவற்றை மையப்படுத்திப் பல நூல்களைப் பதிப்பித்தவர். இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர். தற்போது “சிவசேனை”யின் இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதியாகச் செயற்படுகிறார்.

சச்சிதானந்தனுடைய கல்வி, அவர் வகித்த பதவிகள், கடந்த காலச் செயற்பாடுகளின் வழியாக தமிழ்ச்சமூகத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் எல்லாம் அவருக்குப் பெரு மதிப்பைக் கொடுத்திருந்தன. ஆனால், தற்போது அவர் சிவசேனையின் பிரதிநிதியாகத் தன்னை அடையாளம் காட்டத் தொடங்கியதிலிருந்து இவற்றைக் கலைத்துப் போடுமளவுக்குக் கடுமையான விமர்சனங்கள் அவரைச் சுற்றி உருவாகியுள்ளன.

அதிலும் இந்த “மாட்டிறைச்சித் தடை” விவகாரம் சச்சிதானந்தனைப் பற்றிய விக்கி பீடியாப் பதிவையே மாற்றி விட்டது. “இலங்கை சிவசேனையின் தலைவராக விளங்கும் இவர்

**உணவும் உடையும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட தெரிவுக்கும் தேர்வுக்கும் உரியது. அவர்களுடைய ருஸி, அவரவருக்கான ரசனை என்பதெல்லாம் தனிப்பட்ட சுதந்திரம்.**

(சச்சிதானந்தன்) தெரிவித்த கருத்துகள் சில விமர்சனத்துக்குள்ளானது. குறிப்பாக “இலங்கை இந்து, பௌத்த பூமி. வேறு யாருக்கும் சொந்தமில்லை” போன்ற கருத்துகளால் விமர்சனத்துக்குள்ளாகினார். இவர் சமயங்கள் மத்தியில் தகாத சிந்தனைகளை உருவாக்கி இலங்கையில் மதக் கலவரத்தினை ஏற்படுத்துவதற்குத் துணைபோகிறார் என்ற குற்றச்சாட்டுக்கும் உள்ளாகியுள்ளார்” என்கிறது விக்கிபீடியா.

### முஸ்லிம்களை கிறிஸ்தவர்களை அந்நியப்படுத்தும் நடவடிக்கை

“இறைச்சிக்காக மாடுகளை வெட்டக்கூடாது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் (சைவ சமயத்தவர்களின்) வீடுகளில் மாட்டிறைச்சி சமைக்கப்பட்டதில்லை. மாட்டை

**மாட்டைப் புனித உருவாகக் கொள்வோர் அதைச் செய்யலாம். ஆனால் அதை ஏனையவர்களின் மீது ஏற்றிவிடுவது தவறு.**

இறைவனோடு இணைத்துப் பார்க்கும் மரபுக்கு எதிராக நாம் செயற்படக் கூடாது. இது இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமான நாடு” என்ற அறிவிப்புகளோடு சாவகச்சேரியில் நடத்தப்பட்ட போராட்டமும் சச்சிதானந்தனின் கருத்துகளும் சமூக நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன.

இந்த அறிவிப்புகள் எந்த வகையான பொதுப் பொறுப்புணர்வுமின்றி, முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் நேரடியாகவே புறக்கணித்து அந்நியப்படுத்துகின்றன. மாட்டிறைச்சியைச் சாப்பிடுவது தொடர்பான விசயத்தில் மட்டுமல்லாமல், “இலங்கை என்பது இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் மட்டுமே உரியது” என்று கூறுவது இலங்கையிலுள்ள ஏனைய சமூகத்தினரை நிராகரிப்பதாகும். அப்படி நிராகரிப்பதாக இருந்தால் இலங்கை பன்மைச் சமூகங்களின் நாடு என்று கருவதற்குச் சாத்தியமே இல்லை. இது ஒரு வகையில் பெரும்பான்மை மேலாதிக்கவாத நோக்கைக் கொண்ட சிந்தனையே! தமிழ் இந்துக்களும் சிங்கள பௌத்தர்களுமே இந்த நாட்டுக்குரியவர்கள். ஏனையவர்கள் அப்படியல்ல. முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் பிற – அந்நியப் பண்பாட்டுக்கும் மதச் செல்வாக்கிற்கும் உட்பட்டவர்கள் என்ற பயங்கர வெறுப்பை உமிழும் நோக்கிலானது. ஆகவே, முஸ்லிம்களின் மீதும் கிறிஸ்தவர்களின் மீதும் நேரடியாகவே அச்சுறுத்தல் – நிராகரிப்பு வாதம் - முன்வைக்கப்படுகிறது. சில சிங்கள பௌத்தக் கடும்போக்காளர்கள் ஏற்கனவே இதை முன்வைத்து முஸ்லிம்களை அச்சுறுத்தி வருகின்றனர். இப்பொழுது தமிழ்த்தரப்பிலிருந்தும் வலுமிக்க சக்திகள் இந்த எதிர்ப்புணர்வைப் பகிரங்கமாக வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன. இதன் எதிர்கால விளைவுகள் மிகப் பயங்கரமானவையாக இருக்கும்.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு மாட்டிறைச்சி மரபுசார் உணவு. கிறிஸ்தவர்களுக்குப் பண்டிகைக்காலச் சிறப்பு உணவுகளில் ஒன்று. பெரும்பாலான சைவ சமயத்தவர்களும் இன்று மாட்டிறைச்சியைச் சர்வசாதாரணமாகவே சாப்பிடுகிறார்கள். மாட்டிறைச்சி இல்லாத “கொத்து ரொட்டி”யை நினைத்துப் பார்க்கவே முடியாது. கோழி இறைச்சியில் ஆக்கப்படும் கொத்து ரொட்டிக்கும் மாட்டு இறைச்சிக் கொத்து ரொட்டிக்கும் இடையிலுள்ள ருசிபேதம் உண்டு களித்தவர்களுக்கே தெரியும். இப்பொழுது வடக்குக் கிழக்கில் ஏறத்தாழ 1000 கடைகளுக்கு மேலான மாட்டிறைச்சிக் கடைகள் உள்ளன. இந்தக்கடைகளில் கணிசமானளவு வாடிக்கையாளர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். நெற்றியில் விபூதியோடும்



சந்தனப்பொட்டோடும் மாட்டிறைச்சிக்காக க்யூவில் நிற்கும் “ருஸிரிஷி”களைத் தினமும் யாரும் பார்க்க முடியும். அந்தளவுக்கு இன்று மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் மாறி விட்டன. முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சைவசமயத்தைப் பின்பற்றும் குடும்பங்களில் ஆண்கள்தான் மாட்டிறைச்சியைச் சாப்பிடும் வழக்கம் இருந்தது உண்மை. பெரும்பாலான வீடுகளில் பெண்கள் மாட்டிறைச்சியைச் சாப்பிடுவதில்லை. வீட்டுக்குள்ளே மாட்டிறைச்சியை எடுத்துக் கொள்ளாத ஒரு நிலையும் இருந்தது. எங்களுடைய குடும்பம் கூட அந்த நாட்களில் மாட்டிறைச்சியை மட்டுமல்ல, மாமிசத்தையே உண்ணாத சைவக் குடும்பமாகவே – மரக்கறி உணவில் மட்டுமே - தஞ்சமடைந்திருந்தது.

இன்று எல்லாமே மாறி விட்டன. 1980 களில் எங்களின் இரவுணவு அல்லது வெளியில் சாப்பிடுவதாக இருந்தால் கொத்து ரொட்டியும் மாட்டு றோசும் என்றாகியது. பிறகு வீடுகளில் விருந்தாளிகளுக்கே மாட்டிறைச்சிக் கறியை சமைத்துக் கொடுக்கும் அளவுக்கு உணவுப் பழக்கமும் பண்பாடும் மாறின. இப்பொழுது பிள்ளைகளின் நாக்கு வேறு விதமான ருஷிகளைத் தேடி, நாடி ஓடிக் கொண்டிருக்கிறது. முகுஊ, ஆஉ Donalds> chinese food என்ற பன்னாட்டுச் சங்கிலி உணவு நிறுவனங்களின் உணவுக்குப் பழகிக் கொண்டிருக்கிறது. இது எங்கள் சூழலில் உள்ள உணவுப் பொருட்களின் பயன்பாட்டுக்கு எதிரானது. மட்டுமல்ல, மரபுசார் உணவுப் பழக்கம், பண்பாடு போன்றவற்றையும் தகர்த்து, வெளிப்பண்பாட்டுக்குப் பெயர்க்கிறது. எங்களின் சூழலிலிருந்து நம்மைப்

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# பட்டறிவு

# அழுதாறும் உரிமை - சூரியகந்தையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை



தென்னிலங்கை சிங்கள சாதாரண மக்களின் மனநிலையில் எந்தளவு விஷம் ஏற்றப்பட்டுள்ளது என்பதற்கு இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எதிர்த்து தென்னிலங்கையில் வெளிப்பட்ட எதிர்ப்பு முக்கிய உதாரணம்.

வடக்கு மாகாண சபை அதை நடத்த மேற்கொண்ட முடிவு, அதற்கு முதலமைச்சரே தலைமை தாங்குவது என்கிற முடிவுகள் வெளிப்பட்டவுடன் அதனை நிறுத்த சிங்கள இனவாத அமைப்புகள், சக்திகள் கடும் பிரயத்தனப்பட்டன. அவர்களுடன் எதிர்க்கட்சியும், சிங்கள ஊடகங்களும் கைகோர்த்து பிரச்சாரத்தை முன்னெடுத்திருந்தன.

அமைச்சர் ராஜித்த சேனாரத்னவிடம் வாராந்த ஊடக மாநாட்டில் “மே 18ஆம் திகதி புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை நினைவுகூர்ந்து, படையினரை கௌரவிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்த தினத்தில் புலிகளுக்கு ஆதரவாக நினைவு கூருவதற்கு அரசாங்கம் எப்படி இடமளிக்க முடியும்” என்று



கேள்வி கேட்டு துளைத்தெடுத்தார்கள். ராஜித்த சேனாரத்தன சளைக்காமல் அத்தகைய இனவாத கருத்துக்களுக்கு பதிலளித்திருந்தார். “நினைவேந்தலை தமிழ் மக்கள் அனுஷ்டிப்பதில் எந்த தவறுமில்லை. ஜேவிபியினரும் இவ்வாறான தினத்தை அனுஷ்டிக்கின்றனர். இதில் எந்தவித தவறும் இல்லை. அங்குள்ள மக்களும் எமது மக்களே. ஒரு காலத்தில் ஜே.வி.பியும் பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்ட இயக்கம் தான் அவர்கள் நினைவேந்தல் செய்வதில்லையா? ஏன் வடக்கு மக்களுக்கு மாத்திரம் செய்ய முடியாது, பிரபாகரன் பயங்கரவாதி என்றால் விஜேவீர யார்?
யுத்தத்தின் போது எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதிகள் மாத்திரம் இறந்ததில்லை. பொதுமக்களும் இறந்திருக்கிறார்கள். அதுபோலத் தான் இங்கும்.” என்றார் அவர்.

> **குறைந்தபட்சம் இனப் பிரச்சினைக்கு அப்பால் சிங்கள × தமிழ் × முஸ்லிம் மக்களின் பொதுப் பிரச்சினைகளுக்கு கூட ஒன்றாக திரள்வதற்கான சகோதரத்துவம் இன்னமும் கட்டியெழுப்பப்படவில்லை**

அக்கருத்துக்கள் பெரும் சர்ச்சையை தென்னிலங்கையில் ஏற்படுத்தியிருந்தன.

மகிந்த தரப்பு ஒரு புறம் இதனை சாதகமாக ஆக்கிக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக்களை கூறுவதுபோல தமிழ் நினைவேந்தலுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இலங்கையின் பல பாகங்களில் ஆங்காங்கே ராஜித்தவின் கூற்றை எதிர்த்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவரின் உருவப்பொம்மையையும் எரித்தனர். பிரபாகரனின் முகத்துக்குப் பதிலாக ராஜித்தவின் முகத்தை மாற்றி பெரிய கட் அவுட்களை நிறுத்தினர்.

இழந்த தமது உறவுகளை நினைத்து அழுதாறக் கூட விட முடியாது என்கிற மனநிலை நாட்டின் பல முனைகளில் இருந்து வெளிப்பட்டதை கவனிக்க முடிந்தது. அந்த மனநிலை பிழையென்று கூறி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு ஆதரவாகவும் பல சிங்களவர்கள் சமூகவலைத்தளங்களில் கருத்து வெளியிட்டனர். ஆனால் அந்த கருத்துக்கு பதிலைளித்த பலரும் இனவாத நோக்கிலேயே கருத்து வெளியிட்டிருந்தனர். சாரம்சத்தில் இக்கருத்துகள் இப்படி இருந்தன.
போரில் தமது சிங்களப் படையினரால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகளே!
பொது மக்கள் எவரும் கொல்லப்படவில்லை. அது “டயஸ்போராவின்” பிரச்சாரம். சர்வதேசச் சதி.
அப்படியும் கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் சிவில் உடை தரித்த புலிகளே.

என்னுடன் ஜே.வி.பி செயற்பாடுகளில் 90களின் ஆரம்பத்தில் பணியாற்றி பின்னர் சில வருடங்களில் என்னோடு வெளியேறிய ஒரு தோழர் சிசிர யாப்பா. ஹிரு பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்தவர். நினைவேந்தலுக்கு எதிர்ப்பு கிளம்பியிருந்த இதேசமயத்தில் கடந்த



மே 18 அன்று சிசிரயாப்பா தனது முகநூல் பதிவில் இசைப்பிரியா உள்ளிட்ட பலர் கொல்லப்படுவதற்கு முன்பாக பாரிய களிமண் புதைகுழியின் ஓரத்தில் உட்காரவைக்கப்பட்டிருந்த ஒரு படத்துடன் உருக்கமான கவிதையைப் பகிர்ந்தார்.

நூற்றுக்கணக்கான எதிர்ப்புகள் அவரது பதிவுக்குக் கீழ் கருத்தூட்டம் இடப்பட்டிருந்தன. அவற்றில் சில தூசனங்களும் கூட. நான் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட வயோதிபர், பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் படங்கள் சிலவற்றை அங்கே பகிர்ந்தேன். இவர்கள் புலிகள் தானா சொல்லுங்கள் என்றேன். பதிலுக்கு புலிகளின் கொலைச்சம்பவங்களை நினைவுகாட்டி சிலர் படங்களை பகிர்ந்தனர்.

பெரும்பான்மை கருத்துக்கள் மக்களின் கண்ணீரின் பக்கமே இருக்கும் என்கிற எனது நம்பிக்கை சிதைவுற்றது. அந்த

**என்.சரவணன்**

வேகத்தில் நான் அந்த பதிவுக்கு சிங்களத்திலேயே எனது கருத்தைப் பகிர்ந்தேன்.
“தோழனே! சாதாரண மக்கள் பரவாயில்லை, ஆனால், யுத்தத்தில் தமது படை தமிழ் மக்களைக் கொல்லவில்லை என்று நமது சக ஊடகவியலாளர்கள் கூறும்போது

> **கண்ணீருக்கு சிங்கள – தமிழ் பேதமுண்டா தோழனே. அழுகை, கவலை, ஒப்பாரிக்கும் கூட இனபேதமுண்டா தோழனே. இதை நான் சிங்கள சகோதர்களிடம் கேட்டாக வேண்டும் என்பதால் இந்தப் பதிவு”**

உண்மையில் ஏமாற்றமும், கவலையும் தான் மிஞ்சியது. மேற்படி படங்களை நான் பகிர்ந்தது அதற்காகத்தான்.

“தோழனே சிசிர நீயும் நானும் “சூரியகந்த” மலையில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டச் சென்றிருந்தபோதுதான் முதற் தடவை சந்தித்துக் கொண்டோம். அது நிகழ்ந்து கால் நூற்றாண்டு ஆகிறது. அன்று ஜே.வி.பி என்கிற பேரில் ஒன்றுமறியாத பாடசாலை மாணவர்கள் 31 பேரைக் கொன்று புதைத்த புதைகுழி அது. அந்தப் புதைகுழிகளில் அழுகிய சடலங்களின் சதைகள் வெள்ளை தயிர்போல ஆகி அதனை சவள்களைக் கொண்டு வெளியில் கொட்டினார்கள். அம்மாணவர்கள் இறுதியாக கட்டியிருந்த சாரத்தைக் அடையாளம் கண்ட தாய்மார் “அனே மகே புதே” (ஐயகோ என் மகனே!) என்று கதறி அழுத காட்சியை நேரில் பார்த்தோம்.

அவர்களின் ஒப்பாரியை மட்டுமல்ல, அவர்கள் படையினருக்கு இட்ட சாபத்தையும் கண்டோம். கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகளையும், எலும்புகளையும், உடைகளையும் சாக்குகளில் எடுத்துச் சென்று அடுத்த நாள் இரத்தினபுரி நீதிமன்ற வளாகத்தில் வைத்திருந்தார்கள். கண்ணீருடன் அந்த சாக்குகளை தொட்டுத் தடவி, விரித்து பார்க்க முனைந்த தாய்மாரைப் பார்த்து நீயும் நானும் அடக்கமுடியாது கண்ணீர் விட்டோம். அப்படி எடுக்கப்பட்ட ஒரு தாயின் படத்தை “ஹிரு” பத்திரிகையில் “தமது பிள்ளையை சாக்குகளில் தேடும் தாய்மார்” என்று முன்பக்கத்தில் தலைப்பிட்டோம்.

இன்று அது போன்றே மேலும் பல தாய்மார் யுத்தத்தில் சிதறிச் சின்னாபின்னமாக கொல்லப்பட்ட தமது பிள்ளைகளையும், உறவுகளையும் நினைத்து அழுது தீர்க்கிறார்கள். அவர்களை அழுதாற அனுமதிக்க முடியாது என்கிற மன நிலை என்ன மனநிலை என்று ஆதங்கப்படுகிறேன். கண்ணீருக்கு சிங்கள – தமிழ் பேதமுண்டா தோழனே. அழுகை, கவலை, ஒப்பாரிக்கும் கூட இனபேதமுண்டா தோழனே. இதை நான் சிங்கள சகோதர்களிடம் கேட்டாக வேண்டும் என்பதால் இந்தப் பதிவு”

என்று முடித்திருந்தேன். என் உருக்கமான பதிவைப் பல சிங்கள நண்பர்கள் பார்த்து சகோதரத்துவத்துடன் தமது ஆதரவை வெளியிட்டிருந்தார்கள்.

சிங்கள – தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் பரஸ்பரம் மனித மன உணர்வுகளை பகிர்ந்துகொள்ளும் சூழல் இன்று மட்டுமல்ல என்றுமே ஏற்பட்டதில்லை. மொழி ஒரு பெரும் தடை என்று இன்று தான் கடுபிடித்தது போல பல்லாண்டுகளாக பேசிக் கொண்டிருப்பது தான் மிச்சம். அதற்கான தளத்தையும், அமைப்பு முறையையும் (ளலளவநஅ) ஏற்படுத்துவதற்கான பொறிமுறை இன்னும் வெற்றியளிக்கவில்லை. இந்த இடைவெளி கூடக் கூட, அவ்விடைவெளியை இனவாத சித்தாந்தம் நிரப்பி வருகிறது. அவ்வினவாதம் பேரினவாதமயப்பட்டு மேலும் கெட்டியாகி ஜனரஞ்சகமயமாகிறது. இலகுவாக தீர்ப்பதற்கு இருக்கும் வாய்ப்பும் அவகாசமும் மேலும் கடினப்பட்டுப் போய்விடுகிறது.

சிங்களப் பேரினவாதத்தை “சித்தாந்தமாக” அடையாம் கண்டு, அதனை பாதுகாக்கும் அமைப்பு முறையையும், சக்திகளையும் அடையாளம் கண்டு சரி செய்வதற்குப் பதிலாக அதற்குப் பலியாகி வினையாற்றும் சிங்கள சிவில் சமூகத்தை நேரடியாக குறைகாண்பதில் பலனில்லை. சிங்கள சமூகத்திடம் நமது உணர்வுகளையும், அபிலாஷைகளையும் பகிர்வதற்கான வழிகளைத் தேடவேண்டும். அதுபோல சிங்கள சமூகத்தின் கருத்துக்களை பகிர்வதற்கும் ஏற்ற தமிழ் சூழலும் உருவாக வேண்டும்.

குறைந்தபட்சம் இனப் பிரச்சினைக்கு அப்பால் சிங்கள – தமிழ் – முஸ்லிம் மக்களின் பொதுப் பிரச்சினைகளுக்கு கூட ஒன்றாக திரள்வதற்கான சகோதரத்துவம் இன்னமும் கட்டியெழுப்பப்படவில்லை. சரி செய்வதற்கான சரியான காலம் இதுவன்றி வேறெது.



“இலங்கைக்கு வந்த முதலாவது சமாதானத் தூதுவர் யார்...?” என்ற கேள்வியுடன் இந்த அங்கத்தை தொடங்குவோம்.

# நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 04

## இலங்கைக்கு வந்த முதலாவது சமாதனத் தூதுவர் யார்...?

**ரஸஞானி**

எமது தாயகத்தின் வரலாற்றை ஆராயும்போது, பல சுவாரஸ்யமான தகவல்கள் வெளியாகின்றன. 25 ஆயிரத்து 330 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இந்த சின்னஞ்சிறிய தீவில், தமிழ் - சிங்கள - முஸ்லிம் இன நல்லுறவுக்கு காலத்திற்குகாலம் சோதனைகள் வந்திருப்பது இன்று நேற்று அல்ல என்பதை வரலாற்றின் ஏடுகளிலிருந்து பார்க்கின்றோம்.

முரண்பாடுகள் இராமன் - இராவணன் காலத்திலிருந்தே தொடங்கியிருக்கிறது. இலங்கையில் 1983 இல் இனநெருக்கடி



உச்சத்திற்கு வந்து கலவரமாக வெடித்தபோது பாரதப்பிரதமர் இந்திராகாந்தி, தனது தரப்பிலிருந்து ஒரு நல்லெண்ணத் தூதுவரை அனுப்பியிருந்தார். அவர் பெயர் ஜி. பார்த்தசாரதி. அவர் வந்தும் சரியான சமாதானத்தீர்வு கிடைக்கவில்லை. எதிர்பாராதவிதமாக இந்திராகாந்தி கொல்லப்பட்டதும், ராஜிவ் காந்தியின் பதவிக்காலத்தில் ரொமேஷ் பண்டாரி என்பவர் வந்தார். அவராலும் உரிய தீர்வைக்கண்டுபிடிக்க முடியவில்லை.

1987 இல் வடமராட்சியில் லிபரேஷன் ஒப்பரேஷன் தாக்குதலை அன்றைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தொடக்கியதும், இந்திய விமானங்கள் வந்து பாதிக்கப்பட்ட மக்களை நோக்கி உணவு மற்றும் உதவிப்பொருட்களை வீசியதும், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா உஷாரடைந்தார். சண்டைக்காரனுடன் சமாதானம் பேசுவதைவிட சாட்சிக்கு வருபவனுடன் பேசுவதற்கு அவர் தயாரானர்.

ஒரு சமாதானத் தூதுவராக ராஜிவ் காந்தியும் வந்து வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு தீர்வை முன்வைத்தார். முதலில் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அதனை ஏற்று மானிப்பாய் சுதுமலை அம்மன் ஆலய முன்றலில்

### கௌதம புத்தரும் ஒரு சமாதனத் தூதுவரே!

மக்களிடம் தோன்றி ஆயுதங்களை ஒப்படைப்பதாகச்சொல்லி சமாதானத்திற்கு சமிக்ஞையும் காண்பித்தார்.

பிறகு நடந்த சிக்கல்கள் தெரிந்த வரலாறுதான். புதிதாகச்சொல்வதற்கு எதுவும் இல்லை! அந்தச்சிக்கல்கள் அதி உச்சம் சென்றவேளையில் 2002 இல் நோர்வேயிலிருந்து சொல்ஹெய்ம் என்ற தூதுவர் வந்தார். மீண்டும் மீண்டும் வந்தார்.
இறுதியில் அவரும் “ எக்கேடும் கெட்டுப்போங்கள்“ என்று கையைவிரித்தார்.

2009 மே மாதத்திற்குப்பின்னர் ஐ. நா. சபையின் பிரதிநிதிகள் ஒருவர் பின் ஒருவராக வந்து வந்து செல்கிறார்கள். இன்னும்தான் பிரச்சினை தீரவில்லை.

இந்தப் பின்னணிகளுடன்தான் இந்தப்பதிவில் முதலில் முன்வைத்த “இலங்கைக்கு வந்த முதலாவது சமாதானத் தூதுவர் யார்...?“ என்ற கேள்வியை களனி கங்கையின் பின்னணியிலிருந்து நாம் பார்க்கலாம்.

இலங்கையின் முதல் வேந்தன் என அறியப்படும் இலங்கேஸ்வரன் இராவணன் எந்த நேரத்தில் சீதையைப்பார்த்தானோ தெரியாது...?! அது அவனுக்கும் கெட்டநேரம்! சீதைக்கும் கெட்ட நேரம்! இராமனுக்கும் கெட்டநேரம். இராம பக்த ஹனுமானின் நீண்ட வாலுக்கும் கெட்ட நேரம்!

அந்த கெட்டநேரங்கள், இன்றுவரையில் தொடருகின்றன!

சீதையை மீட்பதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்ட முதலாவது சமாதான நல்லெண்ணத்தூதுவர் ஸ்ரீராம பக்த ஹனுமான். அவர் வந்து சீதையை அசோகவனத்தில் பார்த்து இராமனின் கணையாழியை காண்பித்து தன்னை அறிமுகப்படுத்திவிட்டு, அதன்பிறகே இராவணனை சந்தித்து சீதையை மீட்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

அந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. ஹனுமானின் வாலில் தீயை வைத்து அவமானப்படுத்தி அனுப்பிய கோபம் ஒரு புறம், தனது மனைவியை கவர்ந்து சென்ற கோபம் மறுபுறம், இராமன் தனது தம்பி இலக்குமணனுடனும் வானரப்படைகளுடனும் இலங்கை



மீது போர் தொடுத்து மனைவியை மீட்டார். அவர் இராவணனை வென்று திரும்புகையில் அந்தப்போர்க் காலத்தில் தனது பக்கம் வந்து சேர்ந்த இராவணன் தம்பி விபீஷணனிடம் நாட்டை ஒப்படைத்து முடிசூட்டிவிட்டே சென்றார். விபீஷணன் குறித்து விமர்சனங்களும் இருக்கின்றன. இராமன் பக்கம் சென்று தனது உடன்பிறப்பை காட்டிக்கொடுத்தான் என்று ஒரு சாராரும், அண்ணனைத்திருத்த முடியாத சூழலில்தான் அவன் எதிரியின் பக்கம் சென்றான் என்று மற்றும் ஒரு சாராரும் இன்றுவரையில் பட்டிமன்றம் நடத்தி விவாதிக்கிறார்கள்.

இந்த விபீஷணனுக்கும் ஒரு கோயில் இலங்கையில் இருக்கிறது எனச்சொன்னால் நம்பமாட்டீர்கள்!. அந்தக்கோயிலும் கௌதம புத்தர் தரிசனம் செய்த களனிகங்கைக்கு அருகில்தான் இருக்கிறது. அங்கு புத்தர் வந்ததற்கு அடையாளமாக ரஜமஹா விஹாரை அமைந்திருப்பதுபோன்று, இராவணனுக்குப் பின்னர், இராமனால் முடிசூட்டப்பெற்ற அவன் தம்பி விபீஷணனுக்கும் ஒரு கோயில் அமைந்துள்ளது. மகா விஷ்ணுவின் மற்றும் ஓர் அவதாரமான இராமனிடத்தில் ஆழ்ந்த பக்திகொண்டிருந்தமையால், இவரை விபீஷண ஆழ்வார் என்றும் வைணவர்கள் வணங்கிவருகிறார்கள்.

“மாற்றான் மனைவி சீதையை அசோகவனத்தில் தடுத்துவைத்திருப்பது தகாத செயல். அத்துடன் பஞ்சமா பாதகம். அவளை விட்டுவிடு“ என்று சொல்லியும் கேளாதவன்தான் அண்ணன் இராவணன். அவனைத்திருத்த முடியாத சூழலில்தான் இராமனிடம் சென்று அடைக்கலம் புகுந்தான் விபீஷணன்.

### விபீஷணன் முடிசூடி, ஆண்ட பூமிதான் களனி

இலங்கையில் ராஜீவ் காந்தியின் இந்திய அரசு அனுப்பிய இராணுவத்தின் பெயர் அமைதிப்படை!? இராமன் தனது மனைவியை மீட்க உடன் அழைத்துவந்தது வானரப்படை!.

இரண்டு படைகளும் செய்த செயல்களை காவியமும் வரலாறும் சொல்கின்றன. இந்திய அமைதிப்படை, வடகிழக்கில் வரதராஜப்பெருமாளை ஒரு தேர்தலின் மூலம் முதலமைச்சராக்கியது.

இராமனின் வானரப்படை இராவணனை வெற்றிகொண்டதும் அவன் தம்பி விபீஷணனுக்கு அரசை வழங்கி மூடிசூட்டிவிட்டு அகன்றது. இந்தக்கதைகள் ஐதீகத்திலும் இலங்கை வரலாற்றிலும் இடம்பெறுகின்றன. விபீஷணனிடம் இலங்கையை ஒப்படைத்த காலம் கி.மு. 1300 காலப்பகுதி எனவும் ஆய்வுகள் சொல்கின்றன. விபீஷணன் களனியை தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்ததாகவும், அவன் மறைந்த பின்னர், யட்டாலதீசன் என்ற மன்னன் ஆட்சி அதிகாரத்தை பொறுப்பேற்று, களனியிலேயே விபீஷணனுக்கு கோயில் அமைத்ததாகவும் ஐதீகக்கதைகள் சொல்கின்றன.

விபீஷணன் இயக்கர் சமூகத்தை சேர்ந்தவன். அதேவேளை நாகவம்சத்தினர் வடக்கில் ஆட்சி நடத்தியிருப்பதாகவும், அங்கும் பங்காளிச்சண்டை நடந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. நாகதீபத்தில் மகோதரன், சுலோதரன் ஆகிய இருவரும் அங்கு ஆட்சியிலிருக்கும்போது, இவர்களின் இளைய சகோதரன் மணியக்கிரானவன் களனியை ஆட்சிசெய்து வந்திருக்கிறான்.

நாகதீபத்தில் மகோதரன், சுலோதரன் ஆகிய மன்னர்கள் ஒரு தாய்மக்களாக இருந்தாலும் பதவி ஆசை என வந்துவிட்டால் பிறகு பங்காளிச்சண்டைதானே..? எங்கு சண்டை நடந்தாலும் அதனைத்தீர்த்துவைப்பதற்கு யாராவது ஒருவர் வருவார்.



தற்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை இருக்கிறது. சிலசமயங்களில் இந்தச்சபையும் எதுவும் செய்யமுடியாமல் கையை பிசைந்துகொண்டிருக்கும்.

விடாக்கண்டன், கொடாக்கண்டன் கதை போன்று அந்த நாகதீப சகோதரர்களும் முடியாட்சிக்காக தமக்குள் சண்டையிட்டபோது அவர்களை சமாதானப்படுத்த வந்த அமைதிப்புறாதான் கௌதம புத்தர். நாகதீபத்திற்கு வந்திருக்கும் போதிமாதவனை தரிசிப்பதற்காக அங்கு சென்றான் யட்டாலதீசன் என்ற மன்னனுக்கு பின்னர் களனியை ஆட்சிசெய்த மணியக்கிரானவன் என்ற மன்னன்.

புத்தரை நாகதீபத்தில் சந்தித்த இந்த களனி மன்னன், தனது இராச்சியத்திற்கும் வருமாறு அழைத்திருக்கிறான்.

அவரும் களனிக்கு வந்தார். இது அவரது இரண்டாவது இலங்கைப்பயணம். இந்தத் தகவல்களை பாளி இலக்கிய நூல்கள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து என்ன தெரிகிறது, இலங்கைக்குள் எங்கு பிரச்சினை வந்தாலும் வெளியிலிருந்து யாராவது ஒருவர் சமாதானத்தூதுவராக வந்திருக்கிறார்.

இராவணன் காலத்திலிருந்து இராஜபக்ஷ காலம் வரையில் இவ்வாறு பலரும் இந்தியாவிலிருந்து சமாதான தூதுவர்களாக வந்துகொண்டிருக்கிறார்கள். இன்று மைத்திரி அதிபர் பதவியிலிருந்தாலும், இலங்கையில் மீண்டும் இனக்கலவரங்கள் தோன்றிவிடக்கூடாது என்பதற்காகவே நல்லிணக்கம் பற்றி தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்கிறார்.

இராமாயண காலத்தின் விபீஷணன் களனியில் கோயில் கொண்டிருக்கிறார். அவருக்குப் பின்னர் சமாதானத் தூதுவராக வந்த புத்தர் பெருமான் இலங்கை முழுவதும் சிலையாக மௌனத்தவமிருக்கிறார்.

அவரது சிலைகளும் தற்காலத்தில் அரசியலாகிவிட்டன. இந்த புத்தர் சிலை அரசியல் நெருக்கடியாகிவிடக்கூடாது. நெருக்கடியானால் மீண்டும் மீண்டும் சமாதானத் தூதுவர்கள் எங்கள் தேசத்திற்கு படையெடுப்பார்கள்!

ஐதீகமும் வரலாறும் பல தொடர்கதைகளுக்கு ஊற்றுக்கண். களனி கங்கையும் இந்த ஊற்றில் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது.
(தொடரும்)

# மலைகளைப் பேசவிடுங்கள் 2



### மலையகமும் மறுவாழ்வும்

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவில் தமிழகம் நோக்கி தாயகம் திரும்பியவராக சென்ற எமது மலையக உறவுகள் இன்று உணர்வோடு தாங்கள் பிறந்து வளர்ந்த மண் நோக்கி திரும்பி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. தலைமுறைகள் கடந்து மீளபுதுப்பிக்கப்படும் இந்த உறவு உணர்வு ரீதியாக மக்களை ஒன்றிணைத்து அடுத்த கட்ட நகர்வுக்கு அழைத்துச்செல்லும் என்ற நம்பிக்கை எனக்குள் எழுகிறது .

கேகாலை மாவட்டத்தின் முக்கியமானதொரு தமிழ் பாடசாலையான கந்தலோயா தமிழ் வித்தியாலயத்துக்கு இல்ல விளையாட்டுப்போட்டிகளின் போது விருந்தினராக கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அங்கே மாணவர்கள் தமது இல்லங்களை மலையக தொழிற்சங்க, அரசியல், இலக்கிய, ஊடக, நாடக முன்னோடிகளான கோ.நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை ஆகிய பெயர்களை



தமது இல்லங்களுக்கு இட்டிருந்தனர்கள்.

### ஆதிலட்சுமி கப்பலும் ஒப்பாரிக் கோச்சியும்

மாணவர்கள் ஓர் இல்லத்தை மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட "ஆதிலட்சுமி கப்பல்" போன்றும், மற்றைய இல்லத்தை மலையக மக்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்ப்பட்ட "ஒப்பாரிக் கோச்சி" போன்றும் அமைத்திருந்தனர். அந்த இரண்டையும் அன்று உணர்வு பூர்வமாக தரிசித்தேன். அந்த கற்பனைக் கப்பலின் மேல் தளத்திற்கும், அந்த ரயில் பெட்டியிலும் ஏறி இறங்கினேன். என் முன்னையவர்கள் அனுபவித்த அவல உணர்வை அப்படியே அனுபவிக்க கிடைத்த நாள் அது.

விளையாட்டுப்போட்டிக்கு இல்லத்தை அலங்கரித்ததோடு நின்று விடாமல் " ஆதிலட்சுமி " மூழ்கும் காட்சியையும் "ஒப்பாரிக் கோச்சியில்" மக்கள் அழுது புலம்பும் காட்சியையும் குறுந்திரைப்படமாக்கி தற்போது இணையத்தில் வெளியிட்டுள்ளார்கள் கந்தலோயா பாடசாலை சமூகத்தினர்.

அன்று ஒப்பாரிக்கோச்சியில் அழுது புலம்பி சென்ற உறவுகள் இன்று தமிழகத்தில் உயர் தொழில் புரிபவர்களாக, ஓய்வு பெற்றவர்களாக தமது மண்ணையும் மக்களையும்



பார்க்க வருகை தந்திருந்தனர். இரத்தினபுரியில் இருந்து சென்ற தமிழகன் எனும் ராமச்சந்திரன் ஒரு சட்டத்தரணி, அக்ரப்பத்தனையில் இருந்து சென்ற செவந்தி நீதிமன்ற நிர்வாக அதிகாரி, வரக்காப்பொலயில் இருந்த தம்பிராஜா கிராம நிர்வாக அதிகாரி. தம்பிராஜா தனது மாவட்ட பாடசாலைக்கு மலையக பாரம்பரிய இசைக்கருவிகளை அங்கிருந்து அன்பளிப்பாகக் கொண்டுவந்திருந்தார். அவர்கள், என்னையும் இந்த விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர் அதன் நிமித்தம் மூன்றாவது தடவையாகவும் கந்தலோயா போனேன்.

தமிழக உறவுகளுடன் பாடசாலை மண்டபத்தை அடைந்தபோது அங்கே ஆதிலட்சுமி மூழ்கும் காட்சியும், ஒப்பாரிக் கோச்சியில் உறவுகளைப் பிரியும் ஓலமும் கண்ணீரைக் கசியச் செய்தன. கடைசிக் காட்சியில் ஒரு சிறுவனைக் கட்டியணைத்து அழுது ஓர் ஆண்மகன் விடைபெறும் காட்சி. அதில் எங்கே இருக்கிறது கற்பனை.? 80களில் எனது குருநாதரும் சிற்றப்பாவுமான மெய்யன் மேகராஜா சிறுவனான என்னைக் கட்டி அணைத்து விடைபெற்ற உண்மைக் காட்சியல்லவா அது. இந்த சித்தப்பாவைத் தேடி நான் பெரியவனாகி தமிழ் நாட்டில் அலைந்த கதையை "மல்லியப்பு சந்தியில் " பதிவு செய்துள்ளேன். (ஐயா மேகராஜா வின் அன்றைய உணர்வுப்பதிவுதான் மல்லியப்பு சந்திக்கு முன்னுரை).

இப்போது தமது உறவுகளைத் தேடி இங்கே வந்துள்ள உறவுகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். "குறும்படத்தில் ஒப்பாரிக் கோச்சிக்கு வெளியே பிளட்போரத்தில் நின்று கதறி அழுகிறார்களே அது நாம். ஐய்யோ என கதறி அழுது கொண்டு கைகாட்டி போனார்களே அவர்கள் தான் இவர்கள் " என அறிமுகம் செய்தேன். அந்த மண்டபத்தின் ஒவ்வொரு கண்ணும் கண்ணீரை காணிக்கையாக்கியது. எனக்கு குரல் கரகரத்தது.

மலர்மன்னன் தம்பிராஜா திண்டுக்கல் சக்தி கலைக்குழுவினரிடம் இருந்து விலைக்கு வாங்கிவந்த "தப்பு"

**மல்லியப்புசந்தி திலகர்**

முதலான பாரம்பரிய இசைக்கருவிகளை அன்பளிப்பு செய்தார். தனது கட்டுரைகளுடன் எமது கட்டுரைகளும் அடங்கியதாக வழக்கறிஞர் தமிழகன் தொகுத்தளித்திருக்கும்

> **ஒப்பாரிக் கோச்சிக்கு வெளியே பிளட்போரத்தில் நின்று கதறி அழுகிறார்களே அது நாம். ஐய்யோ என கதறி அழுது கொண்டு கைகாட்டி போனார்களே அவர்கள் தான் இவர்கள்**

நூலான "மலையகமும் மறுவாழ்வும்" தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்டாலும் இலங்கையிலேயே முதல் வெளியீடு செய்யப்பட வேண்டும் என தமிழகன் எண்ணியிருந்தார். அதற்காக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 13-05-2018 விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும், எதிர்பாராதவிதமாக அன்று கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. அவரிடம் இருந்து பாடசாலை அதிபர் கருணாகரன் பாடசாலைக்கான பிரதியைப் பெற்றுக் கொண்டார். ஒப்பாரிக் கோச்சியில் சென்றவர்களை காட்சிப்படிம மாக்கிய கந்தலோயா பாடசாலையில் இந்த நிகழ்வு அரங்கேற்றம் கண்டது உணர்வுபூர்மானது.

இந்த நூலின் தலைப்பு பற்றி வீரகேசரி "சங்கமம்" இலக்கிய இணைப்பிதழுக்காக நடைபெற்று இருந்த உரையாடலில் தொகுப்பாசிரியர் தமிழகன் அளித்திருந்த பதில் இங்கே பதிவு செய்யப்படவேண்டியுள்ளது.

(உரையாடல் ஆரம்பம் )

கேள்வி: மறுவாழ்வு எனும் போது ஒருவாழ்வு இழக்கப்பட்டிப்பது போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றதே..

வழக்கறிஞர் தமிழகன் : "நிச்சயமாக. மலையக மக்கள் எல்லா காலப்பகுதியிலும் அவர்களது வாழ்வை இழந்து மறுவாழ்வைத் தேடிக் கொண்டிருப்பவர்களாகவே நான் உணர்கிறேன். 200 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழக கிராமப்புற வாழ்வை இழந்துதான் அவர்கள் இலங்கையில் வெள்ளைக்காரர்களால் குடியமர்த்தப்பட்டார்கள். அப்போது அவர்கள் தமிழகக் கிராமங்களில் வாழ்ந்த வாழ்கையை இழந்து இங்கு மறுவாழ்வைத் தேடினார்கள்.

இங்கு நூறு வருடங்கள் ஓர் அடிமை



வாழ்வை எதிர்கொண்ட அந்த மக்கள் வாக்குரிமை பெற்று இலங்கை நாட்டின் பிரஜைகளாக வந்ததன் பின்னர் சுதந்திர இலங்கையில் வாக்குரிமை பறிக்கப்பட்டவர்களாக மறுவாழ்வு தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இந்தக் கட்டத்தில் 1964 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகள் செய்துகொண்ட ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கையில் வாழ்ந்த மலையகத் தமிழ் மக்களை இருகூறுகளாக்கியது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழகம் சென்ற மக்கள் அங்கு மறுவாழ்வு தேட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இவ்வாறு வாழ்வதும் பின்னர் மறுவாழ்வு தேடுவதுமாக சுமார் இருநூறு வருடகாலமாக வாழ்ந்துவரும் மலையக மக்களின் வாழ்வியலை விளக்குவதாகவே இந்தத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன."

என்று உரையாடல் தொடர்கிறது....

தமிழகன் கூறும் மலையகத்தின் மறுவாழ்வு நுணுக்கமான பார்வையுடன் விரிவாக ஆராயப்பட வேண்டியது. அவர் கூறும் எனது ஆய்வு கட்டுரை 2011 அளவில் தமிழ் நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாடு ஒன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த மாநாட்டுக் குழுவினர் என்னை "மல்லியப்புசந்தி" ஊடாக அறிந்திருந்தனர்.
அத்தகைய அறிமுகத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தவர் மலையகத் தமிழராக இந்திய (சிவகாசி) அகதிமுகாமில் வாழ்ந்து மறைந்த அந்தோனி ஐயா. அவர் மலையக மக்களின் இலங்கைக் குடியுரிமை பெறுதலின் இறுதிப்போராளி. அது பற்றியும் அவர் பற்றியும் ஏற்கனவே சில இடங்களில் பதிவு செய்திருந்தாலும் "மலைகள் பேசும்" இந்தத் தொடரில் பொருத்தமான இடம் ஒன்றில் பதிவு செய்கிறேன். ஏனெனில் அந்தோனி ஓர் அறியப்படாத ஆளுமை. அறியப்படவேண்டிய ஆளுமை. இவர் முயற்சியால்தான் இலங்கை மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையின் எஞ்சியிருந்த பிரச்சினை 2009 ல் தீர்க்கப்பட்டது. இலங்கைத் தமிழரின் 40 ஆண்டுகால ஆயுதப் போரும், மலையகத் தமிழரின் இலங்கைக் குடியுரிமைக்கான 60 ஆண்டுகால அகிம்சைப் போரும் முடிவுக்கு வந்த ஆண்டு 2009.

இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்வை இழப்பதும் தேடுவதுமான மலையகமும் மறுவாழ்வும் பற்றி அறிந்து கொள்ள அந்த நூலில் அடங்கிய எனது "இலங்கை(யில்) தமிழர்கள்" எனும் கட்டுரை கூறும் விடயங்கள் இங்கே பேசப்பட வேண்டியது அவசியம் என எண்ணுகிறேன். மலைகளைப் பேசவிடுங்கள்.



# 'பல் கலைக் கழகம்' கேள்விகளுக்குப் பதில்களை யார் சொல்வது?
## இடறுவது தற்செயல், ஏறுவது முயற்சி என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

18-05-2018 முள்ளிவாய்க்கால் நினைவு நாளன்று, நான் லண்டனிலிருக்கவில்லை. உலகத்தின் மிகப் புராதன தீவுகளில் ஒன்றான "மால்ட்டா"வுக்குச் சென்றிருந்தேன்.

பத்தாயிரம் வருடங்களுக்கு மேலான சரித்திரத்தைக் கொண்ட அந்தத் தீவில் பிரயாணங்களைத் தொடர்ந்து கொண்டிருந்தபோது, இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் அவ்வப்போது படித்துக் கொண்டிருந்தேன்.

இன்று,"மனிதப் பேரவலம் ஒன்றை நினைவு கூறும் இடத்தில் இன்னொரு பேரலவத்தை அரங்கேற்றும் "வல்லமை"தமிழர்களுக்கு மாத்திரம்தான் உண்டு" என்ற ப.தெய்வீகனின் அவல நிலை முள்ளியாவளை நினைவு நாளில் ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்த கறுப்புச் சட்டை வீரர்களின் கருத்துக்களில் பதிந்திருக்கவில்லையா?

எனக்குள் வந்து கொண்டிருக்கும் பல கேள்விகளுக்குப் பதில்களை யாரிடம் எதிர்பார்ப்பது?

"பல் கலைக் கழகம்" என்பது ஒரு மாணவன் குறிவைத்துச் செல்லும் பாடத்தில் மட்டுமல்லாது பல உயர்நிலைக் கல்விகளின் ஒன்றுகூடலின் சங்கமத்தில் தன்னைப் பிணைத்துக் கொண்டு பல்லறிவு பெறும் கழகம் என்பதுதான் எனது அனுபவம்.

1985ம் ஆண்டு,நான் லண்டன் திரைப்படக்கல்லூரி மாணவியாக, பலதரப்பட்ட மாணவர்களுடன் எனது இலங்கையிலிருந்து உயிர் தப்பியோடிவரும் தமிழர்களுக்காக," தமிழர் அகதி ஸ்தாபனம், தமிழர் அகதிகள் வீடமைப்பு" போன்ற ஸ்தாபனங்களை பிரித்தானிய தொழிற்கட்சியின் உதவியுடன் நிறுவி அதன் தலைவியாகவிருந்து என்னால் முடிந்த உதவிகளை எங்கள் தமிழ் மக்களுக்குச் செய்தேன். இந்தியா சென்று, இலங்கையிலிருந்து தப்பிச் சென்று அங்கு வாழும் இலங்கைத் தமிழர்களைப் பற்றிய புகைப்படக் கண்காட்சியை லண்டனில் நடத்தினேன். இவையத்தனையும் நான் மாணவியாக இருந்த காலத்தில் எனது

**ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**

சமுதாயத்திற்காகச் செய்த கடமைகள்.

மாணவர்களின் உரிமைகளுக்காகப் போராடினார்கள்.

அக்கால கட்டத்தில்,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மனித உரிமைப் போராட்டத்தில், முற்போக்கு இலக்கியப் பாதையில்,சமூகவளர்ச்சி சிந்தனைகளில் தனது முத்திரையைப் பதித்துக் கொண்ட ஒரு பெரும் தகமையுடன் இலங்கையில் கௌரவம் பெற்றிருந்தது. அதற்குக் காரணம் அக்காலத்தில் அங்கு செயற்பட்ட வடபுலத்தின் தலைசிறந்த முற்போக்குவாதிகளில் ஒருத்தரான, திரு.மு. கார்த்திகேசு" மாஸ்டரின் மாணவன் கலாநிதி கைலாசபதி போன்றவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டிகளில் ஒருத்தராகவிருந்ததாகும்.

"பல் கலைக் கழகம்" என்ற "பன்முறைத் தகமையின் ஆளுமையின்; தார்ப்பரியத்தைச் செயலிற் காட்டிய சிறந்த கல்விமான்களுடன் வளர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களா இன்று "தமிழர்களுக்கான ஒரு பொது நினைவு நாளில்" இவ்வளவு கேவலமான பிராந்திய வெறியுடன் நடந்து கொண்டார்கள்?

இந்தச் செய்தியைச் சீரணிக்க முடியாமல் எனது நெஞ்சம் பதறுகிறது. இவர்களை இப்படி ஒரு குறுகிய வழியில் செயற் படுத்துபவர்கள் யார்?

இன்று இலங்கைத் தமிழ் மக்கள், தமிழ் மக்களின் வாழ்வாதரத்தை மேன்படுத்தும், தமிழர் சமூகத்தை வளப்படுத்தும், இளம் தலைமுறையை நல்வழிக்கு இட்டுச் செல்லும் ஒரு நேர்மையான அரசியற் தலைமையின்றித் தவிக்கிறார்கள். தமிழ்த் தலைவர்கள் என்று தமிழ் மக்களின் வாக்குகளை வாங்கிக் கொண்டு பதவிக்கு வருபவர்களுக்கு," மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றவாதியின் கடமைகள்" என்னவென்ற ஒரு கோட்பாட்டின் விளக்கம் தெரியாது.

1948ம் ஆண்டு தொடக்கம் "தமிழ்ப் பிரச்சினை" என்ற ஒரு கருத்தை முன்வைத்து பதவிக்கு வரும் மேல்மட்டத்

> **'பல் கலைக் கழகம்' என்பது ஒரு மாணவன் குறிவைத்துச் செல்லும் பாடத்தில் மட்டுமல்லாது பல உயர்நிலைக் கல்விகளின் ஒன்றுகூடலின் சங்கமத்தில் தன்னைப் பிணைத்துக் கொண்டு பல்லறிவு பெறும் கழகம்**

வார்த்தைகள் நெஞ்சில் நெருப்பாய்ச் சுட்டன. (தேனியில் வந்த கட்டுரை).

வாழ்க்கையின் "இரண்டாம்" கட்ட மேற்படிப்புக்குச் சென்றேன். ஏற்கனவே



அத்துடன், முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்ச்சிகளில் திருகோணமலை, மட்டக்களப்புப் பிராந்தியத்தைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ளக் கூடாது" என்ற கட்டளையும் அங்கு பிறப்பிக்கப் பட்டதான செய்திகளும் வந்து விழுந்தபோது எனக்கு வந்த அதிர்ச்சியையும் துயரையும் விளங்கப்படுத்த எந்த வார்த்தைகளும் கிடைக்கவில்லை.

முப்பதாண்டு போரில், கிழக்குவாழ்; தமிழர்கள் உயிர், உடமைகளை இழக்கவில்லையா, ஆயிரக் கணக்கில் போராளிகளாக வீரமரணத்தைத் தழுவிக் கொள்ளவில்லையா? காணாமற்போன தங்கள் குழந்தைகளை, கணவன்மாரை, சகோதரங்களைத் தேடி அவர்கள் கதறுவது யாழ்ப்பாண மாணவர்களின் புலன்களை எட்டவில்லையா, கிழக்கிலுள்ள, (முக்கியமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள) 48,000 விதவைகளின்

எனது வாழ்க்கையிற் பெரும்பாலான காலம் முற்போக்கு சிந்தனைகளால் சீரமைக்கப் பட்டிருந்ததால், திரைப்படக் கல்லூரிக்குச் சென்றதும் அங்கு காணப்பட்ட "சமுதாய,திரைப்பட புரட்சிகர" சூழ்நிலை" என்னை ஆச்சரியப்படுத்தவில்லை.
நானும் எனது சக மாணவர்களும் 80ம் ஆண்டுகளில் லண்டன் தெருக்களில் தென்னாபிரிக்க வெள்ளையாதிக்கத்துக்கு எதிராக மோதியலைந்த பல்லாயிரம் பிரித்தானியப் பொது மக்களுடன் எங்களையும் பிணைத்துக் கொண்டோம். எங்களது முதலாவது" டாக்குயமென்டரி" தென்ஆபிரிக்க வெள்ளையாதிக்கக் கொடுமையை எதிர்ப்பதை அடிப்படையாகக் கொண்டது.

அதைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழர் படும் அவலத்தை முன்னெடுத்து, "எஸ்கேப் புறம் ஜெனசைட்" என்ற "டாக்குயுமென்டரியைத்" தயார் செய்தேன்.

அப்போது லண்டனுக்கு அகதிகளாக வந்த தமிழர்களில் நான் ஒரு கிழக்கிலக்கிங்கைத் தமிழரையும் சந்திக்கவில்லை. எனக்கு வடக்கு கிழக்கு, என்ற பிராந்திய உணர்வு ஒரு நாளும் இருந்ததில்லை. மனித நேயம்தான் எனது தாரக மந்திரம்.

இன,மத,நிற,வர்க்க பேதமற்ற மாணவர்களில் ஒருத்தியாக பன்முகத் திறமைகள்; கொண்ட மாணவர்களுடன் லண்டனில் என்னைப் பிணைத்துக் கொண்டபோது, 1960ம்-70ம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் முன்னெடுத்த பல முற்போக்கு சிந்தனைகள் என் மனதில் நிழலாடின.

1960-ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து, அமெரிக்கரின் கொடிய போர்த்

> **மாணவஉகள் மத்தியில் பிரதேசவாதமா? அதுவும் ஒரு பொது நிகழ்வில்?**

தந்திரங்களால் வியட்நாமிய மக்கள் கொடூரமாக் கொலை செய்யப்படுவதை எதிர்த்து கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள மட்டுமல்லாது இலங்கையிலுள்ள பல பல்கலைக்கழக மாணவர்கள், பல்லாயிக் கணக்காகத் திரண்டு கொழும்புத் தெருவிலிறங்கிப் போராடியதால் பொலிசாரின் தடியடிக்கு ஆளாகினார்கள்.

அதே கால கட்டத்தில் 1967ல் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் கோயில் திறக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்த போராட்டத்தில், கொழும்பிலிருந்தும் கண்டி பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்தும் நூற்றுக்கணக்கான முறபோக்கு, இடதுசாரி தமிழ்மாணவர்கள், மாவிட்டபுரம் சென்று ஒடுக்கப்பட்ட

தலைவர்கள் சாதாரண தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தால், தமிழ் சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பிக்கும், அதன்பின் "தமிழர் பிரச்சினை" சொல்லி பதவிக்கு வரமுடியாது என்று தெரியும்.அதனால் தங்கள் வசதியான வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்ள எப்படியும் ஏதோ ஒரு வழியில் தமிழர் பிரச்சினைகளைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள்

அந்தப் பிரச்சினைகளைத் தொடர அவர்களின் பாவிப்பு ஆயுதங்களாக, சாதி, சமயம்,பிராந்திய ,இனவெறிகளைத் தூண்டிக் கொண்டேயிருப்பார்கள். அவற்றைப் பாவித்துத் தங்கள் சொகுசு வாழ்க்கையை, தமிழ் மக்களின் எதிரி

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 04



தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

1947 இலிருந்து 1970 வரை நடைபெற்ற அனைத்துப் பாராளுமன்ற தேர்தல்களிலும் "அம்பாறை மாவட்டத் தமிழர்கள்" சார்பில் இப்பிரதேசத்திலிருந்து தமிழ்ப் பிரதிநிதி எவரும் தெரிவு செய்யப் படாமைக்கு இரண்டு முக்கியமான காரணங்களைக் குறிப்பிட முடியும். ஒன்று இப்பிரதேசத்தில் அமைந்திருந்த தேர்தல் தொகுதிகள் யாவும் முஸ்லிம் பெரும்பான்மையாக அமைந்திருந்தமை. மற்றக் காரணம் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனங்கள் யாவும் இப்பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கே வழங்கப் பெற்றதால் வேறு கட்சிகளில் அல்லது சுயேச்சையாகத் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்ட சந்தர்ப்பங்களில் கூட தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பிரச்சாரத்தினால் தமிழர்களுடைய கணிசமான வாக்குகள் தமிழரசுக் கட்சி நிறுத்திய முஸ்லிம் வேட்பாளர்களுக்கே பெற்றுக் கொடுக்கப்பெற்றன.

1949 இல் உருவான தமிழரசுக் கட்சி 1952ம் ஆண்டிலிருந்துதான் தேர்தல்களில் போட்டியிடத் தொடங்கியது. 1952 இல் அக்கட்சி இப்பிரதேசத்தில் போட்டியிடவில்லை. 1960 மார்ச், 1965, 1970 தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்கள் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்ட போதும் பொத்துவில் தொகுதியில் அமைந்திருந்த சம்மாந்துறைப் பிரதேசத் தமிழர்கள் (மல்வத்தை, வீரமுனை, வீரச்சோலை, சவளக்கடை, அன்னமலை, நாவிதன்வெளி, 6ம் கொலனி போன்ற சம்மாந்துறையைச் சூழவுள்ள கிராமங்களில் வாழ்ந்த தமிழர்கள்) சம்மாந்துறையைச் சேர்ந்த எம்.ஏ.அப்துளல் மஜீத்துக்கே வாக்களித்தனர். மஜீத்துக்கே வாக்களிக்கும்படி இம்மக்கள் நிர்ப்பந்திக்கவும் அச்சுறுத்தவும்பட்ட சந்தர்ப்பங்கள் பலவுண்டு. மட்டுமல்லாமல் முன்பு குறிப்பிட்டது போல இப்பிரதேசத்தின் தமிழரசுக் கட்சி முக்கியஸ்தரான அரியநாயகம் அவர்கள் எல்லாத் தேர்தல்களிலும் தொடர்ந்தும் அப்துல் மஜீத்தை ஆதரித்தே தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டார். தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடமும் இதற்கு மறைமுகமான ஆதரவளித்தது. ஒட்டுமொத்தமாகக் கிழக்கு தமிழர்கள் மீது அக்கறையற்ற ஆட்சியின் யாழ் மேலாதிக்க சிந்தனைகளும் அதன் ஏகாதிபத்திய சார்பு வர்க்கக் குணாம்சமுமே தமிழரசுக் கட்சியின் இப்போக்கிற்குரிய அகக் காரணங்களாகும்.

1956 இல் பொத்துவில் தொகுதியில் எம்.எம்.முஸ்தபாவும், கல்முனைத் தொகுதியில் எம்.எஸ். காரியப்பரும், 1960 யூலை பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் எம்.சி.அகமட்டும் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டினர். தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முஸ்லிம் வேட்பாளர்கள் கூட தமிழர்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தனர். இதனால் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் எவரும் வெற்றிபெறும் வாய்ப்பு அற்றுப்போனது.

தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் எவரும் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றிருந்தார்கள் என்பதற்கில்லை. தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களாகத் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற அரசியல்வாதிகள் பலர் கட்சிமாறி அரசாங்கத்தில் இணைந்து கொண்டமைதான் வரலாறு. அதற்குத் தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் களம் அமைத்துக் கொடுத்தது. தமிழரசுக் கட்சியும் வேட்பாளர் நியமனங்களை முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வழங்குவதன் மூலம் ஒரு போலித் "தமிழ்-முஸ்லிம்" உறவைத்தான் தனது கட்சி அரசியல் தேவைகளுக்காகக் கட்டி வளர்த்தது.

தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் எதுவும் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு எவ்வித சமூக, பொருளாதார, அரசியல் நன்மைகளையும் பெற்றுத் தரவில்லை. மாறாக இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளின் தமிழ் விரோதப் போக்கிற்கே அவை துணை போயின. எம்.எஸ்.காரியப்பர் காலத்திலிருந்து இன்றுவரை கடந்த 70 வருட காலமாக இக்கதையே தொடர்கிறது. ஆனால் தமிழரசுக் கட்சி இன்றும்கூடத் தன் தவறை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தமிழரசுக்கட்சியை நம்பிப் பயனேதுமில்லை.

**தேர்தலில் தமிழரசுக் கட்சி நிறுத்திய வேட்பாளர்கள்**

| தேர்தல் ஆண்டு | கல்முனைத் தொகுதி | பொத்துவில் தொகுதி | நிந்தவூர் தொகுதி |
|---|---|---|---|
| 1956 | எம்.எஸ்.காரியப்பர் | எம்.எம்.முஸ்தபா | |
| 1960 மார்ச் | எஸ்.இசற்.எம்.எம்.மௌலானா | | |
| 1960 யூலை | எம்.சி.அகமட் | | |
| 1965 | எஸ்.இசற்.எம்.எம்.மௌலானா | எம்.எஸ்.காதர் | |
| 1968 கல்முனை இடைத்தேர்தல் | எஸ்.மசூர் மௌலானா | | |
| 1970 | ஏ.உ.துமாலெவ்வை | | |

## அம்பாறை மாவட்டத்தின் உருவாக்கம்

1959ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது உருவான அம்பாறை, கல்முனை, பொத்துவில், நிந்தவூர் ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியதாக 10.04.1962 இல் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி துண்டாடப்பெற்று புதிய "அம்பாறை" நிருவாக மட்டம் 1775 சதுர மைல் பரப்பில் உருவாக்கப்பெற்றது. புதிய அம்பாறை மாவட்ட உருவாக்கத்தின் போது சுதந்திர இலங்கையின் போது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் கீழமைந்த விந்தனைப்பற்று பிரிவுக்காரியாதிகாரி பிரிவு (னு.சு.மு"ளு னுளைளைழைெ) மொனராகலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதாக இருந்தது. அப்போது இப் புதிய அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாக உருவா-னதால் இம்மாவட்டம் உருவாவதற்கு இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆதரவு கொடுத்தனர். குறிப்பாக இம்மாவட்ட உருவாக்கத்திற்குக் காலஞ்சென்ற கேத் முதலியார் எம்.எஸ். காரியப்பர் துணை நின்றார். இப் புதிய அம்பாறை மாவட்டத்தின் நிலப்பரப்பு மீதி மட்டக்களப்பு மாவட்டத்தினதும் திருகோணமலை மாவட்டத்தினதும் மொத்த நிலப்பரப்பிற்குக் கிட்டத்தட்டச் சமனாகவிருந்தது.

மேற்குறிப்பிடப்பெற்ற "விந்தனைப்பற்று" பின்னர் விந்தனைப்பற்று தெற்கு (பதியத்தலாவ) மற்றும் விந்தனைப்பற்று வடக்கு (மகா ஓயா) என இரண்டு பிரிவுகளாக்கப்பெற்று பின்பு இவ்விரு பிரிவுகளும் 1976ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பெற்று புதிய அம்பாறைத் தேர்தல் தொகுத-ியில் உள்வாங்கப்பெற்றன. 1971 இல் அம்பாறை மாவட்டத்தில் 30.18 வீதமாக ஆக இருந்த சிங்களவர்கள் 1981 இல் 37.64 வீதமாக இதுவே காரணம்.

1981ம் ஆண்டிற்குப் பின்னர் மகாவலி அபிவிருத்தித் திட்ட வலயம் "சி" இல் 40,000க்கும் மேற்பட்ட சிங்களவர்கள் குடியேற்றப்பெற்று "தெகியத்தக் கண்டிய" எனும் புதிய நகரமும் உருவாக்கப்பெற்ற நிலையில் இன்று அம்பாறை மாவட்டமானது சிங்களப் பெரும்பான்மையாகி வருகிறது.

அதாவது 1962 இல் புதிதாக விளங்கிய அம்பாறை மாவட்டம் இன்று சிங்களப் பெரும்பான்மையாக மாறிவருகிறது.

கல்லோயா திட்டத்தால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் பௌத்த சிங்களப் பேரி-னவாத அரசாங்கங்களுடன் சமரசம் செய்து கொண்டு பௌத்த சிங்களப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்திச் சலுகைகளை பெறுவதற்காக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அதன் பின் விளைவுகள் பின்னாளில் முஸ்லிம்களுக்குப் பாதகமாகவே அமையும் என்ற அனுபவப் பாடத்தை இதன்மூலம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**அம்பாறை மாவட்டம் - குடிசனத்தொகை**

| குடிசன மதிப்பீட்டு ஆண்டு | முஸ்லிம் | சிங்களவர் | தமிழர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1963 | 98,270<br>46.39% | 62,160<br>29.34% | 50,480<br>23.83% | 910<br>0.44% | 211,820<br>100% |
| 1971 | 127,119<br>46.63% | 82,280<br>30.18% | 62,290<br>22.84% | 916<br>0.35% | 272,605<br>100% |
| 1981 | 161,481<br>41.53% | 146,371<br>37.64% | 79,725<br>20.50% | 1,209<br>0.33% | 388,786<br>100% |
| 2012 | 282,484<br>43.59% | 251,018<br>38.74% | 112,750<br>17.40% | 165<br>0.27% | 648,057<br>100% |

முஸ்லிம்களின் "பொன்னன்வெளி" க் கண்டத்து வயல் காணிகள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப் பெற்றமையும், "தீ-கவாபி" புனித நகர்த் திட்டமும், அட்டாளைச்சேனை பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட "ஆலிம் சேனை" யிலிருந்து முஸ்லிம்கள் வெயியேற்றப்பட்டமையும் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் பக்கவிளைவுகளே. இன்று அம்பாறை மாவட்டம் சிங்களப் பெரும்பான்மையாக மாற்றமடைந்து வருவதால் அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை மாவட்ட தேர்தல் தொகுதி நீங்கிய மீதி சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கி முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டமாக வரும் வகையில் கல்முனைக் கரை-யோர மாவட்டக் கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுக்கும் நிலைக்குச் சென்றுள்ளது. எதிர்காலத்தில் அம்பாறைத்தேர்தல் தொகுதியைக் கிழக்கு மாகாணத்தில் இருந்து தாரைவார்க்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் இக்கோரிக்கை அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கோ – ஒட்டுமொத்தமான கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கோ சாதகமானதல்ல. இக் கோரிக்கைக்கு அம்பாறை மாவட்டத் தமிழர்களோ - கிழக்கு மாகாணத் தம-ிழர்களோ சம்மதிக்க முடியாது.

இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளின் தீர்க்கத்தரிசனமற்ற தன்மையும், அவர்கள் அவ்வப்போது ஆட்சியிலிருந்த பௌத்த சிங்கள பேரி-னவாத அரசாங்கங்களுடன் சமரசம் செய்துகொண்டு சலுகைகளைப் பெற்று மௌனம் சாதித்தமையும், அவர்கள் கடைப்பிடித்த தமிழர் விரோதப் போக்கும்,தமிழ் மக்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தாது வெறும் உணர்ச்சியை மட்டுமே ஊட்டும் அரசியலைத் தமிழரசுக் கட்சி மேற்கொண்டமையுமே இன்று இந்தநிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.



# 'தூத்துக்குடி போராட்டம்: மண்ணைக் காப்பதற்கான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம்'

தூத்துக்குடி மக்கள் போராட்டம் மற்றும் படுகொலை குறித்து, நடிகர் சூர்யா ஒரு செயற்பாட்டாளராகப் பேசியிருக்கிறார். அந்த மக்களோடு பேசி அவர்களது கருத்துக்களை பிரதிபலித்திருக்கிறார். அதனை இங்கு தருகின்றோம்.

தூத்துக்குடியில் நடந்த மக்கள் போராட்டம் கொடூரமான உயிர்ப் பலிகளைச் சந்தித்திருக்கிறது. தமிழகத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக ஆங்காங்கே நடக்கிற மக்கள் போராட்டங்களும், அவற்றில் தொடர்ந்து ஏற்பட்டுவருகிற இழப்புகளும் ஒருவிதக் குற்றவுணர்வை ஏற்படுத்துகின்றன.

முடியாதது. பல்வேறு அத்துமீறல்களைச் செய்து, மக்களின் உயிருக்கும், தூத்துக்குடி பகுதியில் உள்ள நிலம், நீர், காற்று அனைத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு தொழிற்சாலையை இத்தனை எதிர்ப்புகளையும் மீறி என்ன காரணத்துக்காகச் செயல்பட அனுமதிக்கிறார்கள்?



போராட்டத்தில் வன்முறை கூடாது என்பதே என்னுடைய நிலைப்பாடு. அதேநேரம், போராடுவதே வன்முறை ஆகிவிடாது. பாதிப்புகள் அதிகரிக்கும்போது போராடுவதுதான் மக்கள் முன்னிருக்கும் ஒரே வழி. மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆட்சியாளர்கள் மக்களுடைய பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தீர்க்க வேண்டும்.

## மகாராஷ்டிரம் நிராகரித்த ஆலை

தூத்துக்குடியில் நடந்திருப்பது ஏதோ சாதிக் கலவரமோ, மதக் கலவரமோ அல்ல. வாழ்வாதாரத்துக்கான நீண்ட காலப் போராட்டம். மக்கள் "ஸ்டெர்லைட் ஆலை"க்கு எதிராக திடீரென்று ஒரு நாளில் வீதிக்கு வந்து போராடவில்லை. 25 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் இந்த ஆலைக்கு எதிராகத் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறார்கள். "ஆபத்து நிறைந்த இந்தத் தொழிற்சாலை எங்களுக்கு வேண்டாம்" என்று மகாராஷ்டிர மாநில மக்களால் நிராகரிக்கப்பட்டு, தமிழ்நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்ட ஆலை இது.

சின்ன குழந்தைகள்கூட "ஸ்டெர்லைட் ஆலை எங்களுக்கு வேண்டாம்" என்று அறிவிப்புப் பலகை ஏந்தி, களத்தில் நின்றனர். ஒரு சமூகத்தில் குழந்தைகள்கூடப் போராட வேண்டியிருக்கிற சூழல் அவமானகரமானது. மக்கள் எதிர்ப்பு, அறிஞர்கள் எதிர்ப்பு, சட்டப் போராட்டம் கடந்து, ஆபத்து விளைவிக்கிற ஒரு ஆலை இயங்குவது நியாயப்படுத்தவே

## தமிழகம் குப்பைத் தொட்டியா?

**ஒரு சமூகத்தில் குழந்தைகள்கூடப் போராட வேண்டியிருக்கிற சூழல் அவமானகரமானது**

படப்பிடிப்புக்காகப் பல முறை நான் தூத்துக்குடி சென்றிருக்கிறேன். அங்குள்ள மக்களிடம் பேசியிருக்கிறேன். சாதரண மக்களிடம் பேசும்போதுகூட,



"ஸ்டெர்லைட் ஆலை வேண்டாம்" என்று சொல்வார்கள். காரணங்கள் இல்லாமல் இல்லை. பாதிப்புகள் அப்படி!

## குப்பைத்தொட்டியா தமிழகம்?

2012லில் மட்டும் 2,552 பேர், தூத்துக்குடி அரசு மருத்துவமனையின், புற்றுநோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

**மக்களின் பக்கம் அரசு நிற்பதுதானே அறம்?**

பெற்றுச் சென்றிருக்கின்றனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் அறிய முடிந்த தகவல் இது. தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதியில் நிலத்தடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் விவசாய நிலங்கள் பாதிப்படைந்திருக்கின்றன. நச்சு கலந்த காற்றைச் சுவாசிப்பதன் மூலம் பல்வேறு விதமான நோய்களால் மக்கள் பாதிப்படைந்திருக்கின்றனர். இதற்கான ஆதாரங்கள் உச்ச நீதிமன்றம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடியின் "ஸ்டெர்லைட்" ஆலைக்கு எதிராக மட்டும் அல்ல; விவசாய நிலங்களையும் வாழ்வாதார இடங்களையும் அழிக்கிற "ஹைட்ரோ கார்பன் திட்டம்", "மீத்தேன் திட்டம்", "நியூட்ரினோ திட்டம்" என்று தமிழக மக்கள் இன்று எதிர்க்கும் பல திட்டங்களும் அடிப்படையில் இந்த மண்ணைக் காப்பதற்கான போராட்டங்கள். தங்கள் வாழ்க்கையைக் காத்துக்கொள்வதற்காக மக்கள் தன்னெழுச்சியாக வீதிக்கு வந்து போராடுகிறார்கள். "ஆபத்துமிக்க திட்டங்கள் அனைத்தையும் ஒரு குப்பைக் கூடைக்குள் தூக்கி எறிவதைப் போல, தமிழகத்தில் செயல்படுத்துகிறார்கள்" என்கிற குற்றச்சாட்டை இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மக்கள் போராட்டங்களை "பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை மூடச்சொல்வது நியாயமில்லை; திட்டங்களை நிறுத்தச் சொல்வது சரியில்லை" என்று கொச்சைப்படுத்துபவர்கள், பல ஆயிரம் மக்கள் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவதற்கு



என்ன பதில் வைத்திருக்கின்றனர்? மக்கள் தங்களுடைய நலனைப் பாதுகாக்கவே வாக்களித்து அரசைத் தேர்ந்தெடுக்கின்றனர். அந்த அரசு மக்களின் பக்கம் நிற்பதுதானே அறம்?

அரசு என்ன சொல்கிறது, "வேலைவாய்ப்பு தருகிறோம்" என்கிறது. "எங்களுக்கு உங்கள் வேலை வேண்டாம். உயிரும் ஆரோக்கியமான வாழ்க்கையும்தான் முக்கியம்" என்று மக்கள் சொல்லும்போது, "உங்கள் நலனுக்காகவே இதைச் செய்கிறோம்" என்ற அரசின் பதில் உள்நோக்கம் கொண்டதாகவே வெளிப்படுகிறது.

அப்படியென்றால், யாருடைய வாழ்வாதாரத்தை அடகுவைத்து, யாருடைய வளர்ச்சிக்கான திட்டங்களை நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள்?

ஒரு பிரச்சினையை எதிர்த்து மக்கள் வீதிக்கு வந்து போராடும்போது, மக்களின் உணர்வுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும். சட்டத்தின் துணை கொண்டும், அதிகாரத்தின் வாள் கொண்டும் அவர்களை எதிர்கொள்ளக் கூடாது. ஆரோக்கியமான உடல் ஒன்றுதான் எளிய மக்களின் ஆதாரம். அதை வைத்துதான் அவர்கள் வாழ்வை எதிர்கொள்கிறார்கள். இன்று வளர்ச்சி என்ற பெயரில் சுற்றுச்சூழலை நாசப்படுத்தும் வகையில் தமிழகத்தில் கொண்டுவரப்படும் திட்டங்கள் பலவும் சுற்றுச் சூழலை நாசப்படுத்தி, எளிய மக்களின் உடலாதாரத்தைக் குலைக்கின்றன.

வயல்களை அழித்து, மலைகளை உடைத்து, வனத்தை நாசப்படுத்தி, ஆறுகளைச் சூறையாடி கொண்டுவரப்படும் எந்தப் பொருளாதார லாபமும் நிச்சயம் மக்களுக்கானவை அல்ல. அது வேறு யாருக்கானதோ என்பது நிதர்சனம். இனி இழப்புகள் மக்களுக்கானதாக இருக்கக் கூடாது. இனியும் இவற்றையெல்லாம் சகித்துக்கொள்ள முடியாது

# மூதாதையரின் காலடிகள்

## ராஜவந்தான் மலை (மூன்றாம் கட்டை மலை)



மூன்றாம் கட்டை மலையெனவே இது மக்கள் மத்தியில் பரவலாக பேசப் பட்டாலும் இலங்கை புவிச் சரிதவியல் படத்தில் ராஜவந்தான் மலை எனக் குறிப்பிடப்படுகிறது.

மூதூர் நகரத்திலிருந்து மூன்று கல் தொலைவில் இந்த மலை காணப்படுகிறது. ஈழத் தமிழர்களின் பூர்வீக வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடைய தொல் பொருளியல் சான்றுகள் காணப்படுகின்றன.

கொட்டியாரப் பிரதேசம் முழுவதும் சோழ ராஜ்ஜியத்தின் வள நாடுகளில் இருந்த்தற்கான சான்றுகள்

## பேரினவாதச் சிந்தியுடையோர் கையில் அகப்பட்ட தமிழர் தொன்மை பேசும் மலை

கல்வெட்டுகளாகவும் கட்டிட அழிபாடுகளாகவும் நிறைந்துள்ள சூழ் நிலையில் ராஜவந்தான் மலையும் அத்தகைய கவனத்தைப் பெறுகிறது.

1980ஆம் ஆண்டு பேராசிரியர் இந்திரபால அவர்களோடு நானும் என் நண்பன் சிறிஸ்கந்தாவும் கொட்டியாரத்தின் பல பகுதிகளுக்குச் சென்று தொல்பொருள் சான்றுகளை தேடிய போது, இந்த மலையின் கிழக்கு அடிவாரத்தில் ஒரு



கல்வெட்டை அறிய முடிந்தது. அந்த கல்வெட்டு சுவஸ்தி சிறி பொறிக்கப்பட்ட ராஜேந்திர சோழன் காலத்து கல்வெட்டு. கல்வெட்டு படியெடுக்கப்பட்டு, யாழ் பல்கலைக்கழக தொல்பொருளியல் கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட நிலையில் யுத்தம் காரணமாக அந்தப் படியயையும் பின்னாளில் பெற முடியாமல் போனது.

1990 ஆம் ஆண்டளவில் அந்தப் பகுதிக்கு சென்றபோது அந்த கல்வெட்டு உடைக்கப்பட்டு அடையாளம் தெரியாமல் ஆக்கப் பட்டமையயை அறிய முடிந்தமை வரலாற்று ஆதாரம் ஒன்று தொலைந்துபோன கதையாக அது மாறியது.

மலையடிவாரத்தில் இருந்த அக் கல்வெட்டில் சுவஸ்தி சிறியும் அருகில் சூலமும் பொறிக்கப்பட்டு இராஜேந்திர சோழனது பெயர் குறிப்பிடப்பட்டு மலையின் மேல் ஒரு கோயில் உள்ளதாகவும் அந்த கோயிலுக்கே மலையில் இருந்து பார்க்கும் போது கண்ணுக்கெட்டிய தூரம் வரையுள்ள வயல் நிலங்கள் சொந்தம் என்பதும் அந்த வருமானத்தின் மூலம் கோயில் நிர்வாகிக்கப்பட வேண்டும் என்பதும் குறிப்புகளாக இருந்தன.

மலையில் ஏறுவதற்கு சிறிய படிக்கட்டுகள் இருந்தன அதன் வழி பயணித்த போது சிதைந்து போன ஒரு கோயிலின் அழிவிடம் அங்கிருந்தமையை அவதானிக்க முடிந்தது. புல்லும் புதருமாக இருந்த்த அந்தப் பகுதி ஒரு கோயிலின் சிதைந்த பகுதிகளே என்பதை உணரலாம்.

மலையின் மற்றொரு பகுதியில் ஒரு சாமியார் அந்த நாட்களில் ஒரு வேல் வைத்து வழிபட்டதை அவ் வழியால் பயணம் செய்தோர் அறிந்திருப்பர்.

மலையின் தொல்லியல் முக்கியத்துவத்தை அறியாத வீதீ நிர்மாணத் துறையினர் சரிவுப் பகுதியை இடித்து கற்களைப் புரட்டிப் போட்டுள்ளனர்.

தமிழர் வரலாறு பேசுகிற ஒரு மலை இன்று பேரினவாத சிந்தனைகளுக்குள் சிக்கி, மலையில் இருப்பது ஒரு விகாரையின் அழிபாடுகள் எனவும் தங்கள் தொல்லியல் நிலம் எனவும் உரிமை கொண்டாடும் பௌத்த துறவிகள் வசம் உள்ளது.

குளக்கோட்ட மன்னன் காலத்தோடும் இந்த மலையும் மலையைச் சூழ்ந்த வயல் நிலங்களும் தொடர்புபட்டுள்ளன. மலையை அண்டி விரிந்திருக்கும் கிணாந்திமலை வயல் வெளியை தாண்டி இறையாத்துவெளி வயல் நிலத்தோடு தம்பலகாமத்து ஆதி கோணைநாதர் கோயிலுக்கு சொந்தமான வயல் நிலங்கள் உள்ளனன.

இந்த மலையோடு இணைந்த குறவன்பட்ட மலை கயல் கொடி மலை ஆகியவற்றில் காணப்படும் கிறிஸ்து சகாப்த காலத்து தமிழ் பிராமிக் கல் வெட்டுக்கள் இப் பிரதேசத்தில் தமிழர் வரலாறு மிகத் தொன்மையானது என்பதை நிருபித்து நிற்கிறது.


மலையின் பெயரிலேயே தமிழர் தொன்மை மறைந்திருப்பதை யாரும் மறுத்து விட முடியாது. நம் வரலாறு குன்றுகளிலும் குகைகளிலும் ஒழிந்து கிடப்பதை ராஜவந்தான் மலை நிருபித்து நிற்கிறது.

மூதூர் பிரதேசம் நம் மூதாதையரின் காலடிகள் நிறைந்த பிரதேசம் என்பதற்கான சான்றுகளில் ராஜாவந்தான் மலையும் ஒன்று என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.



## குளக்கோட்டன் காலத்துடன் தொடர்புடைய ராஜவந்தான் மலை

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்



இந்த மலை பற்றி பல கதைகளும் மக்கள் மத்தியில் வழக்கில் உள்ளன. புதையல்கள் நிறைந்த மலையெனவும் நரபலி கொடுத்தல் மூலம் புதையலை பெறலாம் என்பதும் மக்கள் வாய் மொழிக் கதைகள் மூலம் அறிய முடிகிறது.

சாமியார் ஒருவர் 1960 ஆம் ஆண்டு ஆண் குழந்தை ஒன்றை பூசைகள் செய்து பலி கொடுக்க முயற்சித்த போது மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆறுமுகம் அதனை தடுத்து சாமியாரை கைது செய்ததாக அறிய முடிகிறது.

பண்டைய வரலாறு முதல் அண்மைய வரலாறு வரை ராஜவந்தான் மலை முக்கியமான இடத்தைப் பெறுகிறது.






# ஏழு ஊர் சேர்ந்து எட்டுக் கண்ணகிகளுக்கு எடுத்த தொல்தமிழ்ச் சடங்கு

## கோராவெளி ஸ்ரீ கண்ணகி அம்மன் வருடாந்த திருக்குளிர்த்தி!



மட்டக்களப்பின் வடக்கில், கிரான் ஊரிற்கு மேற்கே, வயல் சூழ்ந்த மருதநிலத்தில், மாந்திரி ஆற்றங்கரையில் அமைந்திருக்கிற கிராமமே கோரவெளி.

கோராவெளியில், மருத மரங்களின் நிழற்சோலையில், மாந்திரி ஆறு வார்த்த மணற்பரப்பில், கொக்கட்டிய மரத்தடியில், வைகாசி திங்கள் பதின்நான்காம் நாள் (28.05.2018) திங்கட்கிழமை மண்டபம் காவல் பண்ணலுடன் ஆரம்பமாகி, வைகாசி திங்கள் பதினைந்தாம் நாள் (29.05.2018) செவ்வாய்க்கிழமை மாலை பௌர்ணமித் திதியில், கோராவெளி ஸ்ரீ கண்ணகி அம்மன் வருடாந்த திருக்குளிர்த்தியாடல் தனிச்சிறப்புடன் நிறைவு பெற்றது.

கோரவெளி கண்ணகி அம்மன் திருக்குளிர்த்தி என்பது, ஏழு ஊர்களிலிருந்து எடுத்துவரப்படுகிற எட்டுக் கண்ணகி அம்மன்களுக்கு தனிச்சிறப்புடன் நடைபெறும் திருக்குளிர்த்தியாடல் ஆகும். இது ஏழு ஊர்கள் ஒன்று கூடி எட்டுக் கண்ணகி



அம்மன்களுக்கு மேற்கொள்ளும் திருக்குளிர்த்தியாடல் ஆகும்!

கோராவெளியில் கண்ணகி அம்மனுக்கான நிரந்தரக் கோயில் இல்லை. "ஆயிரம் மண்டபங் கொண்ட தனக்கு கோயில் தேவையில்லை" என்று கண்ணகி அம்மன் கனவில் வந்து சொன்ன வாக்கை ஏற்று மக்கள் இங்கு கோயில் கட்டவில்லை! அம்மன் வாக்கை மீறி அமைக்கப்பட்ட கோயில் ஒன்று வெள்ளத்தில் இடிந்து போனமையும் வரலாறு. மாந்திரியாறு ஒரு காட்டாறு. அண்மைக்காலத்தில் பந்தல் வடிவிலான விநாயகர் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு நிலவும் கண்ணகி அம்மன் வழிபாடு "தேதியும் வருசமும் அறியா"க் காலத்துப் பழமையானதாகும். வழிபாட்டு மரபும் ஆகம முறைசாராது மரபு வழிப் பூசைப் பொங்கலும் குளிர்த்தியும் என தொல்தமிழ் முறையிலமைந்தது.

குளிர்த்திக்கு முதல்நாள், வைகாசித் திங்கள் பதினான்காம் நாள் (28.05.2018) கேராவெளி அம்மனை, சந்திவெளி கண்ணகி அம்மன் கோயிலில் இருந்து ஊர்வலமாக கொண்டு வந்து, மண்டபங்காவல் பண்ணி, கொக்கட்டிய மரத்தடியில், தாய்ப்பந்தலில் எழுந்தருளச் செய்வர். அதேபோல சித்தாண்டி, முறக்கொட்டன்சேனை, சந்திவெளி, கோரகல்லிமடு, கிரான், கிண்ணையடி, மிறாவோடை ஆகிய ஏழு ஊர்களிலிருந்து கண்ணகி அம்மன்களை ஊர்வலமாக எடுத்து வந்து, மண்டபங்காவல் பண்ணி, தாய்ப்பந்தலைச் சுற்றி வட்டவடிவில் பந்தலமைத்து எழுந்தருளப் பண்ணுவர். அம்மன் ஊர்வலமாக ஊருக்குள் வருகையில் கும்பம் வைத்து வரவேற்று தங்களின் விளைபொருட்களை வழங்குவர் மக்கள்.

வைகாசி திங்கள் பதின்நான்காம் நாள் (28.05.2018) திங்கட்கிழமை நோர்ப்பு நெல்குற்றல், அம்மன் அபிஷேகம், அம்மன் பூசை, நோர்ப்புப் பூசை, நோர்ப்பு ஒப்புக் கொடுத்தல் ஆகிய மரபுவழி நிழ்வுகள் நடைபெற்றன.

வைகாசி திங்கள் பதினைந்தாம் நாள் (29.05.2018) செவ்வாய்க்கிழமை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், கும்பம் வைத்தல், விநாயகப்பானை எடுத்தல், விசேட அலங்கார பூசை என்பன இடம்பெற்றதுடன் மாலை திருக்குளிர்த்தியாடலும் வாழி பாடலும் இடம்பெற்று வருடாந்த திருக்குளிர்த்தி நிறைவுற்றது.

கோராவெளயில் இரு நாள் நடைபெற்ற

## சிலப்பதிகாரத்தின் மாண்பு பேணும், கோயில் இல்லாத கூட்டுத் திருவிழா இது.

திருக்குளிர்த்திச் சடங்கில், நாற்பதுக்கு மேற்பட்ட பூசகர்கள் மந்திரம் மற்றும் கண்ணகி அம்மன் காவியம் - குளிர்த்திப் பாடல்களைப் பாட, உடுக்கு, பறை வாத்தியங்கள் முழங்க, அடியார்களின் அரோகரா முழங்க, நாற்பதுக்கும் மேற்பட்ட தெய்வமாடிகள் தெய்வமாடி, சாட்டை பெற்று, வாக்குச் சொல்ல என பாரம்பரிய தொல்தமிழர் வழிபாட்டு முறையின் தனிச்சிறப்பை காணமுடிந்தது.

ஏழு ஊர்களிலிருந்தும் திரண்டு வந்த மக்கள், கண்ணகி அம்மனை வழிபட்டு, கண்ணகி அம்மனுக்கு தொண்டூழியம் செய்து, நேர்த்திக்கடன் செலுத்தி, வாக்குக் கேட்டு, பொங்கலிட்டு அம்மனுக்குப் படைத்து, குளிர்த்தி பார்த்து வழிபடுதல் என்ற தொல்தமிழ் வழிபாட்டு முறையைக் காணமுடிந்தது அங்கு.

வருடம் ஒரு முறை ஏழு ஊர் மக்கள் ஒன்று கூடி ஆனால் தனித்தனிப் பந்தல் அமைத்து வழிபாடு இயற்றுதல், ஆகம முறைசார தொல்தமிழ் வழிபாட்டு முறையை தொர்டந்தும் பேணுதல், தங்கள் விளை பொருள்களை அம்மன் திருக்குளிர்த்திக்கு காணிக்கையாக வழங்குதல், உணவு சமைத்து வந்தோர்க்கு அமுது வழங்குதல் என்ற வகையில் இது ஒரு தனித்துவமான பண்பாட்டு மரபேயாகும்.

விவசாயம், மந்தை மேய்த்தல் மற்றும் சேனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் தனித்துவமான பண்பை எடுத்துக்காட்டும் ஒரு வழிபாட்டு முறையாக இவ்வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது. இத்தனித்துவமான வழிபாட்டு மரபை பேணிப்பாதுகாப்பதும் காலமாற்றங்களிற்கு ஈடுகொடுத்து தொடர்ந்து நிலைத்து நிற்கச் செய்வதும் நம் கடமையகும்.



கண்ணகி அம்மன் குளிர்த்தி, ஒரு பிரதேசத்து விவசாயிகளின் வழிபாட்டு மரபு மட்டுமல்ல. பரந்து பட்டு வாழும் தமிழர்களின் தனித்துவமான வழிபாட்டு

கிரான் விஜய்

மரபும் பண்பாட்டு அடையாளமுமாகும். அதிலும் கோராவெளியில் நிலவி வரும் வழிபாட்டு மரபு தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாகக் கொள்ளப்பட வேண்டும். இவ்வழிபாட்டு முறையினூடே மக்களின் வரலாறும், சமூகச் செய்திகளும் மறைந்து கிடைக்கின்றன.

தனித்துவமான தமிழிசை மரபைப் பேணலும் தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரம் போற்றப்படுதலும் கண்ணகியை தங்கள் தாய்த்தெய்வமாக நோக்குதலும் இவ்வழிபாட்டு முறையில் காணப்படும் சிறப்பம்சமாகும். சிலப்பதிகாரத்தை, கண்ணகி கதையை இங்குள்ள சாதாரண மக்கள் அறிந்து பாடுதலும் கதையாகக் கூறுதலும்,



கண்ணகி அம்மனை வழிபடுதலும் தனிச்சிறப்பான செய்திகளாகும்.

இயற்கைச் சூழலை நேசிக்க வேண்டும், இயற்கைச் சூழலைப் பாதுக்காக்க வேண்டும், மக்கள் சமூகமாக ஒன்று கூடி வாழவேண்டும் என்னும் உலகளாவிய புதிய சிந்தனைகளைப் பிரதிபலிக்கின்ற இவ்வழிபாட்டு முறையை பேணிப்பாதுகாப்பது அனைவரின் கடமையாகும்.

# அன்று இருந்தது எங்கள் கடை இன்று இருப்பது கடன்காரர் கடை...






மட்.மாநகர சபையின் பொதுச் சந்தையில் 1960 களில் மட். வரியிறுப்பாளர்-நுகர்வோர் பலர் பங்குதாரர்களாக சேர்ந்து தங்களுக்கு முடியுமான தொகையில் ஐந்து ரூபாவிலிருந்து ஐம்பது ரூபா வரையுள்ள பங்குகளை கொடுப்பபனவாகக் கொடுத்து, பொதுச்சந்தைக்குள் அன்றைய நகரசபையின் அனுசரனையுடன் பெரியதொரு மளிகைக்கடையையே உருவாக்கினார்கள். அதற்கு “எங்கள் கடை“ என பெயரிட்டு மிக மலிவான விலையில் பொருட்களை பெறக்கூடியதாக, அது அக்காலத்தில் மிகப் பிரபல்யம் அடைந்திருந்தது.

அக்கடையின் முகாமையாளராக அவ்வேளையில் அளவையாளராக இருந்த திமிலை மகாலிங்கம் என்பவர் செயற்பட்டார். “எங்கள் கடை”யை மிகவும் பாராட்டத்தக்க விதமாக நடாத்தி வந்தார். பின்பு இவர் கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்றுச் சென்றுவிட்டார்.

இந்த எங்கள் கடையின் வரவு செலவுக் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் பரிசீலிக்கப்பட்டு, பங்குதாரர்களின் பங்குகளுக்குரிய ஆதாயப்பணம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டு வந்தது. சிலர் தங்கள் ஆதாயப்பணத்துடன் முதலையும் பெற்றுக் கொண்டு தங்களது பங்காளர் என்ற உரிமத்தை ரத்து செய்தும் கொண்டார்கள். சிலர் கொடுத்த பங்குகளை கடையின் சிறப்பான செயற்பாட்டைக் கண்டு மீளப் பெறாமல் நன்கொடையாகவும் வழங்கி வைத்தனர். இப்படி வரியிறுப்பாளர்களின் ஒற்றுமையின் நிமித்தம் தங்களுக்கென்று ஒரு பெரிய மளிகைக் கடையையே சந்தைக்குள் “எங்கள் கடை“ என்ற பெயரில் நடாத்தி வந்தனர். இன்றய முதியவர்களுக்கு இப்போது “எங்கள் கடை” ஞாபகம் வரலாம்.

இன்று சந்தையில் “நுண்கடன் திட்டம்“ சந்தை வளாகத்துக்குள் நடைபெறக் கூடாதென மாநகர சபையால் தடை செய்யப்பட்ட விளம்பரம் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

நிறுவன ரீதியாக நடைபெறும் நுண்கடன் மாத்திரமல்ல, சந்தை வியாபாரிகளுக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பிரகிருதிகளின் செயற்பாடும் அங்கு மிக மோசமாக தலையெடுத்துள்ளது. சந்தை வளாகத்துக்குள் மாத்திரம் வட்டிக்கு பணம் கொடுப்பவர்களின் தொகை அறுபதுக்கு மேல் இருக்கிறது.

அது சரி இக் கட்டுரையின் நோக்கமென்ன? வருகிறேன் விடயத்துக்கு.

மேற்படி கடனை வழங்கும் முதலீட்டாளர்கள் 100நாள் திட்டத்தில் வழங்குகிறார்கள். பத்தாயிரம் ரூபாவை சந்தையில் வியாபாரம் செய்யும் ஒருவருக்கு வழங்கினால், பணம் பெறுவோர் 150 ரூபா வீதம் நாளாந்தம் பணம் வசூலிக்கவரும் கடன்



வழங்குனரிடம் கொடுக்க வேண்டும். 100நாள் ஆனதும் 15000 ரூபாவை கடன் கொடுத்தவர்கள் வசூலித்து விடுவார்கள். இதனால் இவர்களுக்கு 5000 ரூபா வட்டிப் பணமாக கிடைக்கிறது.

மட்.பொதுச்சந்தையில் வியாபாரம் செய்யும் பெரும் பாலானோர் இவ்வாறு கடன் வழங்குபவர்களிடம் பணம் பெற்றே தங்கள் வியாபாரத்தை கொண்டு நடாத்தி வருகிறார்கள்.

இவர்கள் இம் முறையில் வட்டிக்கு பணம் வாங்கி வியாபாரம் செய்கின்ற காரணத்தினால் உற்பத்தி செய்யும் வியாபாரிகளிடம் 1000 ரூபாவுக்குரிய பொருட்களை பெறும் போது இப் பொருளுக்கு வட்டியும் சேர்த்து 1500 ரூபாவாகிறது.


சந்தை வியாபாரிகளின் மூலதனமில்லா, ஏலாத்தன்மையால் இந்த வட்டியை நுகர்வோரே சுமக்க வேண்டியுள்ளது.

இதனால்தான் மட். பொதுச்சந்தையில் சகல பொருட்களுக்கும் கூடுதலான விலை நிர்ணயிக்கப்படுகின்றது. பின் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் மட். பொதுச்சந்தையில் விற்பனை செய்யும் பொருட்களின் விலைகளைவிட கல்லடி, நாவற்குடா, காத்தான்குடி, ஆரயம்பதி போன்ற இடங்களிலுள்ள சந்தையில் விலை மிக மிக மலிவாகவே இருக்கிறது.

“எங்கள் கடையை“ நடாத்திய “மட். வரியிறுப்பாளர் சங்கம்“ இப் பிரச்சனைக்கு தீர்வுகாண முன் வரலாம்தானே. பேருக்கு மட்டும் சங்கம் இருந்தால் போதுமா? வரியிறுப்பாளர் சங்கம் விழித்தெழ வேண்டும். சந்தையிலுள்ள இப் பிரச்சனைகளையும், அரங்கம் இதழ் 13ல் தரப்பட்ட இறைச்சிக் கடைகளுக்கான தேவை பற்றியும் கரிசனையெடுத்து தீர்வு கண்டிட சங்கம் முயற்சிக்க வேண்டும். இதுவே அவதானியாரின் இவ்விதழ் அவா.

## மட்டு. வின்சன்ற் பாடசாலையில் தரம் 5 மாணவர்களுக்கான மொழிவிருத்திச் செயலமர்வு.



மட்டக்களப்புக் கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பாகப் பல செயற்பாடுகள் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. க.பாஸ்கரன் அவர்களின் சிறப்பான வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தரம் 5இல் கற்கும் மாணவர்களின் மொழிவிருத்திக்கெனப் பல செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
இந்தச் செயலமர்வு எதிர்வரும் ஆனி மாதம் 05,06 ஆம் திகதிகளில் மட்டு வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை மாணவர்கட்கு நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு கடந்த மாதம் 16,17 ஆம் திகதிகளில் மட்டு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியிலும் 23,24 ஆம் திகதிகளில் மட்டு.ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம் மற்றும் மட்டு அமிர்தகழி சி.சி.வி.ம.வி மாணவர்கட்கும் 30.05.2018 இல் மட்டு கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்திலும் நடைபெற்றது.
மேலும் 01.06.2018இல்(இன்று) மட்டு கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திரு.த. யுவராஜன் (உ.க.ப-தமிழ்) அவர்கள் இதில் பிரதான வளவாளராகக் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

O/L, A/L

ICT, GIT ( Tamil and English medium)

Classes at Colombo

Mr. Varman

(BSc in Computer Science- Hons)

Contact : 070 3200 693



# ஆளே நீங்க எவடம்? இடப்பெயர்கள் கூறும் கதைகள்


வரலாறு, சரித்திரம் என்றெல்லாம் என்னென்னவோ எல்லாம் ஆராய்கிறோம். ஆனால் மிகச்சிறிய விடயம் கூட, பென்னம்பெரிய வரலாற்றைக் கொண்டிருக்கலாம். அவ்வளவு ஏன், உங்கள் ஊரின் பெயரை யோசித்திருக்கிறீர்களா? அதுவே ஆயிரம் கதை சொல்லும்.

தொன்மங்கள் வேறுபட்டாலும், பொதுவாக ஊர்கள், இயற்கைக் காரணிகளை மையமாகவே வைத்தே தோற்றம் பெறுகின்றன. மரமோ, புவியியல் அமைப்போன்றோ காரணமாக பெயர் பெறாத ஊர்கள் மிகக்குறைவு. இப்படிப் பெயர் பெற்றிருக்கின்ற மட்டு-

## அட்டாளைச்சேனையா சின்ன முல்லைத்தீவா?

அம்பாறை மாவட்டங்களின் முக்கியமான சில ஊர்களை மாத்திரம் இங்கு பார்க்கலாம்.

பழைய மட்டக்களப்பின் (சம்மாந்துறை)



எல்லையான செங்கற்படை ஆற்றின் அக்கரையில் இருந்த பற்று (நிர்வாகப்பிரிவு) ஆதலால் அக்கரைப்பற்றுக்கு அந்தப்பெயர் வந்தது. இந்தப் பற்றின் தலைமை நகரே இன்றைய அக்கரைப்பற்று நகர். அதன் பழைய பெயர் கருங்கொடித்தீவு. கருங்கொட்டி என்றால் ஒருவகை நீர்க்கிழங்கு. அதுபோல, சேனைக்காவலில் பயன்படும் உயரமான காவலரண் “அட்டாளை“ என்று அழைக்கப்படும். அட்டாளை அமைந்திருந்த சேனை அட்டாளைச்சேனை. அது முன்பு சின்ன முல்லைத்தீவு என்று அழைக்கப்பட்டது. ஆரையம்பதி முன்பு ஆரப்பற்றை என்று அழைக்கப்பட்டது. இயற்கையாக நீரோடும் ஓடையை “ஆரப்பற்றை” என்று சொல்லும் மட்டக்களப்புத் தமிழ். சிலர், ஆரை எனும் கீரை வளர்ந்த இடம் என்று சொல்லுவார்கள்.

சம்மாந்துறை என்பது சம்பான்துறை என்ற பெயர் மருவி உருவானது. சம்பான் என்றால் சிறுபடகுகள். பழைய மட்டக்களப்பு நகர் சம்மாந்துறையில் அமைந்திருந்தபோது, வாவி வழியே வாணிகம், போக்குவரத்தில் ஈடுபட்ட சம்பான்கள் தரித்த துறை என்பதால் இது சம்பாந்துறை. (தெற்கேயுள்ள அம்பாந்தோட்டையும் இதேதான்; சம்பான்தோட்டம்ஸ்ரீ ஹம்பாந்தோட்ட என்று சிங்களத் தோற்றம் காட்டும்.)

**மைங்கணான் மகிழறிவன்**

வில் என்றால் ஈழத்தமிழில் சிறுகுளம் என்றும் பொருள். கிழக்கில் அப்படி சிறுகுளங்களை அண்டி உருவான நிறைய ஊர்கள் வில் என்ற பெயரைக் கொண்டிருக்கின்றன. ஒலுவில் முன்பு ”ஒல்லிவில்” என்று இருந்தது என்கிறார்கள். ஒல்லி ஒருவகை நீர்த்தாவரம். ஒலு என்றால் தாமரை என்ற சிங்களச்சொல்லை வைத்து, அது சிங்கள ஒலுவில என்பாரும் உண்டு. கோளாவில் என்னும் ஊர்ப்பெயர் கூழாவில்லிலிருந்து திரிந்திருக்கக்கூடும். கூழா என்பதும் ஒருவகை மரம் (Cordia spp.). அதேபோல் பொத்துவில் என்ற பெயருக்கு புற்றுவில், பொதுவில், போதிவில் (போதி - அரசமரம்) என்றெல்லாம் வேர்ச்சொல் காணலாம்.

மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் சொல்வது போல், தம்பதி நல்லாள் எனும் சோழ இளவரசியின் பெயரால் அமைக்கப்பட்ட ஒரு வில் தான் தம்பதிவில். இன்று தம்பிலுவில் என்று அழைக்கப்படுகின்றது. தம்பலிவில்லிலிருந்தோ (தம்பலி - மருதமரம்) சிங்கள தெம்பிலிவில்லிலிருந்தோ (தெம்பிலி - செவ்விளநீர்) கூட அப்பெயர் வந்திருக்கக்கூடும். எருவில் எருக்கு தாவரத்தாலோ இறைப்பதாலோ அப்பெயரைப் பெற்றிருக்கலாம். ஏதோ வரி (இறை) பெற்ற ஊர் இறைக்காமவில் ஊர். இன்றைய இறக்காமம். காமம் என்றால் வேளாண்மை (கமம்) சார்ந்த ஊர். பழுகாமம், பழுவன் எனும் வேடனால் பெயர்பெற்றது என்கிறார்கள்.

மருதமரம் இலங்கையில் பரந்து காணப்படும் தாவரங்களுள் ஒன்று. அதன் பெயராலேயே, மருதமுனை, சாய்ந்தமருது ஆகிய ஊர்கள் தோன்றின. மகிழமரத்தால், மகிழூர், மகிழடித்தீவு ஆகிய ஊர்களும், கிரான் எனும்

## ஓந்தாஜ் எனும் ஒல்லாந்து அதிகாரி தங்கியிருந்த இடம் எது? பாண்டவர் கோயில் இருந்த இடம் எது?

புல்லால், கிரான், கிரான்குளம் ஆகிய ஊர்களும் முறையே அப்பெயர்களைப் பெற்றன. இப்படியே காரைமரங்கள் அடர்ந்த தீவு காரைதீவு என்றும், தேத்தாமரங்கள் நிறைந்த தீவு தேத்தாத்தீவு என்றும் இரு ஊர்கள் பெயர்களைப் பெற்றன.

பாலமுனை, குறிஞ்சாமுனை நொச்சிமுனை, வீரமுனை ஆகிய ஊர்கள், முறையே பாலை, குறிஞ்சா, நொச்சி, வீரை ஆகிய மரங்கள் நிறைந்து காணப்பட்ட முனைகள். இவற்றில் வீரமுனை என்பது, பழைய மட்டக்களப்பு அரண்மனையின் காவல்வீரர்கள் நின்ற வீரர்முனை என்று சொல்கிறது பூர்வசரித்திரம்.

கொக்குநெட்டி எனும் மரங்கள் அடர்ந்த சோலை கொக்கட்டிச்சோலை. மண்டு மரம் நிறைந்த ஊர் மண்டூர். வம்மி மரமருகே மடுவொன்றைக் கொண்டிருந்த வம்மிமடு எனும் கிராமம் பிற்காலத்தில் நிந்தவூர் என்று ஆனது. நிந்தம், கபாடகம் என்பன, கண்டி அரசின் காலத்தில் அரசால் மக்களுக்கோ, தனிநபர்களுக்கோ ஏகபோக உரிமையாக வழங்கப்பட்ட நிலங்களாகும். நிந்தவூர் அருகே அட்டைகள் நிறைந்த பள்ளம் அட்டப்பள்ளம் என்று ஆனது.

கல்லாறு என்றால் கற்கள் நிறைந்த ஆறு. பெரிய கல்லாறு, சின்னக்கல்லாறு எனும் இரு ஊர்கள் ஆற்றின் கரைகளில் உருவாகின. சின்னக்கல்லாற்றில் ஒல்லாந்தர் கோட்டை கட்டியபிறகு, அது கோட்டைக்கல்லாறு என்று ஆனது. மட்டக்களப்பு வாவி(கடலேரி)யை ஆறு என்று பேச்சுவழக்கில் குறிப்பிடுவது



வழக்கம்.

மாட்டுப்பட்டிகள் இருந்த பகுதி பட்டிருப்பு என்றும், பாண்டவருக்குக் கோயில் இருந்த பகுதி பாண்டிருப்பு என்றும் பெயர் பெற்றது. காத்தான் குடியிருந்த இடம் காத்தான்குடியிருப்பு. கலைவஞ்சி குடியிருந்த இடம் களுவாஞ்சிக்குடியிருப்பு. சித்தாண்டி எனும் சித்தர் ஒருவர் குடியிருந்த இடம் சித்தாண்டிக்குடியிருப்பு. முருகன் அல்லது ஆறுமுகத்தான் எனும் பிரமுகர் குடியிருந்த இடம் ஆறுமுகத்தான்குடியிருப்பு. மண்முனையில் உருவான புதிய குடியேற்றம் புதுக்குடியிருப்பு. சேனைக்குடியிருப்பு, ஒரு சேனைக்கருகே உருவான குடியிருப்பு. வாழைச்சேனையும் அப்படித்தான். மாமரத்தடியில் உருவான பள்ளிவாசல், மாவடிப்பள்ளி. மரப்பொந்து ஒன்றைக்கொண்டிருந்த ஓட்டைமா அருகே உருவான குடியேற்றம் ஓட்டமாவடி.

களப்பு அல்லது கடலுள் நீண்டிருந்த நிலப்பகுதிகள் முனை எனப்படும். கல்முனை, மண்முனை, (முறையே கல்லும் மண்ணும் மண்டிக்கிடந்த முனைகள்) சொறிக்கல்முனை என்பது கனிமப்பாறைகளைக் கொண்டிருந்த முனை. நாப்பிட்டி(நா-நடு) முனை என்பதே பின்பு நற்பிட்டிமுனை ஆனது என்கிறார்கள். பிட்டி என்றால் பிட்டம் போல் பருத்திருப்பது, மேடாக இருப்பது என்று பொருள். மலுக்கம்பிட்டி (பூர்வசரித்திரத்தின்படி மண்கல்பிட்டி), மன்னன்பிட்டி (மனம்பிட்டி) என்பன பிட்டிகளால் பெயர் பெற்றவை.

நிலக்குறிகளாலும் சில ஊர்ப்பெயர்கள் தோன்றுவதுண்டு. திருக்கோவில், மட்டக்களப்பின் முதற்பெரும் தேசத்துக்கோவில் என்பதால் கோவில் ”திருக்கோவில்”, அது அமைந்த தலமும் அதே பெயர் பெற்றது. ஒல்லாந்தர் (அ.ஆங்கிலேயர்?) பண்டைய மட்டு. நகருக்கு முதன்முதலாக வந்து ஏறிய இடம் துரைவந்தேறியமேடு என்று அறியப்பட்டு, இன்று துரைவந்தியமேடு எனப்படுகின்றது. களுதேவாலயம் (பிள்ளையார் கோயில்) அமைந்த ஊர், களுதாவளை என்றாகியிருக்கலாம். களுவனின் தாவளம் என்றும் சொல்லப்படுகிறது. தாவளம் என்றால் தங்குமடம் என்றும் பொருள் உண்டு. களுவன் என்ற வேடனொருவனால் பெயர் பெற்ற இன்னொரு இடம் களுவன்கேணி. ஓந்தாஜ் எனும் ஒல்லாந்து அதிகாரி தங்கியிருந்த மடம், ஓந்தாச்சிமடம். சங்கமக்குருக்கள் தங்கியிருந்த மடம், குருக்கள்மடம். குருநாதமடம் என்றும் அது சொல்லப்படுகின்றது. இதேபோல் வீரசைவ சங்கமக்குருக்கள் வாழ்ந்த பதி, சங்கமன்கண்டி. அவர்கள் ”தம்பட்டர்” என்று வாழ்த்தப்பட்டு குடியேற்றப்பட்டதாக சொல்லப்படும் ஊர், இன்று தம்பட்டை என்று அழைக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பு மன்னரின் வர்த்தகக் குடியிருப்பு எது?

திமிலர் துரத்தப்பட்ட தொன்மத்துடன் தொடர்புடைய ஊர், திமிலதீவு. அவர்கள் சந்தித்த வெளி, சந்திவெளி என்றும், அவர்கள் ஏறாது - தாண்டிவராது நின்றவூர் ஏறாவூர் என்றும், அவர்களை வென்ற வீரர்கள் வந்தாறிய இடம், வந்தாறுமூலை என்றும் தொன்மங்கள் சொல்கின்றன. எனினும் சில ஒல்லாந்துக் குறிப்புகளில், வந்தாறுமூலை, ”பண்டாரமூலை” எனப்படுகின்றது. பண்டாரம் - கோயில் திருத்தொண்டர்கள், தவசிகளைக் குறிக்கும்.

செட்டிபாளையம், தமிழ்நாட்டுச் செட்டிமார் பாளையமிட்டு குடியிருந்த இடம். சவளக்கடை – பண்டைய மட்டு.நகரின் அருகிருந்த வர்த்தகக் குடியிருப்பு. ஜவுளிக்கடை என்றோ சவளை மீன் கடை என்றோ விரித்துப்பார்க்கலாம். பாலமீன்மடு, பாலை மீன்கள் நிறைந்திருந்த மடு. குறு(கிய) மணல் கொண்ட வெளி குருமண்வெளி. வேலாயுதரின் வெளி, வெல்லாவெளி.

இப்பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். இந்தக்கட்டுரையில் சொல்லப்பட்டதற்கு வெளியே இன்னும் நிறைய ஊர்கள் இருக்கின்றன. உங்கள் சொந்தவூருக்கு வேறேதும் பெயர்க்காரணம் இருக்கலாமா, அல்லது வேறேதும் மரபுரைகள் இருக்கின்றனவா என்பதை ஒருதடவை சிந்தித்துப்பாருங்கள். அந்தச்சிந்தனையே நிறைய வரலாற்றுக்கதவுகளைத் திறந்துவிடக்கூடும்.

# கடன் பெற்றார் நெஞ்சோடு பரிதவிக்கும் படுவான்கரை மக்கள்

## மாதக் கடன், கிழமைக் கடன் என்று அப்பாவி மக்களுக்கு காலனாகும் நுண்கடன்

அந்தா! வீதியால போகின்றவர் கடன் வழங்குகின்ற தம்பிதானே? என கனகசபையும் வவுணதீவு சந்தியில் நின்று விநாயகமூர்த்தியுடன் கேட்க, அவரும் ஓம் என்று பதிலளித்தார். நாள்தோறும் படுவான்கரை மக்களைத் தேடி வருகின்ற கடன் வழங்குகின்றவர்களுக்கு எண்ணிக்கையில்லை. அத்தனை பேர் வருகின்றார்கள். என்னன்வோ நிறுவன பெயரையெல்லாம் சொல்லுகின்றனர். கிழமைக்கடன், மாதக்கடன் என்றும் பேசுகின்றார்கள். சாட்சிக்கு நாலுபேரைக் கூப்பிடுகின்றனர். கையொப்பத்தினையும் தேவையான பத்திரத்தில் வாங்குகின்றனர். அவர்களுக்கு தேவையான ஆவணங்களை பெற்றுக்கொள்கின்றனர். சந்தாப்பணமென்றும் வாங்குகின்றனர். கடன் தொகையையும் சிறிது நாளிலே வழங்கிவிடுகின்றனர். காலடிக்கு வருகின்ற கடவுளப்போல கடன் வழங்கவருகின்றவன் கடனெடுக்கும் வரைக்கும் தென்படுகின்றான். கடனெடுத்துவிட்டால் கடன்பெற்றவர்களுக்கு, கடன் வழங்கியவன் காலனைப் போல தென்பட ஓடி ஒழிகின்றமைதான் நாள்தோறும் நடந்தேறுகின்றன.



2007க்கு முன்னர் கடன்பெறுவது குறைவு, அவ்வாறு பெறுவதென்றால் சொந்தக்காரர்களிடமும், அறிமுகமானவர்களுடனுதான் பெறமுடியும். ஓரிருவர் அரசவங்கிகளில் பெறுவதையும் காணமுடிந்தது. நெல்லை உற்பத்தி செய்கின்ற மண்ணில் அரிசிக்கடைகள் இருக்கவில்லை. தற்போது கண்ணுக்குத்தெரியும் இடமெல்லாம் அரிசிக்கடை முளைத்திருப்பது போல, கண்டிராத பெயர்களிலும், உச்சரிக்கமுடியாத சொற்களிலும், நினைத்திராத கடன்கடைகள் அதிகரித்திருக்கின்றன. மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் அலுவலகமும், வீட்டுக்கு வீடு, மரத்திற்கு மரம் கடன் நிறுவன அலுவலகங்களும் கிழமைக்கு கிழமை, மாதத்திற்கு மாதம் முளைத்து மறைகின்றன. அவ்விடத்தில் பெண்களின் கூட்டமும் நிரம்பிவிடுகின்றன. என கனகசபை விநாயகமூர்த்தியுடன் கூறிக்கொண்டு நின்றார்.

கனகசபையும், சமூகத்தில் அதிக அக்கறை கொண்டவர். மக்கள் நிதானம்தப்பி வாழ்ந்துவிடக்கூடாது. அவதியுற்றிரக்கூடாது, ஏமாந்துவிடக்கூடாது, வளங்கள் சுரண்டப்படக்கூடாது, பாதக விளைவை எதிர்கொண்டிரக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையானவர். கூலிவேலை செய்து குடும்பத்தினை வழிநடத்திய குடும்பமொன்றில் பிறந்தவர்தான் கனகசபை. இதனால் தனது தந்தை தம்மை வளர்ப்பதில் எதிர்கொண்ட துன்பதுயரங்களையும், தான் அனுபவித்த துன்பங்களும் அவருக்கு நன்கு தெரியும். கடனைப்பெற்று, கடனை அடைக்க மற்றொரு கடனைப்பெற்று, அக்கடனை அடைக்க மற்றுமொரு கடனைபெற்றும் அவற்றினையும் வழங்க முடியாமல் ஓடி ஒழிக்கின்றவர்களையும், தற்கொலை செய்தவர்களையும் அனுபவத்தில் கண்டவர். இதனால் இன்னுமொரு மரண ஓலம் கடனால் ஏற்பட்டுவிடக்கூடாது. என்பது கனகசபையின் ஆதங்கம். இதற்காக யாரைக் கண்டாலும் இதுபற்றி உரையாடுவது, கடன்பெற எண்ணியிருப்பவர்களுக்கு ஆலோசனை வழங்குவது, பொது இடங்களில் பேசுவது, போன்றவற்றில் அதிகமான நேரத்தினைச் செலவிடுகின்றவராக கனகசபை செயற்படுகின்றார். அவ்வாறான செயற்பாட்டாளரன கனகசபை, விநாயகமூர்த்தியை வவுணதீவு சந்தியில் சந்தித்து பேசிக்கொண்டிருந்தபோது, கடன்வழங்குகின்றவர் ஒருவர் வீதியால் செல்வதனை கண்டுவிட்டார். அதன்பின்னர் தன்னுடைய கவலையை விநாயகமூர்த்தி

**நெல் விளையும் பூமியில் அரிசிக்கடையும் கடன் வழங்கும் கடையும் மரத்துக்கு மரம் முளைத்திருக்கின்றன**

முன்னிலையில் கொட்டித்தீர்த்தார்.

ஒரு மரத்தின் கீழ் காலை 8மணிவேளையில் பெண்கள் கூட்டமாக நின்றனர். அதேவழியால் 1மணிக்கு வருகின்றபோதும் அதே கூட்டம் அவ்வாறே நின்றது. அவ்விடத்தில் நின்று ஏதும் பிரச்சினையோ என்று பக்கத்தில் நின்ற வேலுப்பிள்ளையை கேட்ட போது, இங்கு பிரச்சினையில்லை, வீட்டிலதான் பிரச்சினை இருக்கு. வேலைக்கு சென்று, மதிய உணவு உண்பதற்காக வரும் கணவனுக்கு சாப்பாடில்லை. பாடசாலை விட்டுவரும் பிள்ளைக்கு சாப்பாடில்லை. அதற்கு பிறகு வீட்டில் என்ன நடக்கும்? இதுபற்றி விபரிக்கத் தேவையில்லை. ஏன்? வீட்டில் சாப்பாடில்லை? என வேலுப்பிள்ளையிடம் கேட்க, ஆரம்பித்தார்

**படுவான் பாலகன்**

அவர் புராணத்தை!
வாசல் தேடி வந்திருக்கு ''கிழமை, மாதக்கடன்''. பெண்களைத்தான் குறியும் வைத்திருக்கு. ஒருவர் கடனெடுக்க குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமாம். அக்குழுக்களில் உள்ள ஒருவர் கடனை செலுத்தவில்லையாயின், அந்தக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் கடன்செலுத்தும் வரை அவ்விடத்தினைவிட்டு செல்லமுடியாதாம். இதனால் சாட்சிக்கு கையெழுத்து வைத்தவனுக்கும் தலையிடி. இப்படியான சம்பவம்தான் இங்கு நடந்தது.

### கூட்டம் கூட்டமாக கடனாளியாகும் மக்கள்

மூன்று குழுக்களைச்சேர்ந்த 15க்கு மேற்பட்ட பெண்கள் நிற்கின்றனர். இவர்களில் மூவர் கடன்செலுத்த வரவில்லையாம். அவர்கள் கடனைச் செலுத்தினால்தான், இங்குள்ளவர்கள் வீடுசெல்லலாமாம். அதுதான் இவ்விடத்தில் கூட்டமாக நிற்கின்றனர். கடன்பெறுவதற்கு கையெழுத்து இட்டமையினால் கடன்வழங்குனரின் சிறையில் சிக்கியுள்ளனர். இதனால் குடும்பத்திற்குள்ளே பிரச்சினை. அதுபற்றிய கவலை கடன்வழங்குனருக்கு இல்லை. கடன் அதிகமாக வழங்கிவிட்டால், கடன்பணத்தினை உரிய திகதியில் வாங்கிவிட்டால் கடன்வழங்குனரின் கீழ் வேலைசெய்யும் ஊழியனுக்கு சலுகை. இதனால் அவனும் கடன் வழங்குவதிலே ஆர்வத்தினை செலுத்துகின்றான். கடலை வண்டில் வீதியால் ஒவ்வொருநாளும் வருகைதந்தால், கடலையை வாங்கவேண்டுமென்ற தூண்டுதலும், விருப்பமும் ஏற்படுவதுபோன்று, கடன்வழங்குனரும் ஒவ்வொரு நாளும்



வருகின்றபோது கடன் பெறவேண்டுமென்ற சிந்தனையும் மக்கள் மத்தியிலே உருவாகின்றது. அதிலும் பெண்களே இவ்வலையில் சிக்கிவிடுகின்றனர்.

சுயதொழில்களை செய்து, வாழ்வாதாரங்களை உயர்த்திக்கொண்டு குடும்பங்களை மகிழ்ச்சிகரமாக கொண்டு செல்வதேற்கே கடன் அதிகம் வழங்கப்படுகின்றன. ஆனால் ஆவணங்களில் சுயதொழில் என்பதனை பொறித்துவிட்டு, கடனைப்பெற்று வீண்செலவுகளை மக்கள் செய்கின்ற நிலையினாலே கடனாளிகளாக்கப்பட்டு, நிம்மதியற்று, குடும்பங்களிடையே பிணக்குகள் ஏற்பட்டு, தற்கொலைகள் வரை செல்கின்ற சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

“ஆசை காட்டி மோசம் செய்வது“ போன்று கடன் வழங்குவதும் பாரிய வர்த்தகமாக மாறியதான நிலையில், வறுமையோடு நிற்கின்ற மக்களை நாடி, அவர்களின் குடும்ப பின்னணி, வேறு நிறுவனத்தில் கடன் பெற்றாரா? கடனைப்பெற்று உரிய செயற்பாட்டை மேற்கொள்கின்றாரா? என்பது பற்றிய எவ்வித மேற்பார்வைகளையோ, ஆய்வுகளையோ செய்யாமல், வட்டி வீதங்களையும் முறையாக குறிப்பிடாமல் கடன்களை வழங்குகின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. இதனால் பாதிக்கப்பட்டு நிற்பது, ஏழைமக்களே. இவர்களை வைத்தே பலர் பணக்காரர்களாக வாழ்கின்றனர். என கனகசபை பேசி முடித்தார்.

சமூகத்தில் பல பிரச்சினைகள், துன்பதுயரமான சம்பவங்கள் நடந்தேறுவதற்கு நுண்கடனும் பாரிய பிரச்சினையாகவே இருக்கின்றன. இவ்விடயத்தில் மக்கள் விழிப்படைய வேண்டியதும், விழிப்பு அடைய வைக்க வேண்டிய கடமையும் பலருக்கு உண்டு. இதற்காக கனகசபைபோன்ற பலர் முன்வரவேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

## குச்சவெளி ஸ்ரீ செம்பீஸ்வரர் ஆலயத்தில் சிவவேள்வி, பராசக்தி யாகம் மற்றும் ஐந்தீவேட்டல் நிகழ்வுகள்

இந்தியாவின் காஸ்மீர தேசத்திலே இருந்து வருகை தந்ததாகக் கூறப்படும் ஒருவரால் 1938ம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி செம்பிமலையின் உச்சியில் உள்ள செம்பீஸ்வரப்பெருமான் ஆலயத்தில் கடந்த 25.05.2018ம் திகதி காலை ஸ்ரீ கௌரிஅம்மன் சிலை, முருகனின் வேல் என்பன பிரதிஸ்டை செய்துவைக்கப்பட்டன.

சிவவேள்வி, பராசக்தியாகம், ஐந்தீவேட்டல் முதலான யாகங்கள் இந்து தமிழ் வேதாகம முறைப்படி அங்கு நடாத்தப்பட்டன.





இந்த ஆலய வரலாற்றில் ஆலய ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிஜீ அவர்களால் இந்து தமிழ்வேதாகம முறைப்படி இவ்வாலய மூலமூர்த்தி மகாகும்பாபிசேகம் செய்துவைக்கப்பட்ட பின்னர் இரண்டாவது தடவையாக தமிழ்வேத மந்திரம் பக்தர்களாலும் உச்சரிக்க இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.



# இந்துப் பண்பாட்டில் கவனிக்கப் பட வேண்டிய பக்கம்-4

**(மட்டக்களப்பின் இந்துத் தெய்வங்களையும் வழிபாட்டினையும் மையப் படுத்திய சில சிந்தனைகள்)**

இந்தியத் துணைக்கண்டம் 4500 வருடங்களுக்கு மேற்பட்ட பண்பாட்டு வரலாற்றையுடையது. இந்து மதத்தின் புரதான கூறுகள் யாவும் இந்தியத் துணைக்கண்டத்தில் பரந்து வாழ்ந்த குடிகளினிடத்திலேயே இருந்தன. கி.மு. 2500 க்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்திலே இந்து பண்பாட்டின் மூலக்கூறுகள் காணப்படுகின்றன. கி.மு. 1500 ஐச் சேர்ந்த வேத கால நாகரிகத்திலேயே இந்து நாகரிகம் சார்ந்த



இலக்கியம் எமக்கு கிடைக்கின்றது. இவ்வண்ணம் பண்டைய இந்திய தொல்குடிகளும் சிந்துவெளி நாகரிகத் திராவிட மக்களும், இந்தியாவுக்குள் வந்து வேதங்களை உருவாக்கிய ஆரிய மக்களும் இணைந்து உருவாக்கிய நாகரிகமே இந்திய நாகரிகம் ஆகும். அதன் ஒரு கூறே இந்துப்பண்பாடு ஆகும்.

வேதங்களின் சாரமான உபநிடதங்கள் தத்துவ சிந்தனைகளை வளர்த்தன. வர்ணாச்சிரம கோட்பாடுகள் உருவாகின.

பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், என நான்கு வருண பாகுபாடுகள் தோற்றம் பெற்றன. வேதம் ஓதவும், ஓதுவிக்கவும் தகுதியுடையோர் பிரம்மனின் தலையிலிருந்து தோன்றிய பிராமணரே என்ற கருத்துருவாக்கம் பெற்றது. அரசர்க்கு அவர்களின் தயவு தேவைப்பட்டது. படைப்பலம் அரசிரிடமும் அறிவுப் பலம் பிராமணரிடமும் இருந்தது. யாகங்கள் புரிய பிராமணர் அரசனுக்குதவினர். யாகத்தில் மிருகங்கள் பலியிடப்பட்டன. நால் வருணப் பாகுபாட்டையும், பலியிடலையும் எதிர்த்த ஒரு சமயத்தை கௌதம புத்தர் தோற்றுவித்தார். அதற்குப் பொது மக்களிடம் பலத்த ஆதரவு கிடைத்தது. மௌரிய அரச ஆதரவினால் பௌத்தம் பிராமணியத்தை நலிவடையச் செய்தது.

மீண்டும் குப்தர் ஆட்சிக் காலத்தில் பிராமணியம் புது வலுப்பெற்றது. புத்தரின் கோட்பாடுகள் பலவற்றை உள்வாங்கி மேலெழுந்த பிராமணியம் தன்னைத் தக்க வைத்துக்கொண்டது.

**செந்நெறி சார் இந்துமரபு செந்நெறி சாராத இந்து மரபை தன்னுள் இணைத்துக் கொண்டதையே நாம் சமஸ்கிருத மயமாக்கம் என்கிறோம்**

இந்து மதத்தின் பிரதான நூல்களாக 3 நூல்கள் முன்வைக்கப்பட்டன. ஒன்று உபநிடதங்கள். மற்றையது பகவக்கீதை. அடுத்தது பிரம்ம சூத்திரம். இவை மூன்றும் இந்து மதத்தின் பிரஸ்தான திரயங்களாகின.

இதன்பின் இந்தியா முழுவதும் சமஸ்கிருதமயமாக்கல் நடந்தேறியது. வடஇந்தியாவிலிருந்து கிழக்கிந்தியா, மேற்கிந்தியா, தக்கணம், தென்னிந்தியா ஆகிய பகுதிகள் அனைத்திற்கும் வைதீக நெறியான பிராமண நெறி பரவியது. இதனைச் சமூகவியலரான சீனிவாசன் சமஸ்கிருத மயமாக்கம் அல்லது ஆரிய மயமாக்கம் என்றழைப்பார்.



ஏனைய நாடுகளுக்குப் பரவிய பிராமண நெறி அப்பகுதிகட்கு நான்கு வர்ணக் கோட்பாடுகளைப் பரப்பியதுடன், வடமொழியினையும் வேத ஆகம நெறி சார்ந்த தமது பெரும்தெய்வக் கோட்பாட்டையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு சென்றது.

அவ்வப்பிரதேசங்களில் ஏற்கனவே இருந்த வழிபாட்டு முறைகளை பெரும் தெய்வ நெறிகள் தம்முடன் இணைத்துக் கொண்டன. தமிழ் நாட்டு மாரி அம்மன் சிவனின் மனைவியாக இணைக்கப்பட்டாள். தமிழ்நாட்டு முருகன் வடநாட்டு சுப்ரமணியனின் மறு உருவமானான். தமிழ் நாட்டு வைரவர் சிவனின் இன்னொரு முகூர்த்தமானார்.

தமிழ் நாட்டின் பல கோயில்கள் ஆகமக் கோயில்களாக்கப்பட்டன. அங்கிருந்த பூசாரிகளின் இடத்தை குருக்கள்மார் எடுத்துக் கொண்டனர்.

வேதநெறியும் சைவநெறியும் பிராமணரினதும் அரசுக்களினதும் மேலோரதும் நெறியாயிற்று.

மக்களுக்கும் கடவுளுக்குமிடையே

**தமிழ் நாட்டின் பல கோயில்கள் ஆகமக் கோயில்களாக்கப்பட்டபோது அங்கிருந்த பூசாரிகளின் இடத்தை குருக்கள்மார் எடுத்துக் கொண்டனர்**


தரகர்கள் உருவாகினர். இறைமொழி சமஸ்கிருத மொழியே என்ற கருத்து கட்டமைக்கப்பட்டது. கடவுளிலிருந்து பொதுமக்கள் அந்நியமாயினர். பெரும் தெய்வங்களும், வழிபாடுகளும், கிரியைகளும் பொருளாதாரத்திலும், அதிகாரத்திலும், அறிவிலும்




மேம்பட்டிருந்த பெரும் மனிதர்களுக்கு மாத்திரமே உரிமையுடையதானது.

சமஸ்கிருத மயமானதும் ஆகம நெறிப்பட்டதும் பிராமணரால் பூசை பண்ணப்பட்டதுமான தெய்வங்கள் பெரும் தெய்வங்கள் எனப்பட்டன. அத்தெய்வங்களுக்காக அரசர் எழுப்பிய பெரும் கோயில்களும், சிற்பங்களும், இசையும், கோயிலுக்குள் ஆடப்பட்ட இறைவன் பற்றிய நடனங்களும் பெரும் பாரம்பரிய இந்துக் கலைகள் எனவும் இந்துப்பண்பாடு எனவும் போற்றப்பட்டன. பின்னாளிலும் இத்தகைய பெரும் பாரம்பரியப் பண்பாட்டையே இந்துப் பண்பாடு என கட்டமைத்தனர்.

நமது இந்து அறிஞர்களால் இவ்வகையில் வேதம், உபநிடதம்,




பகவக்கீதை, பிரம்ம சூத்திரம், திவ்விய பிரபந்தம், தேவாரம் திருவாசகம் என்பனவே இந்து மதத்தின் பிரதான இலக்கியங்களாகவும் கூறப்பட்டன. இம் மரபே செந்நெறி இந்து மரபு (Classical Tradition) எனவும் அழைக்கப்பட்டது.

இச்செந் நெறி மரபு அரசர்களாலும், நிலவுடமையாளராலும், பிராமணராலும், பெரு வணிகர்களாலும் சமூக அமைப்பின் மேனிலை சமூகத்தராலும் போஷிக்கப்பட்டது. நிறுவனம் மயம் பெற்றது. பெரும் கோயில்களை இது மையமாகக் கொண்டது. முக்கியமாக பிராமணரை மாத்திரமே இது அர்ச்சகராக ஏற்றுக் கொண்டது.

செந்நெறி சாராத இந்து மரபு (Non Clssical Hindu Tradition) பெரும்பாலும் நாட்டார் பண்பு சார்ந்திருந்தது. சிறுதெய்வக் கோயில்களையும், தெய்வங்களையும் மையமாகக் கொண்டது. பிராமணர்களை அர்ச்சகர்களாகக் கொள்ளாது உள்ளூர் பூசாரிகளை அர்ச்சகர்களாகக் கொண்டது.

செந்நெறி சார் இந்துமரபு செந்நெறி சாராத இந்து மரபை தன்னுள் இணைத்துக் கொண்டது. இதனையே நாம் சமஸ்கிருத மயமாக்கம் என முன்னர் கூறினோம்.

(தொடரும்)

## தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம்



இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் என்பன அனுஷ்டிக்கப்படவிருப்பதாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது குருபூஜை தினமாகிய மே மாதம் 31 ஆம் தேதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை “இளம் சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அறநெறிக் கல்வி தேவையென உணர்வீர்!” என்ற தொனிப்பொருளில் நாடு முழுவதும் இது அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அவரால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இவ்வாரத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்த புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களது வழிகாட்டல் மற்றும் அமைச்சினது ஒருங்கிணைப்புடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 15

இப்படியாகத்தானே மட்டக்களப்பு படையணிப் பெடியளும் பெட்டையளும் போராட வந்து தங்கட மண்ணல்லாத இடங்களில தேசியம் எண்ட பேரில போராடி வீரச்சாவடைஞ்சினம். வகைதொகையில்லாம இப்பிடி உயிர்குடுத்த பிள்ளையள் தாயைக்கண்டதோ,? தேப்பனக்கண்டதோ? இல்ல கூடிப்பிறந்ததுகளக் கண்டதோ? ஒண்டுமில்ல. கரும்புலியெண்டாக்கூட கடைசியா ஒருக்கா தாய் தேப்பனப் பாத்திட்டு வரச்சொல்லி விடுவினம். இதுகள் ஏதுமற்றதாய் போய் மண்ணுக்காக மாண்டதுகள். இவை செத்த பிறகுகூட பெற்றார் வந்து குழியில ஒரு பிடி மண்போடக் கிடைக்கேல்ல எண்டத விட அவையள் வீரச்சாவெண்ட செய்தியும் உடன போய்ச்சேராது அப்பிடி சேரமுடியாம அவயளின்ர பிறந்த ஊரில நிலவரம்

**வகைதொகையில்லாம இப்பிடி உயிர்குடுத்த பிள்ளையள் தாயைக்கண்டதோ,? தேப்பனக்கண்டதோ?**

பயங்கரமா இருக்கும்.

முதன்முதலா பூநகரியில நடந்த ஒப்பிரேசன் தவளை தாக்குதல்லதான் ஆனையிறவிலும் பாக்க அதிகம் பிள்ளையள் வீரச்சாவு. அதாவது மட்டக்களப்பு போராளியள் ஒரு தொகையாக வீரச்சாவு. அவையட பெற்றார் கிடையாது. அப்ப தலைவர் சொன்னாரெண்டு மட்டக்களப்பு போராளியளின்ர உடலை மாவீரர் துயிலுமில்லத்துக்க தனியாக ஒரு பக்கமா அடக்கம் செய்தினம். நாங்களும் இருந்த சனங்களும் எங்கட பிள்ளையளப்போல அவைக்கும் மண்போட்டு அடக்கம் செய்தம்.

பிறகு மாவீரர் நாளுக்கு கூட்டிவரக்கூடிய பெற்றோரைக் கூட்டிக் கொணந்து அவைக்கு விளக்கேத்திச்சினம். அதிலயும் பல பெற்றோர் வர முடியேல்ல. பிறகு பிறகு எல்லாச் சண்டையளிலயும் இப்பிடி மட்டக்களப்பு பிள்ளையள் வீரச்சா வெண்டா அவையள முள்ளியவளைக்கோ அலம்பிலுக்கோ கொண்டுபோய் அடக்கம் செய்தினம்.

மட்டக்களப்பு மகளிர் படையணியில பொறுப்பா நிண்ட ஒரு பிள்ளை கடல்புலிப் பெடியன காதலிச்சு விவரமும் குடுத்திருந்தாள். ஆனா அந்தப்




பெடியன் ஒரு தாக்குதல்ல வீரச்சாவு. பிள்ளையும் கொஞ்ச நாளா அழுது திரிஞ்சாள். பிறகு விட்டெறிஞ்சு போட்டு, அவளும் களத்துக்குப் போயிற்றாள் வேற என்ன? ஆனா மட்டக்களப்பு போராளியள் அப்பிடி விடுற ஆக்களில்ல. ஒரு போராளி முன்வந்து அவளைக் கலியாணஞ் செய்திட்டான்.

மட்டக்களப்பு போராளியளுக்கை திருமண வயது கடந்தும் போராட்டச் சூழலுக்கு இறுகிப்போய் நிண்டவை அதிகம். படுகாயப்பட்டும் மேலால பாக்க நல்ல மனிசரப்போல திரிஞ்சவையும் அதிகம். ஆனா இயக்கத்தில் முப்பது வயது கடந்திட்டா திருமணஞ்செய்து போட வேணுமெண்ட கட்டுப்பாடு இருந்தது. இந்தக்கட்டுப்பாடு

**கரும்புலியெண்டாக்கூட கடைசியா ஒருக்கா தாய் தேப்பனப் பாத்திட்டு வரச்சொல்லி விடுவினம். இதுகள் ஏதுமற்றதாய் போய் மண்ணுக்காக மாண்டதுகள்**

ஏன் வந்தது எண்டதுக்கும் ஒரு கதை இருக்கு. அது இதுக்குள்ள சம்பந்தப்படயில்ல. அதால வேண்டாம். கன பேர் அப்பிடி கலியாணஞ் செய்ய வேணுமெண்ட நிலையில வன்னி, மன்னார், யாழ்ப்பாணத்துப் பெட்டையளக் கலியாணஞ் செய்திச்சினம். சந்தோசமாகவும் வாழ்ந்தினம் ஏனெண்டா இவையளின்ர காயங்கள் காரணமாக மீண்டும் களத்துக்கு போற தகுதியை இவை இழந்திட்டினம்.

மட்டக்களப்பு பொறுப்பாளர்களில பெண்பொறுப்பாளர்கள் பண்டைக்கால மன்னர்களைப்போல சொகுசாகவே இருந்தனர். அவர்கள் பொறுப்பாளர் ஆவதற்கான தகுதி எதுவோ நானறியேன்; பிள்ளைகளுடன் ஒண்டா சாப்பிடவோ இரவு உறங்கவோ மாட்டினம். அவர்களது மலசல கூடத்துக்கும் பிள்ளைகள் தண்ணீர் கொண்டு போய் வைக்கவேணும்.

இது எனக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. ஏனெண்டால் எனக்குத் தெரிந்த பொறுப்பாளர்கள் நளாயினியோ கவிதாவோ தேன்மொழியோ அப்படியானவளில்ல. நளாயினி படுகாயப்பட்டு வந்திருந்தபோது அவளுக்கென்று ஒரு முட்டை அவித்து வைப்பேன் அவள் வந்ததும் “பிள்ளையள் எல்லாரும் சாப்பிட்டாச்சா“ என்று கேட்டபிறகுதான் சாப்பிட உட்காருவாள். அந்த ஒரு முட்டையை எட்டாகப்பகிர்ந்து பிள்ளையளுக்கும் கொடுத்தே தின்பாள். ஏனையவர்களிடமும் அப்படித்தான் பழக்கம் இருந்தது. இங்கே அதற்கு நேர்மாறாக இருந்துது. ஒருபோதும் தனது ஆடைகளை மற்றவர்கள் கழுவ அனுமதிக்கிறதில்லை. அவயள் இங்கோ இவயளின்ர ஆடையளை துவைத்து மினுக்கி குடுக்க பிள்ளையள் பணிக்கப்பட்டினம். இவர்கக்கென சுவையான உணவு தனியாக சமைக்கப்பட்டது. எனக்கும்கூட திறமான உணவே கிடைச்சது. தற்செயலாக பொறுப்பாளர் வெளியே போயிருந்த சமயம் அங்கிருந்த பணிப்பெண்ணாக நிண்ட போராளிப் பெண்ணிட்ட,

“நீங்க சாப்பிட்டாச்சா எண்டு கேட்டன் .அவள்,

“ஆம்“ என்றாள். என்ன சாப்பாடு என்று கேட்டேன் . அவள் நாணிக் கொண்டே,

“சோறுதான்“; என்றாள். நான் விடாப்பிடியாக,

“கறி“ எண்டு கேட்டன். “பூசணிக்காய் சம்பல்போட்டோம்“; எண்டாள். நான் மீன்குழம்பும் பருப்பும் அப்பளப் பொரியலும் சாப்பிட்டிருந்தன் அதே உணவுகள்தான் பொறுப்பாளற்ற மேசையிலும் இருந்துது. எனக்கு ஏன்டா கேட்டமெண்டு போச்சு

## இணையத்தில் வந்த கருத்துக்கள் சில...

**S.Thanikaiyan**

மிக அருமை
எனது ஊர் பற்றி நீண்ட காலமாக எனக்கு இருந்த சந்தேகங்கள் இக்கட்டுரை மூலம் ஓரளவு குறைந்துள்ளன. நன்றி

**S.Sasitharan**

அறிவும் உணர்வும் புணர்வுகொண்டு எழும் கருத்துப்பிரசவத்துக்கு தாங்கள் அமைத்திட்ட துணிவு கொண்ட அரங்கத்திற்கு வாழ்த்துக்களும் வாஞ்சைகளும் உரித்தாகுக

நினைவு நல்லது வேண்டும்
ஆங்கே அனுபவமும் பக்குவமும் வேண்டும்
அவை நிரம்பவே தங்களிடம் உண்டு
நெருங்கினது கைப்படும்

வாழ்த்துக்கள்

**Mrs. Anpalagan**

அருமை

**S.Sasitharan**

வைத்திய நிபுணர் கடம்பநாதனின் சிந்திக்க வைக்கும் கருத்துக்கள் மிக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

உளநல ஆலோசனை மற்றும் வழிகாட்டல்சேவைகளின் பற்றாக்குறையும் அவை இன்னும் ஒரு சிலரின்/சில அமைப்புகளின் கைகளில் மட்டுமே தங்கி இருப்பதுவும், பரவலாக்கப்படாமையும் கூட துர்பாக்கியமான நிலையாகும். பிரச்சினைகளை கையாளுதல், முகாமை செய்தல் என்பன , இல்லங்களிலும், பாடசாலைகளிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும், சமய வழிபாட்டு தலங்களிலும் சிறார்களுக்கும், இளையோருக்கும் உதவி தேவைப்படுவோருக்கும் சொல்லிக்கொடுக்கப்படுதல் குறைவடைந்துள்ளது.

இளைய தலைமுறை பயனுள்ள பொழுதுபோக்குகள் , விளையாட்டு என்பவற்றில் காட்டும் ஈடுபாடு புலன் சார் சீரொழுக்கத்திற்கும் சூழ்நிலைகளை முகம் கொடுத்து வெளிவரவும் உதவும்; ஆனால் தற்கால பிரத்தியேக வகுப்புகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் , கல்வி முறைமையும், போட்டி நிறைந்த பரீட்சை கட்டமைப்பும் , கற்றல் கற்பித்தல் முறைமைகளும் கூட இதற்கு தடையாக உள்ளன. பெற்றோர்களின் மனப்பாங்கும், முதிர்ச்சி இல்லாத எதிர்காலம் பற்றிய பயங்களும் கூட தற்கொலைகளுக்குரிய காரணிகளாக அமையக்கூடும். முழுமையான சமூக விழிப்புணர்வு அனைத்து மட்டங்களிலும் இதுதொடர்பாக முன்னெடுக்கப்படுத்தல் அவசியமாகின்றது

ச. சசிதரன்
மாணவ ஆலோசகர்-கி . ப. க / தொழில் வழிகாட்டல் ஆலோசகர் -விவேகானந்த தொழில்நுட்ப கல்லூரி

**Judy Ramesh Jayakumar**

மிக பயனுள்ள முயற்சி
அனர்த்தங்ளிற்கு பின்னான இந்த காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட சகல சமூகத்தவரும், தமது உள,சமூக, பொறுளாதார,பண்பாடு, கலாச்சாரம்,ஆன்மீக தளங்களில் எந்த பாகுபாடும் ,குரோத மனப்பான்மையும் இன்றி பரந்த மனப்பான்மையுடன் வாழ, அண்ணன் சீவகன் அவர்தம் பாரியாருடன் ஆரம்பிக்கும் அரங்கம் சிறக்க வாழ்த்துக்கள்

**Jayanthan A.**

Seemma Info….

**Js Akash**

வாழ்த்துகள்

**Remesh**

நன்றி வாழ்த்துகள்



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## கிழக்கிலங்கையின் கவிதாயினி அனார்

### நாட்டார் பாடல் பாடிய வாயில் மிளகாயை புதைத்தனர்

பெரிய நீலாவணையும் ஒரு கடல் சார்ந்த பிரதேசம். சுனாமி கடற்கோள் இந்த ஊரையும் விட்டு வைத்திருக்கவில்லை. அவ்வேளையில் கடல் பெருக்கெடுத்துவரப்போகிறது என நம்பியவர்கள் அம்பாறை எல்லை வரையில் ஓடியிருக்கிறார்கள். ஓடத்தவறியவர்கள் ஜலசமாதியானார்கள். அம்பாறை வரையில் சென்றவர்களின் குடும்பத்தினர் இல்லத்தில்தான் நான் தங்கியிருந்தேன்.


கவிஞர் அனார்

அன்பர் நற்குணசிங்கம் சுனாமியில் அவ்வூர் மக்களும் அயலூர்களில் வாழ்ந்தவர்களும் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள் என்ற சோகக்கதையை எனக்கு சொல்லியிருக்கிறார்.

1978 இல் கிழக்கு மாகாணத்தை சூறாவளி தாக்கிய பொழுதும் மட்டக்களப்பு, கல்முனை, பாண்டிருப்பு பிரதேசங்களுக்கு வந்துள்ளேன். அவ்வேளையில் மக்கள் எதிர்நோக்கிய சிரமங்களை வீரகேசரியில் எழுதியிருக்கின்றேன்.

அலுவலக நிருபர்களாக அக்காலப்பகுதியில் பணியாற்றிய டீ.பி.எஸ். ஜெயராஜ், ஆர். திவ்வியராஜன் ஆகிய இருவரும் மட்டக்களப்பில் தங்கியிருந்து செய்திகளை சேகரித்தார்கள். மட்டக்களப்பு நிருபர் கதிர்காமத்தம்பி அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செய்தி சேகரிப்புக்கு உதவினார்.

இவர்களை மட்டக்களப்பு வீரகேசரி கிளை அலுவலகத்தில் சந்தித்த வேளையில் என்வசம் தந்துவிட்ட செய்தி அறிக்கைகளை எடுத்துச்சென்று வீரகேசரி ஆசிரியபீடத்தில் கொடுத்திருக்கின்றேன். பிரதம ஆசிரியராக இருந்த (அமரர்) க. சிவப்பிரகாசம் அவர்களிடம் ஜெயராஜும் திவ்வியராஜனும் தெரிவித்த தகவல்களையும் சொல்லியிருக்கின்றேன்.

பூகோளத்தில் இலங்கையில் கிழக்குமாகாணம் அமைந்துள்ள பிரதேசம் எப்பொழுதும் இயற்கைக்கு சவாலாகவே வாழ்கிறது. சூறாவளி வந்தபொழுதும் சுனாமி வந்த பொழுதும் உலகவரைபடத்தை பார்த்தவர்களுக்கு இது புரியும். இந்தோனேஷியாவில் காற்றிலும் கடலிலும் கருக்கொள்ளும் இயற்கையின் சீற்றம் தனது கொடிய கரங்களை இலங்கையின் கிழக்கு மாகாணம் நோக்கியும் அகலமாக விரிக்கும்.

எனக்கு வடமாகாணத்துடன் உருவான தொடர்புக்கு கல்வியும் இலக்கியமும்தான் காரணம். ஆனால், கிழக்குடன் ஏற்பட்ட தொடர்புக்கு இந்த இயற்கை அநர்த்தங்களே காரணம். சூறாவளி வந்த காலத்தில் அதனால் பாதிக்கப்பட்ட உறவினர்களுக்காக வந்தேன். சுனாமியின் பொழுது பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே வந்தேன். அன்றிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கும் வந்துகொண்டிருக்கின்றேன். ஆளுமையுள்ள இலக்கியவாதிகளை தந்துள்ள இந்தப்பிரதேசத்திலிருந்து உருவான இளம் தலைமுறைப்படைப்பாளிகளும் சளைத்தவர்கள் அல்ல. எனக்கு பெரியநீலாவணை மாணவர் சந்திப்பு முடிந்ததும், மாலை வேளையில் சற்று ஓய்வு இருந்தது. சாய்ந்தமருதுவில் கவிதாயினி அனார் அவர்களையும் பார்க்க விரும்பினேன்.

இதுபற்றி நண்பர் நற்குணசிங்கத்திடம் சொன்னதும். “முகவரியைத் தாருங்கள் அழைத்துச் செல்கின்றேன். “ என்றார். “அனார் வீட்டை இலகுவாக கண்டுபிடிக்க அவரது தொலைபேசி இலக்கம் கிடைத்தால் முடியும்.“ என்றேன். “எப்படி அவருடைய இலக்கம் பெறப்போகிறீர்கள்...?“ என்று நற்குணசிங்கம் கேட்டார்.

கொஞ்சம் பொறுங்கள். மின்னல் வேகத்தில் எடுக்கின்றேன். எனச்சொல்லிவிட்டு அவுஸ்திரேலியாவிலிருக்கும் ஆழியாளுக்கும் நடேசனுக்கும் கிளிநொச்சியிலிருக்கும் கருணாகரனுக்கும் மின்னஞ்சல் அனுப்பினேன். அந்த நேரம் அவுஸ்திரேலியாவில் இரவு வேளை. சில செக்கண்டுகளில் கருணாகரன் கைத்தொலைபேசியில் கவிதாயினி அனாரின் இலக்கம் தந்தார்.

யார் இந்த அனார்...?
சாய்ந்தமருதைச் சேர்ந்த இஸ்ஸத் ரீஹானா எம். அஸீம். ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமன்றி தமிழகத்திலும் நன்கு அறியப்பட்ட இளம்தலைமுறைக் கவிதாயினி. சிறுவயதிலேயே சாய்ந்தமருது கிராமத்தின் நாட்டார் பாடல்களை உள்வாங்கிக்கொண்டு அவற்றை தனது மழலை மொழியில் பாடிய சிட்டுக்குருவி. ஏன் அவருடைய பால்யகாலத்தை சிட்டுக்குருவியுடன் ஒப்பிடுகின்றேன் என்றால் அந்தப்பருவம் சுதந்திரமானது. சிட்டுக்குருவியும் சுதந்திரமான பறவை.

அனார் தமது குழந்தைப்பருவத்தை கடந்துவிட்ட பின்னரும் மறைக்காமல், மறக்காமல் இந்த இளம் யுவதிப்பருவத்திலும் வெள்ளை உள்ளத்தோடு சொல்கிறார். “ என்னுடைய குழந்தைப்பருவத்தை, மென்மையான கனவு போன்ற உலகம் சூழ்ந்து வியாபித்திருந்தது. அந்தக்கனவுக்குள்ளே தும்பிகளைப்போல அலைந்து திரியும் சிறுவர் படைக்கு நானே தலைவியாக இருந்தேன்.

அணில் மிச்சம் வைத்த பாதிப்பழங்களை தின்பதற்காகவோ, அணிலுக்கென எந்தவொரு பழத்தையும் விட்டுவைத்துவிடக்கூடாது என்ற பொறாமையினாலோ என்னுடைய மாலைப்பொழுதுகள் அனைத்தும் மரங்களிலேயே கழிந்தன.“

இந்த வரிகள் அனாருடைய ““ பொடு பொடுத்த மழைத்தூத்தல் - கிழக்கிலங்கை நாட்டார் காதல் பாடல்கள் “ என்ற அவருடைய நூலில் பதிவாகியிருக்கிறது.

கவிஞர்களின் இளமைக்காலம் குறிப்பாக பால்ய பருவம் இயற்கையுடன்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

இணைந்திருக்கிறது. பாரதியும் தாகூரும் எமக்கு இதுவிடயத்தில் சிறந்த தகவல். எப்பொழுதும் வெற்றிலை குதப்பிக்கொண்டு பன்பாயில் அமர்ந்து நாட்டார் பாடல்களை பாடும் அந்த மூதாட்டி பெத்தாதான் அனாரின் மானசீகக்குரு. அவரிடம் கற்றதையும் பெற்றதையும் வீட்டிலும் வெளியிலும் பாடித்திரிந்த இந்த இளம் சிட்டுக்கு “ அப்படிப்பாட வேண்டாம்“ என்று வீட்டில் தண்டனையும் கிடைத்திருக்கிறது.







எப்படி...? அடித்தார்களா...? இல்லை! தோப்புக்கரணம் போடச்சொன்னார்களா...? இல்லை! முழங்காலில் நிற்கச்சொன்னார்களா....? இல்லை! எந்த வாயிலிருந்து மழலை மொழியில் அந்த பெத்தா என்ற மூதாட்டியின் நாட்டார் பாடல் பிரசவமானதோ அந்த வாயில் இரண்டாக பிளந்த பழுத்த மிளகாயை வைத்து தேய்த்திருக்கிறார்கள். மனதில் உள்வாங்கிய அந்த நாட்டார் பாடல்களை அந்த மிளகாய் எரிவுக்குப்பயந்து பாடாவிட்டாலும், அவை அனாரை விட்டு மறையவே இல்லை. அனாருக்குள் அந்த பெத்தா போன்று வாழ்ந்திருக்கிறது.

அந்தப்பாடல்களை அனார் வளர்ந்து கவிஞை ஆனதும் நூலாக்கியிருக்கிறார். ஆனால், அதனைக் காண்பதற்கு அந்த மிளகாய் வைத்து பயமுறுத்திய மூத்த சந்ததி இன்று இல்லை. அந்தப்பெத்தாவும் இல்லை. ஆனால், அந்த சாகாவரம் பெற்ற அந்தக் கவிகள் உயிர்வாழ்கின்றன. தொடர்ந்தும் வாழும்.

இயற்கையுடன் இணைந்து மானிடர் ஆத்மாவை வாய்மொழிப்பாடல்களாக வழங்கிய அந்த நாட்டார் கவிதைகளை இன்றைய தலைமுறைக்குச்சொன்னவர் அனார்.

அனார் பற்றி எழுதும்பொழுது எனக்கு கரிசல் இலக்கிய வேந்தர் கி.ரா. (கி.ராஜ நாரயணன்) நினைவுக்கு வருகிறார். அவரும் நாட்டுப்புறக்கதைகளை தொகுத்தவர். நாட்டாரின் சொல்லடைகளை தமது படைப்பிலக்கியத்தில் எழுதியவர். நாட்டார் இலக்கியத்திற்காக தமது அறுபது வயதுக்குப் பின்னர் புதுவை பல்கலைக்கழகத்தில் விருந்தினர் அடிப்படையில் விரிவுரையாற்றச் சென்றவர். இன்றும் என்னால் எனது பாட்டி சொல்லித்தந்த கதைகளை மறக்க முடியவில்லை. அதுபோன்று அனாருக்கும் அந்தப்பெத்தாவே இலக்கிய ஞானாசிரியராக வாழ்ந்திருக்கின்றார். அனார் பற்றி தமிழகக் கவிஞை தமிழச்சி சுமதி தங்கபாண்டியனும் என்னிடம் சொல்லியிருக்கிறார். அவ்வப்பொழுது அனாரின் கவிதைகளை படித்திருக்கின்றேன். ஆனால், நேரில் சந்தித்திருக்கவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழச்சியை சந்தித்தபொழுது அவருடைய சில நூல்களைத்தந்தார். அதில் ஒன்றில் எழுதப்பட்டிருந்த கட்டுரையில், ஈழக்கவி அனார் எனக்குறிப்பிட்டு அனாரின் கவிதையையும் சிலாகித்து குறிப்பிட்டிருந்தார். தமிழச்சி பற்றிய எனது கட்டுரையில் இந்தத்தகவலையும் பதிவு செய்திருக்கின்றேன்.

இந்தத் தகவல் அனாருக்குத் தெரியாது. பெயரளவில் பரஸ்பரம் தெரிந்து கொண்ட நாம் அன்றுதான் முதல் முதலில் சந்தித்தோம். அனாரின் கணவர் என்னையும் நண்பர் நற்குணசிங்கத்தையும் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினார்.

அனார் பற்றி மேலும் சில தகவல்களை இங்கு சொல்வது பொருத்தமானது. 2008 இல் ஒரிசா மாநில அரசு நடத்திய சார்க் நாடுகளைச் சேர்ந்த இளம் கவிஞர்களின் மாநாட்டில் கலந்துகொண்ட ஒரே ஒரு ஈழத்து தமிழ் கவிஞர். இலங்கையில் சாகித்திய விருது, ஜனாதிபதி விருது, கனடா இலக்கியத் தோட்டத்தின் விருது, தமிழ்நாட்டின் விஜய் தொலைக்காட்சியின் இலக்கியத்துறைக்கான ( சிகரம் தொட்ட சாதனைப்பெண்) விருது என்பவற்றை பெற்றவர்.

ஓவியம் வரையாத தூரிகை, எனக்கு கவிதை முகம், உடல் பச்சை வானம், பொடு பொடுத்த மழைத்தூத்தல், பெருங்கடல் போடுகிறேன் என்பவற்றை இலக்கிய உலகிற்கு வரவாக்கியவர். ஊஞ்சல் என்ற கவிதையில் அன்றைய எமது உலகத்தையும் இன்றைய எமது வாழ்வையும் உயிர்த்துடிப்புடன் மீள முடியாத ஏக்கத்துடன் - எங்கள் ஊஞ்சலைத் தவறவிட்டோம் என்று முடிக்கிறார். ஆம், நாம் இழந்துவிட்டது அநேகம்தான்.

அனாரும் அவரது கணவரும் இன்முகத்துடன் இலக்கியம் - சமூகம் - அரசியல் என்று பல்வேறு விடயங்களையும் பேசினார்கள். அந்த இனிய மாலைப்பொழுது எனக்கு இலக்கியப்பயன் தந்தது.

(தொடரும்)



# கட்டிளமைப் பருவ உளநலம் 06

## கட்டிளமைப்பருவ பாலியல்பு நடத்தைகள்

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

எந்தவொரு இனமும் தனது சந்ததியை பெருக்கிக்கொள்ள இனப்பெருக்க செயற்பாட்டை செய்யவே வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் உலகத்தில் இருந்து அவை அழிந்துவிடும். இதுபோலவே மனிதர்களும் அவர்களது சந்ததி நிலைத்திருக்க இனப்பெருக்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். மிருகங்கள் தனியே புதிய வழிந்தோன்றலிற்காக மட்டும் பாலின செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. அவை அதில் ஒரு இரசனையை காண்பதில்லை. அக்காலப் பகுதியில் மட்டும் அவை புணர்ந்து, அதன் பின் அமைதியடைகின்றன. மனித இனம் மட்டும் சந்ததி உருவாக்கத்துடன் உச்ச இன்பத்திற்காகவும் பாலியல்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். எனவே பருவமடைதலை தொடர்ந்து ஆண், பெண் இருவரும் இனவிருத்தி செயற்பாட்டிற்கு மேலாக, இன்பம் அனுபவித்தலிற்காக பாலியல்பு நடவடிக்கைகளில் ஈடுபட விளைகின்றனர்.



### பருவமடைதல்

பாலின செயற்பாடுகளில் ஆரம்பமாக, பருவமடைதல் அமைகிறது. இது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. துணைப்பால் இயல்புகள் தோன்றத் தொடங்கி தமது சந்ததியை உருவாக்கும் திறன் உள்ளவர்களாக வளர்ச்சியடையும் ஒரு தொடரான நீண்டகாலச் செயற்பாடாக பருவமடைதல் அமையப்பெற்றுள்ளது. பெண்களைப் பொறுத்தவரை முதலாவது மாதவிடாய் ஏற்படும் நிகழ்வும், ஆண்களில் விந்துபாயம் வெளியேற்றப்படுதலை பொதுவாக பருவமடைதல் அல்லது பூப்பெய்தல் என குறிப்பிடப்படுகிறது. பெண்களில் முதல் மாதவிடாய் 13 – 14 வயதில் நிகழும், சிலவேளைகளில் இவை ஓரிரண்டு வருடங்கள் முந்தி அல்லது பிந்தி நடைபெறலாம். பருவமடைதலுடன் பெண்களின் உடலமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன.

பருவமாற்றத்துடன் ஆண், பெண் இருபாலாரினதும் பாலியல்பு நாட்டங்கள், துணை தேடுதல், விபரீதமான பாலியல் செயற்பாடுகள், இளவயது கர்ப்பமடைதல் இளவயது திருமணம் போன்ற பல்வேறு விபரீதங்கள் நடைபெறுகின்றன. பருவமடைதல். அதனால் ஏற்படும் உடல், உள மாற்றங்கள் அவர்களின் தேவைகள் அவற்றை கையாள்வது குறித்து பெற்றோர் வகுப்பாசிரியர்கள் தமது பிள்ளைகளுடன் வெளிப்படையாக மனம்திறந்து கதைக்க வேண்டும். கதைத்தால் பிள்ளை செய்து விடும் என்பதெல்லாம். ஆதாரம் அற்ற கருதுகோள்கள் "ஐயம் திரிபற" சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டும்.

### பாலியல் தேவைகள்

மனிதன் பிறந்து இறக்கும் வரை அவனது உயிர் வாழ்விற்கு உணவு. நீர், உடை, "ஓட்சிசன்", உறையுள் என்பன எவ்வாறு தேவைப்படுகின்றதோ அவ்வாறே பாலியல் தேவைகளும் உள்ளன. அத்துடன் அதுவோர் உயிரியல் தேவையாகும். இன, மத, மொழி. சாதி பகுப்பு



வேறுபாடுகள் இன்றி யாவரிலும் கலவி காணப்படுகின்றது. ஆனால் அவரவர் கலாச்சார, பண்பாட்டு, விழுமியங்களின் அடிப்படையில் அவை வேறுபடுகின்றது.

மேற்கத்தைய பெற்றோர் தமது பருவமடைந்த கட்டிளமை வயதினரை அவர்களது வழியிலேயே விட்டுவிடுகின்றனர். துணை தேடுவது, உறவு கொள்வது, தனியாக வாழ்வது என பல செயல்களை கட்டிளமைப் பருவத்தினர் எவ்வித தடைகளும் இன்றி செய்வதற்கு அவர்களிற்கு "சுதந்திரம்" உண்டு. அந்த வயதில் அவ்வாறு துணைதேடாது ஒதுங்கி இருப்பவர்களை பெற்றோராக பாலியல்துறை நிபுணர்களிடம் அழைத்து வந்து அவர்களில் குறைபாடுகள் ஏதும் இருக்கிறதா? என்பதைக் கூட அறிகின்றனர். எமது கலாச்சாரத்தில் இவையாவும் திருமணத்திற்கு பின்னாக அவதானிக்கப்படுவதால் கட்டிளமைப்பருவ செயற்பாடுகள். வேறுவிதமாக அமைகின்றன. அல்லது அவை பரஸ்பர குற்றச் செயலாக கருதப்படுவதால் வீடுகளிலும், பாடசாலைகளிலும், சமூகத்திலும் கட்டிளமைப்பருவத்தினர் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர். பல சந்தர்ப்பங்களில் இவை தற்கொலை மரணங்களாகவும், கொலை முயற்சிகளாகவும் முடிவடைந்துள்ளன.

### சுயபாலின்பம்

கட்டிளமைப்பருவ வயதினரில் அவதானிக்கப்படுகின்ற ஒரு பொதுவான விடயம் சுயபாலின்பம் அனுபவித்தலாகும். ஆண், பெண் இருபாலரும் திருமணத்திற்கு முன்னும், பின்னும் இவ்வாறாக இன்பங்களை காண விளைகின்றனர். அதிகரித்துவரும் "எயிட்ஸ்" பாலியல் நோய்களில் இருபால் உறவு, நோய் காரணிகளை கடத்துவதற்கு பிரதான காரணம் என கண்டறியப்பட்டதால், சுயபாலின்பத்தினூடாக பாலியல் தேவைகளை பாதுகாப்பாக மேற்கொள்ளலாம் என உலக சுகாதார ஸ்தாபனமும் கூறுகின்றது.

எனவே சுயபாலின்பம் அனுபவித்தலை எந்த வகையிலும் ஒரு குற்றமாகவோ, பிழையான நடத்தையாகவோ, பார்க்கத்தேவையில்லை. பொதுவாக "மனச்சோர்வு" நோயுடன் வருகின்ற பல கட்டிளமைப்பருவத்தினரில் அவர்கள் "சுயபாலின்பம்" அனுபவித்ததன் பின்னான குற்றவுணர்வு, தாழ்வுச் சிக்கல்கள் என்பன இனம் காணப்பட்டுள்ளன. இதுவோர் சாதாரண பாலியல் நடத்தை என்பதை பெற்றோர், ஆசிரியர்கள், ஆன்மீக தலைவர்கள், சமூக தலைவர்கள் முதல் அனைவரும் நோக்க வேண்டும். பொதுவாக எல்லோரும் சுயபாலின்பம் அனுபவிக்கிறார்கள் என்பதாக கொள்ளத்தேவையில்லை. சுயபாலின்பம் அனுபவிப்பவர்களில் பொதுவாக "புனைவுக் கனவுகளுடனேயே" அச்செயற்பாடு அமையும். அவ்வாறாக அமைகையில் "கௌரவத்திற்குரிய" வயதில் மூத்தவர்கள் கூட அக்கனவுகளில் வரலாம். இது குறித்துக்கூட குற்றவுணர்வு கொள்ளத்தேவையில்லை. ஏனெனில் அதுவோர் தனிமையை போக்கும் செயல், மற்றைய நேரங்களில், ஏனையவர்களுடன் இருக்கும் போது அந்த எண்ணங்கள் வருவதில்லை.

### இணையத்தில் பாலியல் உறவை தேடும் நபர்கள்

"ஸ்கைப்" வழியாக பாலியல் உறவை தேடும் நபர் தனது நிஜ வாழ்க்கையை விட "ஸ்கைப்" வாழ்க்கையை வாழத்துடிக்கிறார். அது அவரது உண்மை வாழ்க்கையை திசை மாற்றுகின்றது. எல்லோரிடமும் உள்ள "ஸ்மார்ட் போன்", கணனி தொழிநுட்பம் போன்றவை வாழ்க்கையை எளிமையாக்குகின்றன என்றாலும் அவை எவ்வளவு சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றன என்ற மறுபக்கத்தையும் நாம் ஆராய தவறிவிட்டோம். இணைய வழி பாலியல் உறவுகள், பரிமாறிக்கொள்ளப்படும் தகவல்கள், பாதுகாப்பின்மை போன்ற பல விடயங்கள் இன்றும் பேசப்படாது, மறைக்கப்பட்ட பகுதிகளாகவே காணப்படுகின்றன. மேற்படி இணைய வழி பிரச்சினைகள் பற்றி நீண்டகாலம் பேசாமொழியாக இருக்கிற விடயங்களை இயக்குனர் ஜெயபிரகாஷ் ராதாகிருஸ்ணனின் இயக்கத்தில் வெளிவந்த "லென்ஸ்" திரைப்படம் விபரமாகக்காட்டுகின்றது.



### இணைய பாலியல் அடிமை பழக்கத்தில் இருந்து மீளெளல்.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் உங்கள் நண்பரோ, உங்கள் குடும்ப உறுப்பினரோ அல்லது நீங்களோ கூட இணையத்தில் பாலியல் காட்சிகளிற்கு அல்லது பாலியல் உறவுகளுக்கு அடிமைப்பட்டிருந்தால் செய்ய வேண்டியது என்ன? முதலில் வீட்டில் வை-பை வசதியை நிறுத்தி வையுங்கள். தேவையான நேரங்களில் மட்டும் பயன்படுத்தும் சுயகட்டுப்பாடு வரட்டும். "ஸ்மாட்போன்களில்" உள்ள "டேராவை" தேவையான போது மட்டும் பயன்படுத்தி மற்றைய நேரங்களில் நிறுத்தி வையுங்கள்.



மன உறுதியுடன் நிஜவாழ்க்கைக்கான உங்களிற்கு பொருத்தமான உறவை தேடுங்கள். சுயகட்டுப்பாடு மிக முக்கியமானது. பொருத்தமான பொழுதுபோக்குகள், உடற்பயிற்சிகள், நிலையான யோகாசன செய்முறைகள், ஆன்மீக செயற்பாடுகள், சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் நாளாந்த செயற்பாடுகளை பன்முக ஈடுபாட்டுடன் செயற்படுங்கள்.

சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடார்புகளுக்கு : 0771837646



# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

## பெற்றமனம் நோதல் மற்றும் பயம்

சட்டத்தரணி, பாடும் மீன்,
சு.ஸ்ரீகந்தராசா

காதல் வயப்பட்டுவிட்ட பெண்ணொருத்தியின் நிலைமை, அதனை உணர்ந்துகொண்ட பெற்றோரின் கவலை, அக்கறை, அறிவுரை போன்ற விடயங்கள் சம்பந்தமான சில பாடல்கள் இப்பகுதியில் தொகுத்துத் தரப்படுகின்றன.

வயதுக்கு வந்துவிட்ட பெண்பிள்ளை ஏதாவது தப்புத் தண்டாவுக்கு ஆட்பட்டுவிடக் கூடாதே என்கிற கவலை எல்லாத் தாய்மாருக்கும் இருப்பதுண்டு. அந்தக் கவலை ஒரு பயமாகவே மனதில் நிலைகொண்டிருக்கும். நல்லவன் ஒருவனுடைய கையில் பிடித்துக் கொடுக்கும்வரை அந்தப் பயம் நீடிக்கும். கிராமத்தில் வாழ்கின்ற தாய்மாருக்குத் தமது பண்பாட்டின் ஒரு பகுதியாகவே இந்தப் பயம் உள்ளது.

பெண்பிள்ளை வயதுக்கு வந்துவிட்டால் பெற்றவள் மடியிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது போன்ற நினைவோடும், உணர்வோடும் வாழ்வது கிராமத்து மண்ணுக்கேயுரிய தனிக்குணம். அத்துடன் தன்மகளின் கடைக்கண்பார்வை ஒரு காளைமேல் படுகிறது என்று சந்தேகமும் வந்துவிட்டால் கெடுபிடிதான். கைபடாத ரோஜாவாக கல்யாணம் வரை தன் மகள் இருக்கவேண்டும் என்ற கருத்தினை அந்தத் தாய் அறிவுறுத்தும் அழகு இது.

எண்ணங்கவலை புள்ள
எல்லாருக்கும் உள்ளதுதான்
பைய நட கண்டே உன்ர
பால் அமுதம் சிந்திடாமல்

மகளின் மனம் பருவ உணர்ச்சிகளால் அலைபாய்வதை உணர்ந்துகொண்ட தாயானவள் மனதைக் கட்டுப்படுத்தி நடக்கவேண்டும் என்பதை எவ்வளவு நாசூக்காகச் சொல்கிறாள்.

அத்துடன் தங்கள் குடும்ப நிலையை மகளுக்குக் கூறிப் புத்தி சொல்கிறாள் இப்படி-

தோட்டம் துரவுமில்லை
தொகையான காசுமில்லை
சீதனமாய்க் கொடுத்து - மகளே
சீராக மணம் முடிக்க

எனவேதான் நாம் கவனமாக இருக்கவேண்டும் என்பதை உணர்த்தும் தாய், "கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானேவரும்" என்கிற தோரணையில்,

பட்ட மரத்தில் புள்ள



பழமிருந்து என்னசெய்யும்
இலையிருந்து காத்தடிச்சா - கிளி,
எங்கிருந்தும் தங்கவரும்

என்று கூறுகிறாள். இதில் பட்டமரம் என்பது, கெட்டபெயர் வந்துவிட்ட குடும்பத்தைக் குறிக்கிறது. இலைகள் என்கின்ற நற்பெயர் இல்லாமல் போய்விட்டால் பழம் இருந்தும் பயனில்லை. அதனால் நற்பெயரைத் தக்கவைத்து,

குடும்பத்தின் மானத்தைப் பேணி வாழ்ந்தால் நல்வாழ்க்கை கைகூடும் என்னும் அறிவுரையினை நாட்டுப்பாடல் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்கிறது!

வாய்க்காலில் ஓடுகின்ற தண்ணீரை அள்ளி வருவதற்காகக் குடத்தை எடுத்துக் கொண்டு செல்லும் மகளைப் பார்த்து தாயின் அறிவுரை பின்வருமாறு உள்ளது.

தண்ணிக்குப் போ மகளே
தரியாமல் வா மகளே
கன்னங் கரியவனைக்
கண்ணெடுத்தும் பாராதே

தனது மகளில் ஆசைப்பட்டு வட்டமிட்டுத் திரியும் அந்தப் பணக்காரன் தண்ணிக்குப் போகின்ற தன் மகளைக் கண்ணி வைத்துப் பிடித்து விடுவானோ என்கிற பயம் தாய்க்கு.

போறாய் மகளே உனக்குப்
புத்திசொல்லத் தேவையில்ல
ஊரார் மணிக்கோவை
உடைஞ்சுபோனால் வந்திவரும்

இப்படியெல்லாம் சொல்லித் தண்ணீருக்கு அனுப்பிவிட்டுத் தன் வேலைகளில் ஈடுபட்டிருந்த தாய், மகள் வருவதற்குத் தாமதிப்பதை உணர்கிறாள். அவளுக்கு நெஞ்சில் ஒருவித பயம், நினைவில் பதற்றம். சிறிதுநேரத்தில் மகள் வந்து விடுகிறாள். ஆனால் மகளின் தோற்றத்திலே சிறிது மாற்றம். தாய்க்கு வருகிறது சீற்றம். இருந்தாலும் பக்குவமாக விசாரிக்கின்றாள் - அது என்னவென்று.

வார்ந்து முடித்த கொண்டை
மகிழம்பூக் கமழும் கொண்டை
சீர்குலைந்து வேர்வை சிந்தச்
செய்த கடும் வேலையென்ன?

என்றுமில்லாதவாறு இன்று கட்டிய கொண்டை கலைய, காயம் பூ மேனி வியர்த்தொழுக மகள் வருகின்ற கோலம் தாய்க்குச் சஞ்சலத்தை ஏற்படுத்தி விடுகிறது.

பொட்டுக்கரைய
பிறைநெற்றி நீர் துளிக்க
கட்டுத் துகில் கலைய
கழுத்துவடம் புரிபுரள
மார்பு பதைத்ததென்ன?
மலர்க்கண்கள் சுரப்பதென்ன?
சோர்வு கதிப்பதென்ன?
சொல்லிடுகா என்மகளே!

மகள் எதுவுமே சொல்லவில்லை. இடுப்பிலிருந்து தண்ணீர்க் குடத்தை இறக்கி வைத்துவிட்டு, தரையைப் பார்த்தபடி தாவிக்குதித்து வீட்டுக்குள் சென்று கதவைப் பூட்டிக்கொள்கிறாள்.

கனிந்தும் கனியாத நிலையிலிருந்த மகளின் காதல் விவகாரம் பற்றித் தெரிந்தும் தெரியாதிருந்த தாய், இப்போது ஒரு முடிவுக்கே வந்து விடுகிறாள். தடுக்கக்கூடிய கட்டம் தாண்டிவிட்டாலும், தன்மையாக எடுத்துரைத்து வழிக்குக் கொண்டுவர முடியாதா என்றொரு நப்பாசை பெற்றவளுக்கு. அதனால், அவள் காதல் வயப்பட்டிருக்கும் ஆண், அவளுக்குத் தகுதியானவனில்லை என்றும், அவனை

விரும்பும் அளவுக்கு அவளது அறிவு கெட்டுப்போய்விட்டதே என்றும் அந்தத் தாய் கவலைப்படுகிறாள்.

நடுக்கடலில் புன்னைமரம்
நாலுதிக்கும் வேரோடி
பூத்து மலர்ந்ததுபோல் - உன்ர,
புத்தி மங்கிப் போனதென்ன?
வண்டான வண்டிருக்க
வாசமுள்ள வண்டிருக்க
பீயுருட்டி வண்டோட
பேராசை கொண்டதென்ன?

இப்படியும் சொல்லிப் பார்த்து விட்டாள். அப்போதும் பயனில்லை.

இனி, கல்யாணம் வரை வீட்டுக் காவலில் வைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு அவள் வந்து விடுகிறாள். அதனால், இப்படிக் கட்டளையிடுகிறாள்.

கடப்பக்கடந்து நீ
காலெடுத்து வைச்சயெண்டால்
இடுப்பை முறித்து அந்த
இலுப்பையின் கீழ் போட்டிடுவேன்
வாசலைக் கடந்து நீ
வழிகண்டு போனையெண்டால்
வேசிமகளே உன்னை
வெட்டிடுவேன் ரெண்டுதுண்டா

ஆத்திரம் அதிகமாகி விட்டதால் என்ன வார்த்தை சொல்லி ஏசுகிறோம் என்றில்லாமல், தாறுமாறாகப் பேசிவிடுகிறாள் தாய் - தன் மகள் மீது கொண்ட தணியாத அக்கறையால், பாசத்தால்!

(தொடரும்)

# கடுகுக்கதை

## தவறான தார்மீகம்

கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

இரக்க குணம் நிறைந்ததாக காட்டிக் கொள்ளும் பாம்பொன்று சிட்டுக் குருவியொன்றை கவ்விக் கொண்டது.



அந்தக்குருவியை விழுங்கிவிட பாம்பு எண்ணியது. ஆனால் காருண்ய பாம்பு என்று தன்னைச் சொல்லிவிட்டு குருவியை கொடூரமாக கொலை செய்ய அது விரும்பவில்லை.

அந்தக் குருவியை தன் உடலால் மெது மெதுவாகச் சுற்றி படிப்படியாக இறுக்கியது.

தனது தலைவிதியை தானே ஏற்றுக் கொண்டு தன்னை தன்னிடம் அர்ப்பணிப்பதற்கு சிட்டுக் குருவியை இணங்கச் செய்வதற்கு பாம்பு மெல்ல மெல்ல முயற்சி செய்தது.

சிட்டுக் குருவியோ பாம்பினுடைய விருப்பத்திற்கு மறுத்துப் போராடியது. தனது சுதந்திரம், இறையாண்மை, இயலாமை இவைகளை நினைத்து விடாப்பிடியாக பாம்பின் எண்ணத்திற்கு இணங்கவே இல்லை.



பாம்பு சிட்டுக் குருவியை மெதுவாக இறுக்கி இறுக்கி சிறுகச் சிறுகக் கொன்று விழுங்கியது.

பாருங்கள் மற்றப் பாம்புகள் போல் நான் கேவலமானவனில்லை, ஏனைய பாம்புகளிடமிருந்து நான் வேறுபட்டவன். தன்னடக்கத்துடன் பாம்பு கூறிக் கொண்டிருந்தது.

'தவறான தார்மீகம் இட்டுச் செல்லும் தாழ்வில்த்தான்'




# யாரும் எழுதலாம் எழுத்துக்கு எல்லையில்லை

கதைகள் நம் நிலத்தோடும், வாழ்வோடும் பின்னிப் பிணைந்தவை இப்படித்தான் கதைகள் சொல்லப்பட வேண்டும் என்ற எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. கதை சொல்லிகளும் அப்படித்தான்.

மனித சமூகம் தோன்றியதிலிருந்தே ஆயிரமாயிரம் கதைகள் அவர்களிடம் புதைந்து போன வரலாறு நிறையவே உண்டு.

நம் ஆச்சியும் ஆத்தையும் மூத்தோரும் சொன்ன கதைகள் எத்தனை எத்தனை?

நவீன இலக்கிய மோடிமைகள் இன்று கதை சொல்லுதல் பற்றி வரைவிலக்கணங்களை வகுத்துக் கொண்டு, அந்த சட்டகத்துக்குள் வராதவர்களை ஒரு விதமாக கிரேக்க காலத்து சற்றயர் நடையில் பந்த



நூலும் நச்சாதார்க்கினியாரும் தந்து வழி காட்டிய பிதா மகன் வழியில் எழுதுவதும் அதி மேதாவிகளின் ஆற்றாமையின் குரலே.
உலக இலக்கிய வரலாறு நாவல் எழுதியோர் நாடகம் எழுதியதும் நாடக மொழி சார்ந்தோர் நாவல் எழுதியதும் முரண் நகையல்ல.

**பாலசுகுமார் முகநூலில் இருந்து**

சேக்ஸ்பியர் நாடகராக எப்படி கொண்டாடப்படுகிறாரோ, அதற்கு ஒரு படி மேலாகவே ஆங்கிலேயர்களால் காவியக் கவிஞனாகப் போற்றப்படுகிறார்.

இன்னமும் சாண்டில்யனின் கடல் புறாவும், கல்கியின் பொன்னியின் செல்வனும், அகிலனின் சித்திரப் பாவையும், ஜெகசிற்பியனின் நந்திவர்மனின் காதலியும் பேசப்படுகின்றன.

கதை சொல்லிகளை யாரும் இப்படித்தான் எழுத வேண்டும் என்று கட்டளை இட முடியாது. இலக்கிய ஜனநாயகம் மதிக்கப்பட வேண்டும் .

இன்று உலக இலக்கியமும் அதன் போக்கும் மாறி விட்டன. அவுஸ்ரேலிய பழங்குடி மக்களின் கதைகள் பாடல்கள் இலக்கியமாகியுள்ளன.

அவரவர் மொழி நடையொன்று உண்டு அது அவர்களுக்கானது.

ஈழ நவீன தமிழ் இலக்கியம் அது இன்று பன்முகம் கொண்டதாய் ஈழத்திலும் புலம்பெயர் வாழ்விலும் புதிய ஆளுமைகளையும் கதை சொல்லிகளையும் நமக்கு தந்துள்ளது.

கவிதை எழுதுவோர் கதை எழுதுவதும் கதை எழுதுவோர் கவிதை சொல்வதும் நாடகம் சார்ந்தோர் நாவல் புனைவதும் நாவல் எழுதியோர் நாடகம் ஆக்குவதும் வழுவல காலம் தோறும் எல்லாம் மாறும் கதை சொல்லும் முறையும் மாறும். நான் பல்கலைக் கழகத்தில் நாவல் சிறுகதை பற்றிப் படித்தபோது அவை பற்றி இருந்த எண்ணக் கருக்கள், நாற்பது வருடங்கள் கடந்த நிலையில் அதன் மதிப்பீடுகள் மாறியுள்ளன .

யாரும் எழுதலாம் எழுத்துக்கு எல்லையில்லை

## குறுக்கெழுத்துப்போட்டி இல:–07

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | 4 |
| | ■ | ■ | | ■ | ■ | |
| 5 | | | | 6 | ■ | |
| | ■ | ■ | 7 | | 8 | |
| ■ | 9 | | | ■ | | ■ |
| 10 | | ■ | ■ | 11 | | |
| | ■ | 12 | | | | ■ |

**இடமிருந்து வலம்:**
01. இதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதுதான் சிறப்பு.
03. கவிஞர்களுக்கு பெருமை சேர்ப்பது.
05. குருதி குழம்பி விட்டது.
07. அஞ்சல்.
09. ஓரளவு.
10. சரம்.
11. விவசாயம்.
12. குளம் குழம்பி விட்டது.

**மேலிருந்து கீழ்:**
01. இராமருக்குதவிய படை.
02. படிக்கும் நூல்.
04. காந்தியின் ஆயுதங்களில் ஒன்று.
06. இதுவும் மின்னலும் ஒன்றாகத்தான் வரும்.
08. இது தலை காக்குமாம்.
09. சூரியன் உதிக்கும் பொழுது.
10. காளை
11. ஆடு

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 21.06.2018க்கு முன்னர் அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–02 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 க | ற் | 2 க | ண் | டு | ■ | 3 எ |
| ரு | ■ | ற் | ■ | ■ | 4 வி | ழி |
| ம் | ■ | 5 பூ | 6 ச | ம் | ■ | ல் |
| 7 பு | 8 ண | ர | மை | ப் | 9 பு | ■ |
| ■ | 10 க | ம் | ■ | ■ | டை | 11 க |
| 12 தே | ன் | ■ | 13 த | மை | ய | ன் |
| 14 வி | வ | சா | யி | ■ | 15 ன் | று |

**சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:–**

01. ஆர். துஷ்யந்தி (றொசைறோ லேன்)
02. க.புண்ணியநேசன் (காரைதீவு–05)
03. ஆ. பிறஸ்ரீடா (முனைத் தெரு)

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

## 32 கழகங்கள் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டியில் இக்னேசியஸ் விளையாட்டுகழக அணி வெற்றி



மட்டக்களப்பு இருதாயபுரம் ஈஸ்டன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அந்தக் கழகத்தின் 11வது ஆண்டு நிறைவினை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட உதைப்பந்தாட்ட கழகங்களில் பதிவு செய்யப்பட 32 கழகங்களுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட நொக்கவுட் முறையில் நடத்தப்பட்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிபோட்டி நேற்று பிற்பகல் மட்டக்களப்பு இருதயபுரம் ஈஸ்டன் ஸ்டார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஈஸ்டன் ஸ்டார் விளையாட்டு கழகத் தலைவர் வி.ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கால் பந்தாட்ட சம்மேளன செயலாளர் டி .காந்தன், மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட சங்க சுற்றுப்போட்டி குழு தலைவர் பி. மேவின், மாநகர சபை உறுப்பினர்களான எஸ். பூபாலராஜா , கே.தவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நொக்கவுட் முறையில் நடத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதி போட்டிக்கு தெரிவான மட்டக்களப்பு கல்லடி டச்பார் இக்னேசியஸ் விளையாட்டு கழக அணியினரும் மட்டக்களப்பு கல்லடி - நாவலடி கோல்ட் பிஷ் விளையாட்டு கழக அணியினரும் மோதிக்கொண்டன.

இக்னேசியஸ் அணி மூன்றுக்கு பூஜ்யம் (3-0) என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று .ஈஸ்டன் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் 11வது ஆண்டு வெற்றிக்கிண்ணத்தை சுவிகரித்துக்கொண்டது.



## 'பல் கலைக் கழகம்' கேள்விகளுக்குப் பதில்களை யார் சொல்வது?

தொடர்ச்சி...

என்று அவர்களால் சுட்டிக் காட்டப்படும் இலங்கை அரசின் பாதுகாப்புப்



படையின் உதவியுடன் தொடர்ந்து கொண்டிருப்பார்கள்.

அதற்காக அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் யாரையும் எதையும் பாவிக்கத் தயங்க மாட்டார்கள். இன்று அவர்களின் பகடைக்காய்களாக மாறிவிட்டிருப்பவர்கள் அப்பாவிப் பொது மக்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் என்று பேசிக்கொள்கிறார்கள்..

யூதர்களில் உள்ள இனவாதத்தால், ஹிட்லர் தனது வெறிபிடித்த கொள்கையால் தனது மக்களைத் தவறாக வழிநடத்தியதால் அதன் நீட்சியாக, இரண்டாம் உலகப்போர் வந்து உலகம் பல மோசமான அழிவுகளை முகம் கொடுக்க நேரிட்டது. கடைசியாக ஹிட்லரும் அழிந்து அவனின் நாடும் சிதைந்தது. அவனது மிகப் பெரும் பலமாக இருந்தவர்கள் மாணவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இன்று, பலநாடுகளில் பணபலத்தால் படடோபமாக வாழும் சில புலம் பெயர் தமிழர்கள், "தமிழர்" பெயர் சொல்லி மேடையேறவும், பிரமுகர்களாக வலம் வரவும் அப்பாவி இலங்கைத் தமிழர்களைப் பணயம் வைத்து விளையாடுவதை இலங்கைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளுங்கள்.

சில புலம் பெயர் தமிழர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு உயர்படிப்பை வழங்கிக்கொண்டு, தாய்நாட்டில் வளரும் இளமனங்களில் விஷவிருட்சத்தை வளர்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

புலம் பெயர் தமிழர்கள் இலங்கை வாழ் தமிழ் மக்களில் உண்மையான அக்கறை வைத்தால், சிதைந்துபோன இலங்கைத் தமிழரின் வாழ்வாதாரத்தை மேன்படுத்தவும், கல்வித்துறையில் மற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஈடாகப் போட்டிபோட்டு உலகதரத்தில் பெருமைபெற முடியும். ஆனால் சுயநலம் பிடித்த இலங்கைத் தமிழ்த் தலைவர்களும், மற்றவர்கள் துன்பத்தில் மகிழ்ச்சி காணும் சில புலம் பெயர் ; சாடிஸ்ட்" தமிழர்களும் சட்டென்று உணர்ச்சி வயப்படும் இளவயதினரைத் தங்கள் தேவைகளுக்குப் பாவித்து விட்டுத் தூக்கியெறிவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, மாணவர்களே தயவு செய்து உங்கள் பல்கலைக்கழகத்தின் பாராட்டுக்குரிய பழைய சரித்திரத்தை ஒரு தரம் புரட்டிப் பாருங்கள். இலங்கையில் முற்போக்குத் தமிழ் சிங்கள மாணவர்கள், அமெரிக்க- வியட்நாம் போருக்கும் யாழ்ப்பாணத்தில் சாதிக் கொடுமைக்கும் குரல் எழுப்பிய அதே காலகட்டத்தில்,1968ம் ஆண்டு பாரிசில் நடந்த மாணவர்களின் புரட்சியால் நடந்த பல முன்போக்கான மாற்றங்களைப் படியுங்கள்.

உங்களின் கல்விப் பலம் மகத்தானது. இளம் வயதுச் சிந்தனை சக்தி மிகப் பிரமாண்டமானது. வளரும் வயதின் அறிவு ஆழம் தெரியாத கடல்போல் மிக மிக ஆழமானது,மனதை நெருடும் தென்றலைப்போல் தெளிவிய கருத்துக்களை உங்கள் இளம் மனதில் தாலாட்டக்கூடியது.
தங்கள் சுயநலத்தை முன்னெடுக்கும் அரசியல்வாதிகளுக்காக உங்களின் அபரிமிதமான ஆளுமையை மாசுபடுத்தாதிர்கள். அவர்களுக்காக ஒத்துப்பாடும் குறுகிய அறிவுள்ள ஊடகங்களின் பதிவுகளை "பல் கலைக் கழக மாணவர்கள்" என்ற பார்வையில் பன்முகத்துடன் அலசிப்பாருங்கள்.

"பல் கலைக் கழக" மாணவர்கள் எதிர்காலத்தின் சமூகக் காவலர்கள், சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள். அரசியல் வாதிகள்,ஆளுமையைக் கையிலெடுக்கப் போகிறவர்கள். உங்களின் கையில் பாடப்புத்தங்களையும் கருத்தில் மனித தர்மத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் எதிர்காலக் கருவிகளாகப் பாவிக்கப் பழகுங்கள். இடறுவது தற்செயல்,ஏறுவது முயற்சி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எங்கள் சமுதாயத்தை முன்னேற்ற உங்கள் பணிகள் இன்றியமையாதது.இரண்டாம் உலக யுத்தத்தால் சேதமடைந்த ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் தலைநிமிர அந்நாட்டு அரசியல்வாதிகள் மக்களை எந்தவித பேதமுமின்றி ஒன்று சேர்த்து உழைத்தார்கள். ஒரு சொற்ப கால கட்டத்தில்; அவ்விருநாடுகளும்,தொழில் உற்பத்தி,விஞ்ஞான விருத்திகளில் அபரிமிதமாக முன்னேறியதை நீங்கள் படித்திருப்பீர்கள்.

இலங்கைத் தமிழர்களை ஒன்று சேர்த்து எதிர்கால வளர்ச்சிக்கு அத்திவாரம்போடுவது இளம் தலைமுறையினர் கைகளிற்தானிருக்கிறது. அதை மறந்துவிட்டு,சாதி,மத. பிராந்திய,இன வெறியுடன் பொதுக்கடமைகளில் ஈடுபடுவது மாணவ வாழ்க்கையின் ஆக்க நோக்கைச் சீரழிக்கும். வெற்று வார்த்தைகள் எதையும் கட்டியமைக்கப் போவதில்லை.

பொருளாதாரத்தில்,கல்வியில், மனிதநேயக் கருத்துக்களில் வளர்ந்த மேற்கு நாடுகளில், தனி மனித திறமைக்கு மதிப்புண்டு. தேசியத்தின் வளர்ச்சிக்கு அது உதவுகிறது.வளர்ந்த நாடுகளின் சரித்திரத்தை ஒருதரம் புரட்டிப் பாருங்கள். மக்களின் ஒட்டுமொத்த ஒற்றுமை என்பது அவர்கள் வாழும் சமுதாயத்தின் வலிமையின் அடிப்படைத் தளமாகும். தமிழர்களின் பல்வேறுபட்ட திறமைகளை ஒன்றிணைத்து ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் இளம் மாணவர்களை குறுகிய வழிகாட்டித் தங்கள் தேவைகளுக்குப் பாவிக்கும் அரசியல் சூத்திரங்களுக்கு அடிபணிவது வலிமையற்ற மனவளர்ச்சியின் பிரதிபலிப்பாகும்.

## மாட்டிறைச்சிக்கு தடை கோருவது ஒரு பாசிச நடவடிக்கையே

தொடர்ச்சி...




பிடுங்கி எடுக்கிறது. இதையிட்ட விமர்சனங்களும் கண்டனங்களும் எதிர்ப்புகளுமே இன்று நமக்கு முக்கியம். உணவும் உடையும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட தெரிவுக்கும் தேர்வுக்கும் உரியது. அவர்களுடைய ருஸி, அவரவருக்கான ரசனை என்பதெல்லாம் தனிப்பட்ட சுதந்திரம். அதிலே எவரும் தலையிடுவதற்கான அதிகாரம் கிடையாது. மரபுசார் உணவு, பண்பாடுசார்ந்த தெரிவு என்பவை வலியுறுத்தப்படுகின்றன என்றால், அவை அந்தச் சூழலோடு இயைந்து வாழ்தலை அடிப்படையாகக் கொண்டது. நிபந்தனையாக அல்ல. நிபந்தனையாக ஒன்றை யாரும் விதிக்க முற்படும்போது அது ஏனையவர்களின் சுதந்திரத்துக்கும் உரிமைக்கும் எதிரானதாக மாறுகிறது. இது பாசிசம். மற்றமைகளை நிராகரித்தல் பாசிசம் அன்றி வேறென்ன? இந்துப்பண்பாட்டையும் சைவ சமயத்தையும் பேண முற்படுகிறவர்களுக்கு ஒரு தெரிவு இருக்குமாக இருந்தால், அதே மாதிரியான வேறு வகையான தெரிவுகள் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இருக்குமே. அதிலே நாம் எப்படிக் கையை வைக்க முடியும்? இதனால்தான் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் கடுமையான கோபத்துக்குள்ளாக்கியுள்ளது இந்தப் போராட்டம்.
உண்மையில் மாட்டிறைச்சியைச் சாப்பிடுவதை மருத்துவர்களே ஊக்கப்படுத்தி வந்திருக்கிறார்கள். மாட்டு ஈரல் நோயாளிகளுக்கான பிரதான உணவாகச் சிபாரிசு செய்யப்படுகிறது. மாட்டிறைச்சிக் கடைகள் சட்டபூர்வமாக பல ஆண்டுகளாக நடத்தப்படுகின்றன. மாடடிக்கும் இடங்கள் என்ற கொல்களங்களும் சட்டபூர்வமானவையே. இப்பொழுது மாடு வளர்ப்பு என்பது இறைச்சிக்கும் பாலுக்கும் என்ற அளவில் சுருங்கி விட்டது. அல்லது அப்படி மாறியுள்ளது. முன்பு மாடு வளர்ப்பு என்பது பால் எடுக்கவும் எருவைப் பெறவும் வண்டியிழுக்கவும் உழவுக்கும் என்று பன்முகப்பட்டிருந்தது. வீடு மெழுகுவதற்கே மாட்டுச் சாணம் தேவைப்பட்டது. கால மாற்றம் மாட்டின் பயன்பாட்டைச் சுருக்கியுள்ளது.
இந்த நிலையில் இறைச்சிக்கு மாடு விற்கக் கூடாது, வெட்டக் கூடாது என்ற நிலைப்பாடு மாடு வளர்ப்பையே இல்லாததாக்கி விடும். இது சமூகப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிப்பது மட்டுமல்ல, மரபுசார் தொழில் ஒன்றையும் இல்லாததாக்கும் முயற்சியாகும். கால்நடை வளர்ப்பு என்பது பல் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது. இதையே வரலாற்றுக் காலம் தொடக்கம் மனித இனம் பின்பற்றி வருகிறது. இதில் நாம் இடைமறுப்புகளைச் செய்வது நியாமற்றது.

மாட்டைப் புனித உருவாகக் கொள்வோர் அதைச் செய்யலாம். ஆனால் அதை ஏனையவர்களின் மீது ஏற்றிவிடுவது தவறு. இந்த இடத்தில் "எனக்கும் தமிழ் மேல் பற்றுத்தான். ஆனால், அதை இன்னொருவர் மேல் ஏற்றி விட மாட்டேன்" என்ற ஞானக்கூத்தனின் கவிதையே நினைவில் வருகிறது. யாரும் யாருக்கும் நிபந்தனைகளை விதிக்கவும் வேண்டாம். யாரும் யார் மீதும் சவாரி செய்ய முற்படவும் தேவையில்லை. மேலாண்மை வாதமே இலங்கை என்ற அழகான நாட்டை அழித்தது. அமைதியைச் சிதைத்து துயரத்தில் மூழ்கடித்தது. கடலால் சூழப்பட்ட தீவு இரத்த வெள்ளத்தில் மூழ்கியதும் இந்த மேலாண்மை வாதத்தினாலேயே. இதனால்தான் இன்று – யுத்தத்திற்குப் பிறகு பொறுப்புக் கூறலும் நல்லெண்ணமும் புரிந்துணர்வும் அவசியம் என்றுரைக்கப்படுகிறது. என்றுணர்த்தப்படுகிறது.


இந்த நிலையில் இன்னொரு மேலாதிக்கவாதமா?

## மட்டக்களப்பில் புதிய கட்சி

தொடர்ச்சி...

காணக்கூடிய அரசியல் வழிநடத்தல்கள் இல்லாத குறை நீண்ட காலமாக நிலவி வருகின்றது.

சமகாலத்தில் அவசியமும் அவசரமுமான இத்தேவையைக் கருத்திற் கொண்டு எழுந்த சிந்தனையொட்டத்தின் அடிப்படையிலும் மக்களின் ஆதங்கத்தின் அடிப்படையிலும் புதிய போக்கில் சிந்தித்து செயற்படக் கூடிய மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் கட்சியொன்றின் தேவை உணரப்பட்டுள்ளது. அதன் காரணமாக புத்தாக்கம் மிக்க புதிய அரசியல் கட்சியாக எமது தலைமுறைக் கட்சி எனும் பெயரில் இக்கட்சி ஆரம்பிக்கப்படுகிறது என்றார்.


Play with fashion
KAMSINS
THE DESIGNER COLLECTION
Follow us : kamsinsfashion
Ladies: Sarees, Salwar,Choli, Kurthis,Jewelry,ect... Men's: Kurthas, Suits, Shirts, Trousers, Shoes,ect... Kid's: Kurthas, Suits,Shirts,Salwar,Choli, Trousers,ect...
181, Galle Road, Colombo 06.
22/1, W.A.Silva Mawatha, Colombo 06.
+94 11 236 2334
+ 94 11 236 2335
info@kamsinsfasion.com
www.kamsinsfashion.com


ஒவ்வொரு தருணத்தையும்
விழாக்காலமாக மாற்றுங்கள் ...
LAC
Little Asia
WELLAWATTE / PETTAH
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098
| F: +94 11 2506934 E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745
E: info@littleasiasilk.com | www.littleasiasilk.com | Skype: little.asia.silk


PUSHPA CONSTRUCTION
கட்டிடநிர்மான சேவைகள் ஒரே கூரையின் கீழ் (All Services are under the one roof)
077 990 1403
Pushpa Home Designer & Builder
23,Pumping Station Road,
Palameenmadu,Batticaloa


Manufacturers & Sellers of
All Kind of Gem & Jewellery
SUN GEM & JEWELLERY (pvt) Ltd.
Gold Centre, Shop No. 84, 180, N H M Abdhul Carder Mw, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2330664, +94 11 2330663 Fax : +94 11 2322204 Email : sungempvt@gmail.com